அ

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வேலூர் ஐயா எனும்
அருட்திரு யோகானந்த சாமிகள்
வாழ்வியல் சுருக்கம்

ஆக்கியோன்

வள்ளலடியான் சு. முத்துமாணிக்கம்

வேலூர் ஐயா எனும்

அருட்திரு யோகானந்த சாமிகள்

வாழ்வியல் சுருக்கம்

வள்ளலடியான் சு. முத்துமாணிக்கம்

© உரிமை பதிவு பெற்றது

முதல் பதிப்பு : 2007

மறுபதிப்பு : 2026 (திருத்தமும் விரிவும் செய்யப்பட்டது.)

அருட்திரு யோகானந்த சுவாமிகள்

அருட்திரு யோகானந்த சுவாமிகள் சமாதி, வேலூர்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அருட்திரு யோகானந்த சுவாமிகள்

உலக உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவர் திருவருளால் திருவருட் பிரகாச வள்ளலார் அருளிய சமரச சுத்த சன்மார்க்க நெறியையே தம் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து இந்நெறி உலகம் எங்கும் பரவ பேராவல் கொண்டு தமக்கு திருவருளால் விளங்கிய அனுபவங்களை வடலூர் அடுத்த மேட்டுக்குப்பம் கிராமத்தில் ஒளிர்ந்தோங்கும் சத்தியஞானதீப திருமாளிகையின் முன் சாட்சியாக 1. ஜோதித்தம்பம் 2. உண்மை விளக்கம் 3. திருவருட்பா பொறித்த கல்வெட்டுகள் பொதிந்த எழிலோவிய திருஅருட்பா மணி மண்டபம் மேலும் மாயையில் மயங்கி மீளாத்துயரிலும் மரணத்திலும் உழலும் மக்கள் முன்னிலையில் திருவருட் பிரகாச வள்ளலார் 30.01.1874 அன்று இரவு 12 மணி அளவில் மரணமிலாப் பெருவாழ்வு என்னும் முத்தேக சித்தி (அன்புருவம், அருளுருவம், இன்புருவம்) பெற்று திருக் காப்பிட்டுக் கொண்டு அருட்பெருஞ்ஜோதியராய் திகழும் அற்புத நிகழ்வைப் போற்றி நினைவுகூறும் வண்ணம் 4. தமிழ்மணி ஒலி மண்டபம் மற்றும் பசித்தோர்க்கு உணவளிக்க 5. அறக்கூழ்ச்சாலை ஆகியவற்றை அமைத்து அன்பர்களுக்கு மெய்ஞ்ஞான விருப்பம் அருளிய ஆன்றவிந்தடங்கிய ஆன்றோர் அருள்திரு யோகானந்த சுவாமிகள் இத்திருவிடத்தின்கண் அருள்ஞான மோனநிலையில் விளங்குகிறார் என அறியவும்.

தோற்றம் : 27.10.1919 **அருள்ஞான மோனநிலை : 11.01.2001**

ஜோதித்தம்பம், சித்திவளாகம்

தமிழ்மணி மண்டபம் & திருவருட்பா மணிமண்டபம், சித்திவளாகம்

திருவருட்பா மணிமண்டபம் உட்புறம், சித்திவளாகம்

அருட்திரு யோகானந்த சுவாமிகள் வாழ்ந்த அறை, வேலூர்

அருட்பெருஞ்ஜோதி அ அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வேலூர் ஐயா எனும்
அருட்திரு யோகானந்த சாமிகள்
வாழ்வியல் சுருக்கம்

முன்னுரை

'வேடத்துளா னலன்' என்னும் திருமந்திர மொழிக்கேற்ப வேடமின்றித் துறவியாகத் தன் தேவைக்குப் பிறர் கையை எதிர்நோக்காது தானே தொழில்செய்து வாழ்ந்தும் பிறருக்கு உபகரித்தும் தம்மை நாடி வருபவர்களுக்கு அவரவர் பக்குவத்திற்கேற்ப நல்லுரைகள் கூறி வழிகாட்டியும் தெய்வத் திருப்பணி செய்தும் துறவு நெறிக்கே ஒரு புதிய வழி வகுத்துக் காட்டியும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாது 'தன்னை யறிந்தவன் தன்னை மறைப்பன்' என்னும் மந்திர மொழிக் கொப்பாக வேலூர் நகரில் ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் உறைந்த ஒரு பெரியாரின் வாழ்வியல் சுருக்கமே இந்நூல்.

சோழநாடு சோறுடைத்து என்னும் வரலாற்று பெருமைமிக்க தஞ்சை மாவட்டத்தில் இராஜ மன்னார்கோயில் என்றும் இராஜ மன்னார்குடியென்றும் வழங்கப்பெறும் தலத்தில் சுவாமிகள் 1919 ஆம் ஆண்டு ஐப்பசி திங்களில் பிறந்து தமது ஆறாவது வயதில் பிற பிள்ளைகள் பள்ளிச்செல்வதைக் கண்ணுற்று தானே பள்ளி சென்றும் ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் பயின்று ஏட்டுக்கல்வியில் நாட்டங்குறைந்து தொழில் நாட்டம் எழ, பள்ளிப்படிப்பை விட்டு தானே ஒரு

அச்சுக்கூடத்தில் சேர்ந்தார். அத்தொழிலில் அடிநிலை யிலிருந்து முடிநிலை வரை உயர்ந்தும் பின் அரிசி ஆலை எந்திரம் (அக்காலத்தில் மிகப் பெரிய சக்கரங்கொண்டது) இயக்கல், எந்திரம் பழுது பார்த்தல். ஓவியக்கலை, பழுதுபட்ட மோட்டார். கார் முதலியவற்றின் வடிவமைப்பினை சரிசெய்து (டிங்கர் வேலை) வண்ணமடித்து மெருகூட்டுதல் முதலான பல தொழில்கள் செய்தும் அவற்றுள் ஒவ்வொன்றிலும் ஒரு தனித் தன்மை பதித்தும் விளங்கினார்.

படித்துவந்த சிறுவயதிலேயே மற்போர், சிலம்பம் முதலான விளையாட்டுகளிலும்,முதிர்ந்தோர்க்கு உதவி செய்தல், தருமச் சிந்தனை, தெய்வ நாட்டம் முதலிய பண்புகளிலும் சிறந்து விளங்கினார்.

குழந்தையிலேயே இவரது சிற்றப்பாவிடம் இவர் தத்துக் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி, முற்பிறவியிலேயே இவர் துறவியாகி வாழ்ந்து ‘விட்டது தொடரும்’ என்னும் மொழிக்கொப்ப இப்பிறவி யிலும் துறவியாக வாழப்போவதை குறியாமல் குறித்ததோ! பின்னாளில் ஈன்ற தந்தை, தாய் உயிர் நீத்தச் சேதியறிந்தும் சென்று காணாதது பற்றற்றப் பாங்கினைக் குறிப்பதோ!

மேலும் தொழிலை நாடி 17ஆம் வயதில் சிற்றப்பா உதவியோடு சென்னை சென்று ஓவியக்கலைத் தொழிலில் ஈடுபட்டும் ஊழோ! யாதோ! அத்தொழிலை தொடர முடியாமல் மலைச்சாலையில் (Mount Road) அமைந்திருந்த ‘பெஸ்ட் கம்பெனி‘ என்னும் நிறுவனத்தில் சேர்ந்து பணி செய்து வந்தார். ஒரு நாளிரவு அந்நிறுவனத்தின் மொட்டை மாடியில் நின்று வானத்தை யுற்று நோக்கிப் படைப்பின் அற்புதக் காட்சிகளை வியந்து இறைவனின் தனிப்பேராற்றலில் உளம் நெகிழ்ந்து தன்னை மறந்த நிலையில் பூர்வ பிறப்பின் ஓர் இலட்சிய உணர்வு உருவாகியுள்ளது. அதை இந்நூலில் காணலாம்.

'தேட்ட மிகு சென்னை' யென வள்ளல் பெருமானால் குறிக்கப்பட்டச் சென்னையில் இருக்க விருப்பம் குறைந்திருந்த நிலையில் வேலூரில் மோட்டார் தொழில் நடத்தி வந்த ஒருவர் அழைக்க வேலூர் வந்து அவரது தொழிற்கூடத்தில் சில காலம் பணியாற்றி, பின்னர் சுயமாகத் தொழில் தொடங்கிச் செய்து வந்தார். இயற்கையிலேயே எத்தொழிலிலும் தனித்தன்மைப் பெற்றிருந்த அவரது தொழில் ஓங்கியது வியப்பன்று. எனினும் அவரது துறவுள்ளம் 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' யெனும் மறை மொழியில் தோய்ந்திருந்ததாலும் தெய்வப் பேறே தனது இலட்சியமாகக் கொண்டிருந்ததாலும் பெரிய தொழிற்சாலையாக உருவெடுக்க வாய்ப்புத் தேடிவந்தும் ஏற்காமல் ஓரளவோடு தொழிலைச் செய்து கொண்டும் திருப் பணி செய்து கொண்டும் வாழ்ந்து வந்தார். 'தன்னை யறிந்த வன் தன்னை மறைப்பன்' என்னும் மறை மொழிப்படி தமது திருப்பணி எதிலும் தன்னை காட்டிக் கொள்ளாது மறைத்து பொதுமைப்படுத்தியுள்ளது அவரது தெய்வீக உணர்வைக் காட்டுகிறது.

இப்பிரபஞ்சமும், உயிர் வாழ்க்கையும் மூலமாம் மெய்ப் பொருளையறிந்து அடைவதற்கே உயிர்களுக்கு உபகாரமாக வழங்கப்பட்டச் சாதனமேயன்றி இவையே மூலமும் முதலும் நித்தியமுமாகா என்பது இப்பெரியாரின் மிகத் தெளிவான அழுத்தமான கோட்பாடு.

ஒருவன் நன்முயற்சியோடு நூறாண்டுகள் வாழ்ந்து இறுதியில் தான் பெற்றுள்ள உயர்வினையெண்ணிப் பார்க்கின் புறத்தால் உயர்வு தாழ்வுகள் எவ்வளவோ நிகழ்ந்திருப்பினும் அகத்தால் அடைந்த உயர்வு கடுகளவே யென்பது உணரப் படும் என்றும் அகத்தால் ஒருவன் உயர்வடைதல் மிகக்கடினம் என்றும் அயராது பாடுபட்டே அதனை அடைதல் கூடுமென்றும் விளக்குவார்.

நூதன விவேகியுள்ளம் நுழையாது நுழையுமாகின்
பூத ஜென்மங்கள் கோடி புனிதராம் புருடராமே

என்னும் கைவல்ய பாடல் இதற்கோர் எடுத்துக்காட்டாம்.

எவனொருவனுக்கு இந்த மாயா உலக, தேக, போக வாழ்வு கசக்கின்றதோ அவனே ஞானப் பாதையில் முதலடி எடுத்து வைக்கத் தகுதியுடையவன்; அவனே ஞான குருவைத் தேடியலைபவன்; மற்றவனுக்கு எத்துணை ஞான விளக்கங்கள் இலவசமாக வழங்கப் படினும் கருங்கற் பாறையின் மீது விதைத்த வித்துக்கே ஒப்பாவான் என்பது இப்பெரியாரின் அற்புத அனுபவ வாக்காம்.

ஞானத்தை நாடித் தேடி வருவோனுக்கு அளிப்பதே ஞான மாகும். அல்லாத ஒருவனை நாடித் தேடிப்போய் அளிப்பது ஞானமாகா; அது அஞ்ஞானமே யாகும்; வணிகம் நடக்கு மென்பார்.

இவ்வாறு அவ்வப்போது உதிரும் மாணிக்கச் சொற்கள் எவ்வளவோ, விரியுமென அஞ்சி விடப்பட்டன. அவரது அருளுரையில் அம்மாணிக்கச் சொற்களை காணலாம்.

பொதுவாக இவ்வுலகமறிந்த துறவு, குடும்பமின்றித் தனித்து காவியுடைத் தரித்து மடம் அல்லது சத்திரம் சாவடிகளில் தங்கி உணவு மற்றும் உடைக்குப் பிறர்கையை எதிர்நோக்கி தெய்வத்தை நாடி வாழ்தல் என்பதாம். துறவிகள் தொழில் செய்யார், செய்யக் கூடாது யென்பதும் விதியாகக் கருதப்படுகிறது. ஆயினும் இப் பெரியார் ‘தொழில்‘ என்னும் சொல்லை தொழு+இல் எனப் பிரித்து தொழுகின்ற யில்லமே தொழில், அதில்தான் வாழ்வும், வளமும், அறமும், உயர்வும், தெய்வப்பேறுமுண்டு. ஏட்டுக்கல்வியும் சடங்குகளும், விதியும் வேடமும் ஒரு துணையேயன்றி அதுவே துறவின் உண்மை சின்னமாகாவென விளக்கி துறவுநெறிக்கே புதிய இலக்கணம்

படைத்து வாழ்ந்தும் காட்டினார். 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே என்னும் மறைமொழிக்குச் சான்றாக விளங்கினார்.

ஏட்டால், வாக்கால் வெளிப்படும் நெறிமுறைகளைக் காட்டினும் செயலால், நடத்தையால், வாழ்வால் காட்டும் நெறிமுறைகள் மாந்தரை ஈர்த்து அவ்வழியை மேற்கொள்ள உதவும் வன்மை படைத்ததாம்.

இவரது வாழ்வியல் குறிப்புகள் அனைத்தும் அவ்வப் போது சூழ்நிலைக்கேற்ப அவர் வாக்கால் வெளிப்பட்டவையே. பின்னாளில் இவரது வாழ்க்கை, தெய்வகதியை நோக்கிச் செல்ல விழை வோர்க்கு விளக்காக, வழிகாட்டியாக உதவும் என்னும் சிறியேன் உள்ளத்தே எழுந்த வேட்கையே இந்நூலாக உருவாகியது. அதனால் வாக்கால் வெளிப் பட்டவைகளையும் பிற்காலத்து ஐயா தொடர்பு கிடைக்கப்பெற்ற பின்னர் நிகழ்ந்தவைகளையும் நினைவு கூர்ந்து கூர்ந்து, எழுதி எழுதி தொகுத்து உருவாக்கியது இந்நூல். இத்தன்மையால் காலம், இடம், நிகழ்வு இவைகள் நிரலாக யில்லாது முன்பின் நேர்ந்திருக்கவும் இட முண்டு. கூறியதை கூறல், கூறாமல் விடுதல் மற்றும் இலக்கண வழுவும் விரவியிருக்கலாம். பெரியோர்கள் பொறுத்தருளி இந்நூலின் நோக்கினையேற்பர் என நம்புகிறேன்.

மேலை நாட்டார் வரலாற்றுக் கூற்றுப்படி ஒருவரின் தனி வாழ்வை சாதனையை வெளிப்படுத்தும் புகழ் நோக்கம் கொண்டதல்ல இந்நூல். அதனால் மலிந்து கிடக்கும் வரலாற்று நூல்களிலே இதுவுமொன்று யென யெண்ணி நழுவ விடாது கற்றுணரின் அதன் பயனால் உள்ளத்தூறும் மாற்றத்தினை அனுபவத்தில் கண்டின்புற, உயர உதவும்.

அன்பன்,

வள்ளலடியான் **சு.முத்துமாணிக்கம்**

அ

வேலூர் ஐயா எனும்

அருட்திரு யோகானந்த சாமிகள் வாழ்வியல் சுருக்கம்

தலச்சிறப்பு

தொன்மை காலத்தே, தற்போது தோற்றமளிக்கும் இப் பூவுலகத்தின் தென்பகுதி,தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, தென் இந்தியா, ஆஸ்திரேலியா இவைகளுக்கு இடையேயுள்ள கடல் பகுதியாவும் தொடர்ந்த ஒரு பெரும் நிலப்பரப்பாக இருந்ததென்றும் அந்நிலப்பரப்பினை எல்மூரியா கண்டம் என்றும் நாவலந்தீவு என்றும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எல்மூரியா கண்டம் (பகல் பொழுது மிகுந்த இடம்) என்பது லெமூரியா கண்டம் என மருவி வழங்கப்பட்டு வருவதாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் தமிழ் மொழியும் சிவ நெறியும் உலகெங்கும் வழங்கி வந்தன என்கிற வரலாற்று உண்மையின் அடிப்படையில் தமிழ்மொழி மரபின் வழி எல்மூரியா என்பதே வழக்காகும். மேலும் 'நா' கோடாமை கோடியுறும் என்னும் ஔவை அம்மையின் வாக்குப்படியும் கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை என்னும் மொழிக்கு ஏற்பவும் சொல் தவறா நாவண்மைமிக்கோர் வாழும் இடம் என்னும் சிறப்பு கருதியே நாவலந்தீவு எனவும் வழங்கப் பட்டுள்ளது. தவிர பரத கண்டம் என்னும் சொல் வழக்கும் உண்டு. அதாவது பரத்தை இகத்தே கொண்டு வாழும் மக்கள் உறையும் இடம் என்னும் பொருள் உடைத்தாம்.

அந்நிலப் பரப்பின் வடபகுதி கடல் பரப்பாக இருந்த தென்றும் காலப்போக்கில் இயற்கை மாற்றத்தினால் நிலப் பரப்புகள் சில, கடலால் அமிழ்ந்தும் கடல் பகுதிகள் சில நிலப் பரப்பாக எழுந்தும் இப்போதைய இப்பூவுலகாக (அமெரிக்கா,

ஐரோப்பா. ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா கண்டங்களாகவும் பற்பல தீவுகள் உடையதாகவும்) உருப்பெற்றதென வரலாறு கூறுகிறது. தொன்மை நிலப்பரப்பு (நாவலந்தீவு) காலத்தால் நவகண்டமாக பிரிந்ததெனவும் அந்நிலப்பரப்பின் மையத்தில் மேருமலை இருந்ததெனவும் வரலாற்றான் அறியப்படுகின்றது. தாயுமான சாமிகளின் நவ கண்ட பரப்பினை வலமாக வந்தும் எனும் பாடல் வரியினாலும் இது தெரியப்படுகின்றது.

மொழியும் வழிபாடும் கி.மு.4000வரை உலக மக்களையெல்லாம் ஒரு கூட்டத்தில் இணைப்பதற்குரிய ஆதாரங்களாக இருக்கின்றனவென்றும் தமிழ் மொழியும் சிவநெறியும் இவ்வுலகம் முழுமையும் ஒருகால் ஓங்கியிருந்தன என்பதை பல ஓவியங்களாலும் மேற்கோள்களாலும் தெரிவிக்கப் பட்டுள்ளன. பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களின் ’சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின் - முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே’ எனும் முழக்கத்தானும் இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய நவகண்டத்தில் குமரிக்கண்டம் ஒன்று. இவ் விடத்தில்தான் (குமரிக்கண்டமாய் பிரிவதற்கு முன்னரே) முதன் முதலில் உயிரினம் தோன்றியதாக வரலாற்றார் குறிக்கின்றனர்.

‘பஃறுளியாறும் பன்மலையடுக்கமும் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள‘ என்னும் பழம்பாடலாலும் அறியப் படுகின்றது. தலைமை தமிழ்ச் சங்கம் இருந்த மதுரையம்பதி இக்குமரிக் கண்டத்தில் தான் இருந்ததாக அறியப்படுகின்றது. இக்குமரிக் கண்டமும் பின்னர் கடலால் விழுங்கப்பட்டுள்ளது.

வள்ளல் பெருமான் அருள்வாக்கின் மூலம் அறிய வந்துள்ள இவ்வண்ட வெளியிலே உள்ள அனந்த கோடி உலகங்களில் இப்பூவுலகமும் ஒன்று. இவ்வுலகின்கண் வழங்கும் நாடுகளில் இந்திய தேயம் ஒன்று. இவ்விந்திய தேயத்தின் தெற்கு பகுதி (விந்திய மலைக்குத் தென் பகுதி) தெக்கணம் என்றும் தென் இந்தியா என்றும் இதில் சிறந்து விளங்குவது திராவிடநாடு என்றும் அத்திராவிட நாட்டின் திலகமாகத் திகழ்வது தமிழ்

மொழி வழங்கும் தமிழ்நாடு என்றும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களால் 'நீராடும் கடல் உடுத்த நிலமடந்தை....' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தில் விதந் தோதப்பட்டுள்ளது. இந்திய தேயத்தின் தேசிய கீதத்திலும் திராவிடநாடு குறிக்கப்பட்டுள்ளது.இது காறும் இந்நிலவுலகின் கண்தோன்றி இறையருளைப் பெற்ற பெரியோர்களில் தலை சிறந்தவரான திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க அடிகளார் இவ்விந்திய தேயத்தை தவபூமி என்றும் இதில் தமிழ்நாடு ஞானபூமி என்றும் மொழிந்துள்ளார். இத்தகைய தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாக வழங்கி வந்துள்ளன என்பதை தமிழ் நூல்களானும், கல்வெட்டு களானும் அறியக்கிடக்கின்றன.

இப்பிரிவுகளில் சோழநாடு பொன்னியெனும் (வான் பொய்ப்பினும் தான் பொய்யாச் சிறப்புடன் விளங்கும்) காவிரியாற்றினால் வளமூட்டப்பட்டு செந்நெல்லும், கன்னலும், வாழையும், தெங்கும் கொழிக்கும் பொருள் வளமும், இயற்கையெழிலும், வான்நோக்கி விளங்கும் கோபுரங்களையுடைய சிறந்த பெருங்கோயில்களையும் உடையதாக விளங்குகிறது. மாடுகட்டி போரடித்தால் மாளா தென்று யானை கட்டி போரடிக்கும் சோழநாடு என்றும் சோழநாடு சோறுடைத்தென்றும் ஆன்றோர்களால் சிறப்பிக்கப் பட்டுள்ளது.

தோற்றம்

இத்தகைய சிறப்புப்பொருந்திய சோழநாட்டின் கண் இராஜ ராஜசோழன் எனும் புகழ் மிக்க பெரும் மன்னனால் எழுப்பப்பட்ட பெருங்கோயிலையுடைய தஞ்சை மாவட்டத் தின்கண் விளங்கும் திருத்தலமாம் ராஜமன்னார்கோயில் என்னும் ஊரின்கண் கோவிந்தசாமி எனும் பெருமகனாருக்கும் அமிர்தம்மாள் எனும் பெருமாட்டிக்கும் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித்திங்கள் 11ம் நாள் (27-10-1919) திங்கட்கிழமை இரவு 8.15 மணிக்கு கேட்டை நட்சத்திரம் 2ம் பாதத்தில் தோன்றியவர் வேலூர் ஐயா எனும் யோகானந்த சாமிகள் ஆவர்.

அவரது தந்தையார் வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்டிருந்தார். ஊரார் 'ஆச்சி' என்று அவரது தாயாரை அன்புடன் அழைப்பார்கள். தரும குணமும், நீதியும் உடையவ ராக இருந்ததால் ஊரார், வழக்குகளை அந்த அம்மையாரிடம் வந்து தீர்த்துக் கொள்வார்கள். அவர்களுக்கு பல ஆண் குழந்தைகள் பிறந்தும் நிலைக்காது கடைசியாக ஒரு பெண் குழந்தை பிறந்து நிலைத்துள்ளது. பின்னர் அந்த அம்மையார் பிள்ளையாரை வழிபட்டு ஐயா பிறந்துள்ளார். ஆண் பிள்ளைகள் பிறந்து நிலைக்காததினால் ஐயா நிலைக்கும் பொருட்டு அவரை அவரது சிறிய தகப்பனாருக்குத் தத்து கொடுத்து விட்டார்கள். குழவிப் பருவத்திலேயே இயல்பாக ஏற்பட்ட இந்த நிகழ்ச்சி பந்தபாசமற்று பொதுவாம் அன்பு நெறிபூண்டு ஒழுகுவதற்கு ஒரு வித்தாக அமைந்தது போலும். இவரது இயற்பெயர் தெரியவில்லை.

சாதகக் குறிப்பு

		ல / கேது	
	இராசி		குரு
			சனி செவ்வாய் சுக்கிரன்
	சந்திரன் புதன் ராகு	சூரியன்	

இந்த சாதகத்தின் சிறப்பு அம்சம் கீழ்வரும் பாடல்களால் நன்கு அறியப்படும்.

சுக்கிரனும் உக்கிரனும் ஒன்றுகூடி

சுகமான கேந்திரத்தில் நின்றபோது

தக்கபடி ஜாதகனும் ரோஷக் காரன்
தன்மானம் உடையவன் தரணிமீதில்
சிக்கலிலா வாழ்க்கை தனைத்தெரிந்து வாழ்வன்
சிவஞான சித்திகளைப் பெறுவதற்கு
இக்குமத வேளெரித்த யீசன் பாதம்
இதயத்தில் வைத்து நிதம் ஏத்துவானே (போகர் நாடி)

விதிமதி தனக்கு ஏழோன் விரும்பியே ஒன்று கூடில்
சதிபதியாக வாழத் தக்கதோர் பாரியில்லை
அதி பலவானாகி நல்ல அறிஞனாய் வாழ்வான் கண்டீர்
விதிமுறை தவறா தென்று விளம்பினார் போகர்தானே

ஆமெனும் லக்கினத்தான் அசுரர்தம் குருவுமாகி
தாமெனும் கேந்திரத்தில் தரித்திடில் யோகவானாம்
மாமதி நின்ற வீட்டோன் மங்களனா கிக்கூடின்
தீம்பகை வெல்லும் சேனாதி பதிபோல் வாழ்வான்
(புஜங்கர் நாடி)

நண்ணிய ஜனனக் கோளும் நலங்கொள் ஒன்பானின் கோளும்
எண்ணுமோர் தலத்தே நிற்க அன்றெனில் மாறி நிற்க
புண்ணியக் கோள்பின் நிற்க பொருந்தியேப் பிறந்த சேய்க்கு
மண்ணிடை வருநாள் தொட்டு மரண மட்டுயர்ந்த வாழ்வே.

ஆமெனும் லக்கினக்கோள் அதிகமாம் சுபக்கோளாகி
நாமமாம் நான்கிற் சார ராசியும் கொடியோன் வீடாய்
தீமையில் சனிசேய் கூடிற் செய்யாதக் கிரியை செய்வான்
மேன்மையும் புகழும் கொண்டே மேதினி வாழ்வான் மாதே

விளங்கிய கேந்திரத்தில் மிக்க லக்கினக் கோளும் மேவ
களங்குறு கோள்நோக் காமல் காரணச் சுபனாஞ் சேர
வளங்கெடு வறுமை யெல்லாம் மாய்ந்து போய்சுக வானாகி
இளங்கிளி யனையாய் ராஜலட்சுமி காந்த னாமே
(தூய கேரளம்)

நூலின் நோக்கம்

'தன்னை அறிந்தவன் தன்னை மறைப்பன். தன்னை அறியாதவனே தன்னைக் காட்டுவன்' என்னும் மறை வழி ஒழுகியதாலேயே தமிழ் சான்றோர்களின் வரலாற்று உண்மைகள் கிடைப்பதரியவாயின. அவ்வழியே நின்றொழுகும் நமது ஐயா அவர்களுக்கும் அவரது வரலாறு குறிக்கப்படுவது உடன்பாடன்றாயினும் நம்மனோர்க்கும் நமது பின் வழியினருக்கும் அவரது வரலாற்று உண்மைகள், மேம்பட்டு ஒழுகுவதற்கு ஓர் ஊன்றுகோலாய் உதவும் என்னும் பெரு நோக்காலேயே எழுதப்பட்டது.

ஐயா அவர்கள் ஊழ் வேறு உணர்வு வேறு என்றும் அதனால் பெரியோர்களின் ஊழ்வழி வரலாற்றினும் உணர்வுவழி வரலாறே பயன்படத் தக்கது என்றும் வலியுறுத்துவார்கள். ஊழ்வழி வரலாறு என்பது உடலை பற்றியது. உணர்வு வழி வரலாறு என்பது உயிரைப் பற்றியது.

ஊழ்வழி அநித்தியமானது. உணர்வு வழி நித்தியமானது. ஆதலின் நித்தியத்தை விழைவோர் அநித்தியத்தை நாடின் பயன் என்னாம்? எனினும் அந்த நித்திய வாழ்வினை பெறுவதற்கு அநித்திய வாழ்வு கருவியாக அமைந்து உதவி வருவது உணர்வு உடையோர் அறிந்த ஒன்றே. ஆதலின் ஐயாவின் உணர்விலே விளைந்த அருள் மொழி அமுதினை உண்டு மகிழும் முன் ஊழ் வரலாற்றின் சில சிறப்பு அம்சங்களை தெரிந்து கொள்வது பயன் விளைய உதவுமன்றோ?

ஈண்டு ஊழ்வரலாறு என்று குறிக்கப்படினும் அந்த ஊழ் எத்தகையது என்பது கூர்ந்து நோக்கற்பாலது. பொதுவாக விதியே மதியாகி மக்களைக் காரியப்படுத்துகிறது என்பது அனுபவத்தால் அறியக்கிடக்கின்றது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்'

என்னும் தேவரின் வாக்கும் சான்றாம். அந்த ஊழ் எவ்வாறு அமைகின்றது என்பதை நோக்கின் ஒருவன் செய்த வினையே

அவனுக்கு ஊழாக-மதியாக அமைந்தும் செய்கின்ற வினையே வருங்காலத்து ஊழாக அமைந்தும் அவனைக் காரியப் படுத்துகிறது என்கிற உண்மை அறியக்கிடக்கின்றது. ‘முற்பகல் செயின் பிற்பகல் விளையும்‘ என்னும் முதுமொழியும் நோக்குக.

எனினும் ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்...’ ‘விதியை மதியால் வெல்லலாம்’ என்னும் அனுபவ மொழியானும் ஔவை பிராட்டியாரின்

சிவாய நமவென சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை – உபாய
மிதுவே மதியாகும் அல்லா தவர்க்கு
விதியே மதியாய் வரும்

என்னும் திருவாக்கானும் மதியை விதியாக மாற்றலாம் என்னும் உண்மை அறியப்படுகின்றது. இந்த உண்மை எங்ஙனம் அறியப்படும் இதற்கு சான்றுள்ளதோவெனின், உளது. நமது ஐயா அவர்களின் சாதகக் கோள் அமைப்பும் அக்கோள் அமைப்புகளின் காரியப்பாடு குறித்து விளக்கங்கூறும் சோதிட நூல் பாக்களும், ஐயாவின் வாழ்க்கையுமே இதற்கு சான்றாம். ஆக இங்கு இவ் வரலாற்றினை ஐயாவின் ஊழ்வரலாறு என்று குறிப்பதும் பொருந்தாவாம். ஐயாவின் உணர்வு வரலாறு என்று. குறிப்பிடுவதே சாலப் பொருந்துவனவாம். ஏனெனின் முந்தை பிறப்பின் மதியே உணர்வே இப்பிறப்பின் விதியாக அமைந்துள்ளது.

இவ்வரலாற்றிலே குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள், ஐயா அவர்கள் ஆன்மீக விளக்கங்கள் பேசி வருங்காலத்து இடை இடையே காரண நிமித்தம் அருகி வெளிவந்தவை. அதனால் முடிந்த வரையில் அவைகள் நினைவு கூர்ந்து எழுதப்பட்டன. அதனால் மேலை நாட்டவர் வரலாற்று நூல்களில் காணப் படுவது போன்று நிகழ்ச்சிகளுக்கு ஆண்டு. மாதம், தேதி, நாள், இடம் பெறவில்லை. மேலும் ஐயா தாம் அசல் இல்லை என்றும், தாம் அருளின் ஏகதேச விகற்பமே என்னும் விளக்கமும் பெற்றிருப்பதனால் தம்மைக் காட்டிக்கொள்ள விரும்ப

வில்லை. அதனால் நடந்த நிகழ்ச்சிகளுக்கு குறிப்புகள் வைக்கப்படவில்லை. அதனால் இங்கு விளக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் காலத்தால் முன்பின் மாறியிருக்கவும் ஏது உண்டு. எவ்வாறாயினும் அவரது பேருணர்வு பேற்றிற்கு அவரது ஊழ் உணர்வு எங்ஙனம் காரியப்பட்டன என்பதை அறிந்து கொள்வதே நமது நோக்காம். அதன் விளைவே இவ்வரலாற்று சுருக்கம்.

இராஜமன்னார்குடி வாழ்க்கை

ஐந்து வயது முதலே, ஊரிலே ஆண்டு தோறும் நடந்து வரும் சிறு தொண்ட நாயனார் விழாவிலே உலா வரும் போது முன்னால் அன்னக்கொடி ஏந்தி வந்ததும், யாசிப்போர்வரின் சிறிது காலந்தாழ்த்தினும் வீட்டில் வடித்திருக்கும் உணவில் அளவு பாராது கொண்டு வந்து போட்டு விடுவதனால் வீட்டில் உள்ளோர்களுக்கு உணவு பற்றாது போவதும் அறிந்த அவரது தாயார் அவர் வீட்டில் இருந்தால், யாசிப்போர் தெருகோடி யில் வரும்போதே தயாராக உணவை கொண்டுவந்து வைத்திருப்பார்கள் என்பதும் ஈகை அவருடன் பிறந்த குணம் என்பதற்கோர் எடுத்துக்காட்டாம். தான் காக்கைக்கு உணவளித்ததை கடிந்த தன் தந்தையுடன் பேசாமல் விட்டதும் தின்பண்டத்தை பிற பிள்ளைகளுக்கு கொடுப்பதைக் கண்டித்த பாட்டியை நீ எனக்கு பாட்டி இல்லை என்றதும், ஈகையை விரும்பாதவர் யாரேயாயினும் அவர் உறவினர் அல்லர் என்பதும் அவரது இரக்கத்திற்கு நற்சான்றாக அமைந்துள்ளன.

சிறுபிள்ளைகள் நடித்த மார்கண்டேயர் நாடகத்தை ஐந்து வயதிலே கண்ணுற்ற அவர், அம்மார்கண்டேயனோடு தான் ஒன்றிப் போன உணர்வினை மறந்தறியாத உள்ளப்பாங்கும் விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் மொழிக்கோர் எடுத்துக் காட்டாம். துள்ளி விளையாடும் இளம் பருவத்திலே அகன்ற வாய்க்கால்களை கண்ட இடத்தும் இறங்கி செல்லாமல் தாண்டி குதித்து செல்லும் விறுவிறுப்பு கொண்ட அந்த வயதிலே. மிகத்தளர்ந்த கண்பார்வையிழந்த அந்த தெருவில் உள்ள ஒரு பாட்டியை தினந்தோறும் மாலை நேரத்தில்

ஊர்க்கோடியில் இருந்த காமாட்சி அம்மன் கோவிலுக்கு அடிமேல் அடிவைத்து மெதுவாக அழைத்துச் சென்று உடன் கோயிலைச் சுற்றி வந்து வழிபட்டு பின்னர் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு வருவார். எந்த சிறுபிள்ளையும் அந்த வயதில் செய்யமுடியாத அத்துணை பொறுமையான செயல் அவர் பொறுமையின் சிகரமாக விளங்குவதற்கு ஊற்றுக்கோலாய் அமைந்திருந்துள்ளது.

பெற்றோர்கள் முறையாக அவரை பள்ளியில் சேர்க்கும் முன்னரே மற்ற பிள்ளைகளுடன் தானும் பள்ளி சென்றபோது ஆசிரியர் எங்கு வந்தாய் என வினவ படிக்கவந்துள்ளேன் எனப்பகர அதற்குரிய ஏற்பாடுகளை ஆசிரியர் அறிவித்தபடி பின்னர் செய்து தந்து ஆரம்ப கல்வி பயின்று முடித்து. உயர்கல்வி பயில ஃபின்லே (Finlay) உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்தார். எனினும் பள்ளி கல்வியில் அவரது மனம் முழுமை யாக ஈடுபடவில்லை.

வகுப்பறையில் ஆசிரியர் கேட்ட வினாக்களுக்கு விடை பகராததினால் சில பிள்ளைகளைச் சுட்டி, (அதில் ஐயாவும் ஒருவர்) நீங்கள் தேர்வில் வெற்றி பெறுவது கடினம் என்று கூறி, மேட்டூர் அணை கட்டுமானம் பற்றிய முழு பாடத்தையும் நாளை நீங்கள் ஒப்புவிக்க வேண்டும் எனப் பணித்துள்ளார். தேர்வில் வெற்றி பெறுவது கடினம் என்ற ஆசிரியரின் கூற்று ஐயாவை உறுத்தியது. தாய் தந்தையரின் உழைப்பை உண்டு சுமையாக இருந்து வருவதா என எண்ணி உள்ளம் வருந்தியுள்ளது. ஆதலின் பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்தபின்னர் ஒரு மாட்டுத் தொழுவத்தில் அவரும் நன்றாகப் பயிலும் மாணவன் ஒருவனும் மேட்டூர் அணை பற்றிய பாடத்தை அம்மாணவன் உருப்போட ஐயா மௌனமாகப் பார்த்துள்ளார். மறுநாள் ஆசிரியர் அப்பாடத்தை கேட்க சிலர் சிலவரிகளும் சிலர் பல வரிகளும் சிலர் சிறு பகுதியும் ஒப்பித்தும் சிலர் மௌனமாக வும் நிற்க, எந்த மாணவனாவது முழுமையாக ஒப்பிக்கின்றானா என்பதை தெரிந்து கொள்ளும் பொருட்டு ஐயாவும் முதன் முறை மௌனமாக நின்றுள்ளார்.

எல்லா மாணவர்களும் நிற்கவே கடைசியாக ஐயா நான்

சொல்லுகிறேன் என ஆசிரியர் அனுமதிபெற்று முழு பாடத்தையும் பிழையின்றிச் சொற்பொழிவாற்றுதல் போன்று ஆற்றியுள்ளார். ஆசிரியர் வியப்படைந்து தேர்வில் வெற்றி பெறுவது கடினம் என்று நேற்று கூறிய வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன், நீ வெற்றி பெறுவாய் என்றாராம். தவிர வகுப்பறையில் விடை பகர்ந்து முன் அமருவதில் ஆண் பிள்ளைகள் தோற்று பெண் பிள்ளைகள் வெற்றி பெற்றால் அதற்கு இடந்தராது மறுநாள் தான் விடை பகர்ந்து முன் வந்து அமருவாராம். ஆண்மை உணர்வு இளமையிலேயே அவரிடம் குடி கொண்டிருந்துள்ளது. இதிலிருந்து பள்ளிப்படிப்பில் அவரது மனம் முழுமையாக ஈடுபட்டிருந்தால் எந்த மாணவரும் அவருக்கு முன் நிற்க இயலாது என்பது வெளிப்பாடு. விளையாட்டுகளிலும் ஓவியம் வரைதலிலும் சிறந்து விளங்கி யுள்ளார். மல்யுத்த விளையாட்டில் தனக்கு ஈடான பிள்ளை களுடன் விளையாடாது தனக்கு முதிர்ந்த பிள்ளைகளுடன் விளையாட முன் வருவார் என்பதனால் அது அவரது உள்ள முதிர்ச்சியையும் திண்மையையும் காட்டுகிறது.

பள்ளியின் மிகச்சிறந்த ஓவிய ஆசிரியர் திரு. நாகலிங்கம் பிள்ளை என்பவரிடம் எப்பிள்ளையும் நற்சான்று பெறுவது முயற்கொம்பாம். ஆனால் ஐயா அவர்களை பண்பாளர் (Nice Man) என அவரால் அழைக்கப்பட்டுள்ளார்.

வெறும் ஏட்டுக்கல்வியில் அவரது மனம் ஈடுபாடு கொள்ளாத தாலும் தாய் தந்தையரின் உழைப்பில் இனியும் தான் உண்டு வாழ்வதை விரும்பாது தான் உழைத்து மற்றவர்களுக்கும் உபகாரமாக விளங்க வேண்டுமென்கின்ற மன எழுச்சியினாலும் பள்ளிப் படிப்பை விட்டு ஏறத்தாழ 13வது வயதில் தொழிலில் ஈடுபட்டுள்ளார். எந்தத் தொழிலையும் பார்த்து மிகக் குறுகிய கால அளவிலேயே தானே செய்யக்கூடிய இயற்கை ஆற்றல் அமைந்திருந்த காரணத்தால் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளார். அச்சகத்தில் எழுத்து கோர்வை (Compose) செய்தல், அக்கால நிலைப்படி காலால் பொறிகளை மிதித்து தாள்களில் எழுத்துக்களைப் பதிப்பித்தல்,

எண்ணெயில் இயங்கும் மிகப்பெரிய சக்கரங்களைக் கொண்ட நெல் அரைவை செய்யும் பொறிகள் போன்றவற்றை அந்த இளம் வயதில் அச்சமின்றி சக்கரத்தின் மீது ஏறி சுழற்றி இயக்குதல் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளார்.

ஒரு சமயம் நீர் இறைக்கும் பொறி ஒன்று நன்றாக இயங்கியும் நீரை மேலேற்ற முடியாது பழுதுற்றக் குறையை, பழுதுபார்ப்பதில் சிறந்த ஒருவரால் பலமுறை முயற்சித்தும் சிறிது நேரம் நீர்வந்து பின் நின்று விடும் அளவிற்கே முடிந்தது. தொடர்ந்து நீர் இறைக்கச் செய்ய முடியாமல் மேற்கொண்டு இதை சரி செய்ய வாய்ப்பில்லை வேறு பொறிதான் வாங்க வேண்டும் எனக் கூறி, கைவிட்டு விட்டார். இதை அங்கிருந்து பார்த்திருந்த ஐயா இதை சரி செய்ய முடியுமாவென நான் முயன்று பார்க்கிறேன் எனக்கூறி, நீர் மேலேற வெற்றிட முண்டாக்கி நீருறிஞ்சி, மேலேற்றும் கருவியில் குறை யிருப்பதாக யூகித்து அதனைப் பிரித்துப்பார்த்து குறையறிந்து சரி செய்த பின்னர் நீர் அருவியில் கொட்டுவது போன்று வந்து கொட்டியதை அங்கு குழுமியிருந்தோர் கண்ணுற்று, இந்த இளம் வயதில் இத்தகையதோர் ஆற்றலா எனக்கூறி வியந்து போற்றியுள்ளனர்.

தொழில்களில் மட்டுமன்று, நீச்சலிலும் அவ்விதமே. அந்த ஊர் கீழ்க்கோடியில், ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு நீந்துவது கடினம் என்று கூறும் அளவிற்கு உள்ள மிகப் பெரியகுளத்தில் (கோப்பிரளயம் என வழங்கப்படுவது) தன் வயதுக்கு மிகைப்பட்டவர்களுடன் போட்டியிட்டு முந்தி நீந்திச் சென்று வெற்றியும் கண்டுள்ளார். தஞ்சை மாவட்டத்தில் காவிரி நீர் வயலுக்குப் பாய்ச்ச வெட்டப்பட்டுள்ள வாய்க்கால்கள் 7 (அ) 8 அடி அகலம் கொண்டவைகளைக் கூட இறங்கி கடக்காமல் தாண்டி கடக்கும் அளவிற்கு அஞ்சா நெஞ்சமும் உடல் திண்மையும் பெற்றிருந்தார்.

சென்னை வாழ்க்கை

அவரது உள்ளம் ஓவியக்கலையில் நாட்ட முற்றிருந்த தால் அக்கலையில் ஈடுபடும் பொருட்டு தன் சிறிய தந்தையார்

உதவியுடன் சென்னை நகரம் அடைந்தார். அந்நகரில் வசித்து வந்த, தெரிந்த சிலர் உதவியுடன் சில நாள் முயன்றும் அவர் அக்கலையில் அவரைத் தொடர்ந்து ஈடுபட ஒத்துழைக்க வில்லை. இறுதியாக தற்போது மலைச்சாலை (Mount Road) என்றழைக்கப்படும் இடத்தில் அமைந்திருந்த பெஸ்ட் கம்பெனியில் (Best Company) பணிக்குச் சென்றுள்ளார். அப்போது அவருக்கு பதினேழு *(1937)* வயதிருக்கும். அந்த நிறுவனத்தின் முதலாளி தொழிலில் வல்லவர். நீண்ட காவி அணி உடுத்தும், துறவி போன்றும் வாழ்ந்து வருபவர். அங்கு பஸ், லாரி மற்றும் கார் முதலியவைகளை பழுது பார்த்தல், கூடு அமைத்தல் (Body Building) வண்ணம் தீட்டுதல் முதலிய தொழில்கள் நடைபெற்று வந்தன. அம் முதலாளி அந்த இளம் உருவத்தி லிருந்த ஐயாவைப் பார்த்து உனக்கு என்ன தொழில் தெரியும் என்று வினவ சிறிதும் தயக்கமின்றி எனக்கு என்ன தொழில் தெரியாதென்று தெரியாது என விடை பகர்ந் துள்ளார். அதை அறியும் பொருட்டு முதலாளி நடத்திய சோதனைகளிலும் வென்றுள்ளார்.

உரிமையாளர் இவரை என்ன ஊதியம் வேண்டுமென வினவியபோது, சற்றும் தயக்கமின்றி எனக்குத் தேவை எவ்வளவோ இருக்கலாம்; நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைக் கொடுங்கள் எனக் கூறியுள்ளார். முதலாளியின் முகத்தில் தோன்றியப் பொலிவினைக் கண்டு ஐயா மகிழ்ந் துள்ளார். இவர் செயல் திறனைக்கண்ட முதலாளி இவர் கேட்டதைக் கொடுத்திருப்பார். ஆயினும் அந்த இளமையில் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்னும் மறைமொழியை தன் உடமையாகக் கொண்டிருந்தார் போலும். ஐயா பணியில் சேர்ந்தார். அங்கு அவருக்கு இட்டப் பணிகளை மற்ற தொழிலாளிகள் எவ்வாறு செய்கின்றனர் என்பதைப் பார்த்தே மற்றவர்களைக் கேட்டு அறியாமல் தானே திறம்பட செய்து வந்துள்ளார்.

நாளடைவில் அங்கு பல நாள் தொழில் செய்து முதிர்ந்த தலைமைத் தொழிலாளி (Maistry) யையும் மிஞ்சும் அளவிற்கு அவரது பணி விரைவாகவும் சிறப்பாகவும் அமைந்து

வருவதைக் கண்டு மற்றவர்களுக்கு உள்ளூர காழ்ப்புணர்வும் ஏற்பட்டுள்ளது. ஐயாவின் பணிச் சிறப்பைக் கண்ணுற்று வரும் முதலாளி மகிழ்ந்து அவருக்கு வேண்டிய உணவு, உடை, தங்குமிடம் முதலியவற்றைச் சிறப்புற அமைத்துக் கொடுத் துள்ளார். ஒரு நாள் முதலாளி ஒரு பணி குறித்து ஐயாவை அழைத்து ஆலோசனை கலந்த போது ஐயா கூறிய விளக்கம் முதலாளியை மெய்சிலிர்க்கச் செய்துள்ளது. தாங்கொணா மகிழ்ச்சியில் இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும், எங்கு கற்றாய் என வினவ, எல்லாம் எனக்குத் தெரியும் என மிக எளிதாக ஐயா விடை பகர்ந்துள்ளார். அப்போது எனது நிறுவனத்தின் பெயரை வைத்து நீர் தனியாக நிறுவனம் நடத்த வேண்டுமென முதலாளி வாழ்த்தியுள்ளார்.

இலட்சிய உணர்வு

அந்த இளம் வயதில் முன்பின் பழகியறியாத, பழகிய வர்கள் இல்லாத சென்னை நகரில் தனித்திருந்து பணி செய்து கொண்டு வந்த காலத்தில் ஒரு நாள் இரவு அந்த நிறுவனத்தின் மொட்டை மாடியில் நின்று கொண்டு நிர்மலமாக விளங்கிய விண்ணையும் மண்ணையும் சென்னை நகரக் காட்சியையும் கண்டு ஆண்டவனின் இவ்வற்புதப் படைப்பை வியந்து முந்திய பிறவிகளிலே பெற்ற பூர்வ ஞானங்கள் ஒன்றாய்த் திரண்டு ஓர் உருப்பெற்று ஒப்பற்ற உன்னத இலட்சியமாக உள்ளத்திலே ஊறிப் பொங்கி யெழுந்து தனக்குத் தானே அவரது வாய்வழியே வழிந்தோடி வந்துள்ளது.

அந்த இலட்சிய உணர்வாவது “இந்த உலகத்தில் இது காறும் எத்தனையோ பெரியவர்கள் வந்து உண்மைகளைக் கண்டும் கூறியும் சென்றுள்ளனர். அவர்கள் கண்டுணர்ந்த உண்மைகளே முடிவான தாயின் அவற்றை நான் அடைதல் வேண்டும். அல்லது அவர்கள் கண்டது போக காணாதது இன்னும் எஞ்சி இருக்குமாயின் அதை அவர்கள் அறியார்; நானும் அறியேன்; நீ (ஆண்டவன்) அறிவாய்; நான் அதை அடைதல் வேண்டும். அதுவே என் இலட்சியம்” என்பதாகும்.

இங்ஙனம் தொழில் செய்து வருங்கால் திருவொற்றி யூரில் நடைபெற்று வந்த விழாவினைக் காண, உடன் தொழில்

செய்து வந்த, வயதில் மூத்த இருவர் ஐயாவையும் உடன் அழைத்துச் சென்றுள்ளனர். அவர்கள் இருவரும் முன்னேயும் ஐயா பின்னேயும் நடந்து போய்க் கொண்டிருக்கும்போது அந்த இருவரில் ஒருவர் வடலூரில் இராமலிங்கசாமி என்பவர் ஒருவர் இருந்தாராம்; அவர் அங்கு குழுமியிருந்தோரிடம் இனி நாம் உங்களுக்கு புலப்படமாட்டோம், எல்லா உடலிலும் புகுந்து கொள்வோம், எனக்கூறி தங்கியிருந்த இடத்தில் ஒரு அறையினுள் புகுந்து அவ்வறையின் கதவை மூடித்தாளிட்டுக் கொள்ளுமாறு பணித்து மறைந்து விட்டாராம் என மற்றொரு வருக்குக் கூறிச் சென்றதைச் செவி மடுத்த ஐயா அவர்களின் உள்ளத்தில் அந்த சொற்கள் ஊன்றிவிட்டன. அன்று ஊன்றிய அந்த விதைதான், முளைவிட்டு செடியாகி மரமாகி மலர்ந்து, காய்த்து, கனியாகி வள்ளல்பெருமான் அடைந்த பேற்றிற்கு சான்றாக உருவாகியது.

வேலூரில் தொடங்கிய வாழ்க்கை

ஐயாவின் தொழில் சிறப்பைக் கண்டறிந்து வேலூரில் பஸ் தொழில் நடத்தி வந்த வேலாயுதம் என்பவர் (ஐயா பணி செய்து வந்த நிறுவனத்தில் தொழில் சம்பந்தமாக தொடர்புடையவர்) ஐயாவை அழைக்க, சென்னையை விட்டு (1939ல்) வேலூர் வந்து அவரது நிறுவனத்தில் சேர்ந்தார். ஐயாவின் தொழில் நேர்மையையும், உண்மையையும் அறிந்த வேலாயுதம் (இம்பீரியல் பஸ் உரிமையாளர்) முழு நம்பிக்கை யினால் முக்கியப் பொருள்களையும் எடுத்துவர அவை வைக்கப்பட்டிருக்கும் அறையின் சாவியையும் கொடுத் தனுப்புவாராம். தன்னுடன் பணி செய்பவர்களோ முதலாளியோ மரியாதைக் குறைவான ஒரு சொல் கூறினும் அவர்களுக்கு பாடம் புகட்டத் தயங்கியதில்லை. நீதிச் சொற்கள் கூரிய வாள்போல் வெளிப்படும். முதலாளி யாயினும், காரணமின்றிக் கடிந்தால் சிறிதும் அஞ்சாது, உம்மிடம் பணம் உள்ளது எம்மிடம் தொழில் உள்ளது, இரண்டுக்கும் பரிவர்த்தனை அல்லாது நான் உனக்கு அடிமை இல்லை, நீ எனக்கு ஆண்டான் இல்லை என இடித்துரைப்பார்.

உயிர் இரக்கம்

விடியற்காலையும், தொழில் முடிந்து மாலை நேரங்களிலும் பாலாற்றில் பாலத்தின்கீழ் ஊற்றுக்குழியில் குளித்து விட்டு வரும் வழக்கம் உண்டு. அவ்விதம் வரும் ஒரு நாள் மாலை 5 மணி அளவில் பாலாற்றங்கரையில் இருந்த கன்னிக்கோயில் பக்கத்தில் பல குடும்பத்தைச் சேர்ந்த பங்காளிகள் பெரியாண்டவர் பூஜை செய்து கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு ஆடு கட்டப்பட்டிருந்ததை ஐயா பார்த்துள்ளார். இந்த ஆடு ஏன் இங்கு கட்டப்பட்டுள்ளது? வயலில் மேய்ந்ததையொட்டி வயல்காரர் யாராவது கட்டி வைத்திருக்கிறாரா அல்லது இந்த பெரிய ஆண்டவர் பலிக்காகவா என்கிற ஐயம் எழுந்துள்ளது. இது பலிக்காக இருந்தால் அதை தடுக்க உன்னால் முடியுமா என்கிற வினாவும். முடியும் என்கிற விடையும் உள்ளத்தில் ஒரு சேரத் தோன்றி யுள்ளன. இரவு 8.00 மணி வரை அங்கு நடப்பவைகளை ஒரு ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருந்து பின் அங்கிருந்து புறப்பட முனைந்துள்ளார். ஆனால் அவரது உள்ளத்திலே, இந்த ஆடு பலிக்காக இருந்தால் அதை தடுத்து நிறுத்த முடியும் என்று எண்ணிய நீ அந்த ஆடு எதற்காக கட்டப்பட்டிருக்கிறது என்கிற உண்மையைத் தெரிந்து கொள்ளாது எங்கே புறப்படுகிறாய் என்கிற கேள்வி எழவே அதைத் தெரிந்து கொள்ள இரவென்றும் பாராமல் அங்கேயே நின்று கவனித்துக் கொண்டிருந்தார்.

சடங்குகள் எல்லாம் முடித்தப்பின், பூசாரி அந்த ஆட்டை பெரிய ஆண்டவர்முன் நிறுத்தி மாலை போட்டுள்ளார். பெரும் எண்ணிக்கையில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக அங்கு குழுமியிருக்க ஐயா, தான் ஒருவன் மட்டில் தனித்து நிற்பதையும் நோக்கி பலியை எவ்விதத்திலும் தடுத்தே ஆக வேண்டும், எத்தனை பேர் வந்து குறுக்கிட்டாலும் இந்த உயிர் உள்ள அளவும் ஆடு பலியிடப்படக் கூடாது என்னும் உத்வேகம் எழ இதுவரை அறியாத மிகப் பெரும் பலம் தன் உடம்பில் புகுந்துள்ளதை உணர்ந்தார்.

பூசாரி பலியிடக் கத்தியை ஓங்கியபோது 'நிறுத்து' என்னும் கர்ஜனையோடு பெரிய ஆண்டவர் முன் வந்து கம்பீரமாக

நின்றுள்ளார். இதைக்கண்டு அங்குள்ளோர் அதிர்ச்சியடைந்து திரண்டு வந்து ''இது எங்கள் குல தெய்வ வழிபாடு பரம்பரையாக நாங்கள் ஆடு பலியிடுவது வழக்கம். இதை தடுக்கக்கூடாது'' எனக்கூறியுள்ளனர். அவர்களில் ஒருவர் கசாப்புக் கடைகளிலே போய் தடுப்பதுதானே இங்கே ஏன் வந்து தடுக்கிறாய் எனக்கூற, "அங்கே அவன் உணவுக்காக வெட்டுகிறான், ஆனால் இங்கே தெய்வத்தின் பேரால் பலியிடுகிறீர்கள், கூடாது'' என ஐயா முழங்கியுள்ளார்.

அவர்களில் சிலர், "நீண்ட நேரமாக நீங்கள் இங்கேயே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆனாலும் ஏன் முன்னமேயே வந்து சொல்லாது தற்போது வந்து தடுக்கிறீர்'' எனக் கேட்க, "இந்த ஆடு இங்கு எதற்காக கட்டப்பட்டிருக்கிறது என்பது எனக்கு எப்படித் தெரியும். இப்போது தான் இது பலிக்காக என்பதை தெரிந்து வந்தேன்'' என விடை பகர்ந்துள்ளார்.

இவ்விதம் வாதம் நடந்து கொண்டிருக்க அவர்களில் சிலர் முன் வந்து ''எங்கள் வழக்கத்தில் தயவு செய்து நீங்கள் குறுக்கிடாதீர்கள், விலகிப்போய் விடுங்கள், நாங்கள் பலி கொடுத்துத்தான் தீருவோம்'' என ஆவேசமாகக் கூறியுள்ளனர். எத்தனை பேர் கூறினும் அவர்களையெல்லாம் உதறித்தள்ளக் கூடிய அளவிற்கு தம்மிடத்திலே பலம் வீறு கொண்டிருப்பதை உணர்ந்த ஐயா அவர்கள், "உங்கள் பெரிய ஆண்டவனுக்கு பலம் இருந்தால் என்னோடு வந்து போரிடட்டும், இல்லையெனில், பெரிய ஆண்டவனையே துவம்சம் செய்வேன்'' எனக் கர்ஜித்துள்ளார். அக்கூட்டத்திலிருந்த ஒரு இளம் பருவப் பெண் அந்தப் பெரிய ஆண்டவரை கும்மியடித்து கை தட்டி நடனமாடிக் கொண்டே சுற்றி வந்துள்ளாள்.

மிரட்சியினால் ஆடுகின்ற ஆட்டமாக அது இல்லை. சினிமாவில் கூட அத்தகைய அற்புத நடனத்தை நான் கண்டதில்லை. இன்னும் அந்த நடனக்காட்சி என் மனக் கண்ணில் அகலாதுள்ளது என ஐயா அவர்கள் விதந்து கூறியுள்ளார். ஐயாவின் கர்ஜனையைக் கேட்டு அச்சமுற்றும், அந்தப் பெண் ஆடுவதையும் கண்ட அங்குள்ளோரில்

பெரியவர்கள் சிலர் கூடி, “பெரிய ஆண்டவரே இந்தப் பெண் மூலம் வந்துள்ளார். அதனால் அவரையே கேட்டு அவர் என்ன கூறுகிறாரோ அவ்விதமே செய்வோம்” என்னும் முடிவுக்கு வந்து அந்த பெண்ணிடத்தில், “ஆண்டவரே உங்கள் விருப்பம் என்ன? என்ன செய்யச் சொல்லுகின்றீர்” என கேட்க அந்தப் பெண் ஐயாவைக் காட்டி “அவர் விருப்பம் என்னவோ அதுவே என் விருப்பம்” எனக்கூறவே, அவர்கள் ஐயாவிடம் வந்து பணிவோடு எப்படிச் செய்ய சொல்லுகின்றீர்கள் எனப் பணிந்து கேட்க, “இந்த ஆட்டைப் பலியிடக் கூடாது, விட்டு விட வேண்டும். உயிர்க் கொலையின்றி வேறு ஏதாவது செய்து கொள்ளுங்கள்” என ஐயா உரைக்க இந்த ஆட்டை பெரிய ஆண்டவரை சுற்றி விட்டு விடுகிறோம், பூசணிக்காய் பலியிடலாமா என வேண்டியுள்ளனர். செய்யுங்கள் என ஐயா கூறி அவ்விடத்தை விட்டு பெரிய மரங்கள் அடர்ந்த வழியாக சென்று அவர்கள் கண்களுக்கு மறைந்துள்ளார். அந்த ஆட்டை அவ்விதமே சுற்றி விட்டு விட்டனர்.

அக்கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவர் வந்தவர் பட்டினத்தார் எனவும் மற்றொருவர் அவர் ஒரு சித்தர் எனவும் அதனால்தான் மறைந்து விட்டார் எனவும் பேசிக் கொண்டதைச் செவி மடுத்துக் கொண்டே தம்மிருப்பிடம் நோக்கி நடந்துள்ளார்.

பிற்காலத்தில் ஐயா இந்த நிகழ்ச்சியைப் பற்றி கூறுங் காலத்து என்னை அவர்கள் எது வேண்டுமாயினும் செய்திருக்கலாம். ஏன் என்று கேட்கக்கூட வேறு நபர் யாரும் இல்லை. உயிர் போவதாயினும் ஒரு நற்காரியத்திற்கு போகட்டும் எனத் துணிந்தே இவ்விதம் இறங்கினேன். இனி அத்தகைய ஆபத்தான எண்ணங்களுக்கு இடமளிக்கக் கூடாது என்று முடிவுக்கு வந்தேன் எனக் கூறினார். ஓர் நல்ல எண்ணம் உதித்த பின்னர் அந்த எண்ணத்தைச் செயல்படுத்துவதுதானே கரண ஒழுக்கம். அந்த ஒழுக்கம் ஐயாவிடம் இளமையிலேயே அமைந்திருந்தது என்பதற்கு இதுவோர் நற்சான்றாகும்.

இவ்விதம் சில ஆண்டுகள் கழிய சுயமாகவும், சுதந்தர மாகவும் தொழில் செய்ய எண்ணி வேலூர் ஆபிஸர் லைனில்

தியாகராயபுரம் பகுதியில் ஓரிடத்தை வாடகைக்கு எடுத்து தொழில் தொடங்கி செய்து வந்தார். பழுதுபட்ட கார்களைச் சரி செய்து வண்ணம்பூசி புதியது போல பொலிவுறச் செய்து வந்தார். அதனால் இவரது தொழில் திறம் பரவலாயிற்று. பின்னர் தொழிலுக்கேற்ப பல இடங்களை மாற்றியுள்ளார்.

வாக்குத் தவறாமை

ஒருசமயம் வேலூர் குயப்பேட்டை குமனாந்தெருவில் உள்ள ஒரு அன்பர் இரவு உணவுக்கு ஐயாவை அழைக்க ஐயா வருவதாகக் கூறியுள்ளார். அன்று வேலூர் வேலப்பாடியில் வீட்டில் சித்த சமாஜத்தைச் சேர்ந்த அன்பர்கள் கன்னியப்பன், வெங்கடேசன் இன்னும் பலர் சூழ ஆன்மீக உரையாடல் நடந்ததாகவும் அதில் காலங்கடந்ததே அறியாமல் இரவு மணி 12 ஆகிவிட்டதாகவும் அப்போது ஐயா வருவதாக வாக்குக் கொடுத்தோமே காலங்கடந்து விட்டதே என்ன செய்வது எனச் சிந்தித்து வாக்குக் கொடுத்தபடி அவர் வீட்டுக்குச் சென்று வரவேண்டும், உறங்கிவிட்டிருந்தாலும் பரவாயில்லை எனத் தீர்மானித்து அங்குச் சென்று கதவைத் தட்டிப் பார்த்து திறவாமையால் திரும்பி வந்துள்ளார். மறுநாள் அந்த அன்பர் வினவ, நடந்தவற்றைக் கூறியுள்ளார். பிற்காலத்து இந்திரிய ஒழுக்கம் குறித்து பேசுங்காலத்து 'கோடி கொடுப்பினும் நா கோடாமை கோடியுறும்' என்னும் ஔவை மூதாட்டியின் பாடல் வரியைக் கூறி 'நா' நயம் என்பது சொன்ன சொல் மாறாமை. இந்திரிய ஒழுக்கங்களிலே மற்றவொழுக்கங்களுக்கு விளக்குப் போன்றது என்பதை விளக்கி நடந்த மேற்படி நிகழ்ச்சியைக் கூறினார்கள்.

திருமண மறுப்பு

தான் பிறந்த ஊர் செல்லுங்கால் எல்லாம் ஐயாவின் தாயார் "அப்பா, உனக்காக உறவுப்பெண்கள் காத்துக்கிடக்கின்றனர், திருமணத்திற்காக" எனக்கூறுவாராம். திருமணம் அவசியமா? அது அவசியந்தான் எனத்தெரிந்து கொள்ளாமல் மற்ற உலக மாந்தரைப் போல கண் மூடித்தனமாக அவர்கள் நடந்து சென்ற விதமே நடப்பது மூடத்தனம் அல்லவா! என்கிற

தீர்மானத்தில் ஐயா இருந்ததால் தாயார் திருமணம் குறித்து வினவியபோதெல்லாம் தக்க விளக்கமளித்து மறுத்து வந்துள்ளார். அந்த அம்மாவை அவரது உறவினர்கள், "என்ன இன்னும் மகனுக்குத் திருமணம் செய்யவில்லை?" என்று கேட்க, "நான் எத்தனையோ முறை எடுத்துரைத்தும் பிள்ளை மறுக்கிறான். அவனுக்கு தக்க சமாதானம் கூறி சம்மதிக்கச் செய்யமுடியவில்லை, அவன் வரும்போது நீங்கள் எடுத்துச் சொல்லி ஏற்பாடு செய்யுங்கள்" எனக் கூறியுள்ளார்.

ஏதோ ஒரு அலுவல் சமயம் அப்போது ஐயாவும் அங்கே இருந்துள்ளார். உறவினர்களும் வந்திருந்தனர். அவர்கள் ஐயாவை திருமணம் குறித்து கேட்டுள்ளனர். அதற்கு அவர், "எனக்குத் திருமணம் செய்து கொள்வதில் தடையில்லை. ஆனால் எனக்குள்ள சந்தேகங்களைப் போக்கி தக்க சமாதானம் கூறினால் எற்றுக் கொள்ளுகின்றேன்" எனக்கூற, அவர்கள் என்ன சந்தேகம் வினவ, "பட்டினத்தடிகள் 'அன்னை எத்தனை எத்தனை அன்னையோ, அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ' என்று பாடியுள்ள பாடல் பொருளின் அடிப் படையில் எனக்கு மனைவியாக வரும் பெண் முற்பிறவியில் எனக்குத் தாயாகவோ சகோதரியாகவோ வந்தவள் இல்லை என்பதை நீங்கள் நிரூபித்தால் திருமணம் செய்து கொள்ளு கின்றேன்" என விளக்கியுள்ளார். அதற்கு அவர்களால் ஏதும் மறுமொழி கூற முடியாது விலகிக் கொள்ளவே, அன்று முதல் திருமணம் குறித்த பேச்சும் நின்று போயிற்று.

மெய்ஞ்ஞான வேட்கை

இங்ஙனம் தொழிலாற்றி வந்தும் அவருள்ளம் பொய்யாம் இவ்வுலக வாழ்வில் முழுதும் தோய்ந்து விடாது மெய்யாம் ஆன்ம வாழ்வினை என்றும் நாடியே வந்துள்ளது.

ஆன்ம வாழ்வினைப் பெற இவ்வுடல் வேண்டும்; இவ்வுடலைப் பேண உணவு வேண்டும்; உணவைப் பெற பிறரிடமும் யாசிப்பது சிறுமை, கோழைத்தனம். அதனால் உழைத்து பொருளைப் பெற வேண்டும். அப்பொருளைக் கொண்டு தானும் உண்டு பிறருக்கும் உபகரிக்க வேண்டும்

என்னும் சீரிய உணர்வினால் உழைப்பினைப் புறக்கணிக்காது போற்றி வந்துள்ளார். ஆயினும் ஆன்ம சிந்தனைக்கு நேரம் வேண்டுமே, அதனால் உழைப்பிற்கு பகல் பொழுதையும் ஆன்ம வாழ்விற்கு இராப் பொழுதையும் தேர்ந்தார். சித்தர்களும், முனிவர்களும் காடு மலைகளில் வாசம் செய்வர், எனும் வழக்காறினால் இரவுப் பொழுதில் காடு மலைகளை நாடி அலைந்தார்.

இவ்விதம் 15 ஆண்டுகள் கொடிய வன விலங்குகளுக்கும், அரவம் போன்ற நச்சுயிர்களுக்கும் இடி, மழை, காற்று, பனி போன்ற இயற்கை உற்பாதங்களுக்கும் அஞ்சாது மெய் நாட்டத்திலே மனம் முழுதும் பதிந்தவராய் காடு, மலை மூழைகளெல்லாம் தேடி அலைந்துள்ளார். காரிருள் சூழ்ந்த நடுநிசி வேளையில் காட்டுப் பகுதியில் செல்லுங்காலை காட்டின் ஓரங்களில் வாழ்ந்து வந்த கிராம மக்கள் ஐயாவை பார்த்து இந்த இரவு வேளையில் காட்டுக்குள் காரைப்பழம் தின்ன கரடிகள் வரும் எனச் சொல்லித் தடுப்பார்களாம். மெய்நாட்டப் போதையிலே அத்தடைகளையெல்லாம் பொருட்படுத்தாமலும் சென்று கொண்டேயிருப்பாராம். மழை கொட்டினாலும் அதற்காகச் சிறிதும் தயங்காது முகத்தில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டே தனது இலட்சியத் தேடலில் குறியாகச் சென்று கொண்டேயிருப்பாராம்.

ஓரோர் சமயம் அசாதாரண சூழல்களில் மனம் அச்சத்தினால் துணுக்குற 'கிரீச்' ஒலி எழுப்பும் பூச்சிகளின் இரைச்சலைச் செவியுற்றும் சிறு ஒளி காட்டி பறந்து திரியும் மின்மினி பூச்சிகளை கண்ணுற்றும், தவளைகளின் இசை முழக்கங் களைக் கேட்டும் அற்ப உயிர்களாகிய இவைகள் அச்சமுறாது ஆனந்தமாய் இருக்க ஆறறிவு படைத்த உயர்ந்த பிறப்பாகிய மனிதப்பிறப்பைப் பெற்ற நீ அச்சமுறுவது உனக்கே வெட்கமாக இல்லையா? என தன் மனதைக் கேட்டு அச்சம் தவிர்ந்து தொடர்ந்து பீடு நடைபோடுவாராம். பகலில் உழைப்பதாலும் இரவில் இவ்விதம் திரிவதாலும் சில சமயங்களில் தன்னையும் மீறி உறக்கம் கவ்விட உறங்கி விடியுங்காலை கண் விழித்துப் பார்க்க தான் புற்றின் மீதோ

அல்லது மரத்தின் மீதோ சாயந்திருப்பதை அறிந்து எழுந்து மீண்டும் பயணத்தைத் தொடர்வாராம்.

இவ்விதம் அலைந்த நாட்களில் வேலூர் மாநகரைச் சுற்றினும் மேற்கு திசையில் அணைக்கட்டு, பள்ளி கொண்டா, ஒடுக்கத்தூர், ஆம்பூர் போன்ற பகுதிகளில் உள்ள காடு மலைகளில் சில சாதுக்களைச் சந்தித்துள்ளார். அஞ்சத்தக்க மலை நடுவே நடுநிசி வேளையில் தனித்து வந்து நிற்கும் ஐயா அவர்களைக் கண்டு அங்குள்ள சாதுக்கள் சித்தரோ, முனிவரோ (அ) முனியோ என அச்சம் கொள்வார்களாம். அணைக்கட்டு மலையிலே அரி ரிஷி என்பவரையும், சத்துவாச்சாரி மலையிலே 40 ஆண்டுகள் யோகம் செய்த நிர்வாணத்துறவி ஒருவரையும் சந்தித்துள்ளார். இவர்களில் ஐயாவின் மெய்ஞ்ஞான வேட்கையைத் தணித்தவர்கள் ஒருவரும் இல்லை. அஞ்ஞான உலக இச்சையை நாடி தேடி ஏங்கும் பருவமாகிய வாலிப பருவத்தில் 20 வயது முதல் 35 வயது வரை மெய்ஞ்ஞான ஆன்ம வாழ்வினைத் தேடி அலைந்த அந்த இராக்கால நிகழ்ச்சிகளை ஐயா அவர்கள் கூறுங்காலை கேட்போர் மெய்யெலாம் சிலிர்க்கும். இப்படியும் ஒருவர் வாழ்ந்திருக்க முடியுமா என்று அதிசயிக்குமளவுக்கு அந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றினையும் விரிக்கின் பெருகும் என அஞ்சி சிலவே ஈண்டு சுருங்கக் கூறி பிற விடுவிக்கப்பட்டன.

தொழில் சிறப்பு

மருத்துவதுறையில் சிறப்பினைப் பெற்றுள்ள வேலூரில் இயங்கி வரும் கிறித்தவ மருத்துவமனை (CMC) யின் தலைவர் (Chairman) அமெரிக்க நாட்டு ராட்சப்பர் என்பவர் ஐயா அவர்களின் தொழில் சிறப்பினைக் கேள்வியுற்று அவரது கார் ஓரிடத்தில் மோதி நசுங்கி பழுதடைந்துள்ளதை சரிசெய்து வண்ணம் பூசுவதற்காக ஐயாவை நாடியுள்ளார். ஐயா மறுத்துள்ளார். காரணம், அவர் அமெரிக்கர், அவரது கார் அமெரிக்க நாட்டு தயாரிப்பு, இந்திய நாட்டு தயாரிப்பு வண்ணங்கள் தரத்தில் குறைந்தவையாதலின் அந்த வண்ணத்தைப் பூசினால் அமெரிக்க வண்ணத்தோடு சரியாக ஒத்து வராது என்பதால் அதைக்கண்டு அவர்கள் இந்தியத்

தொழிலை ஏளனம் செய்வர் என ஐயா கருதினார். ஆனால், ராட்சப்பர் அவர்களின் முகத்தைப்பார்த்து மனம் மாறி அமெரிக்க நாட்டு வண்ண தயாரிப்புகள் சிலவற்றின் பெயரைக் கூறி அவற்றை வரவழைத்துக் கொடுத்தால் செய்து தருவதாகக் கூறியுள்ளார்.

அப்பெயர்களைக் கேட்ட அவர் தான் அமெரிக்க நாட்டவராயிருந்தும் அவைகளை தெரிந்து கொள்ளவில்லை. இந்திய நாட்டில் தமிழராகிய இவர் தெரிந்துள்ளதைக் கேட்டு வியந்து போற்றியுள்ளார். அம்மாதிரி வரவழைத்தவைகள் ஐயா அவர்கள் எதிர்பார்த்தபடியில்லாமல் சற்று தரமும் நிறமும் மாறியிருப்பதையறிந்து அதை தெரிவிக்க, ராட்சப்பர் அவர்கள் ஐயாவைப்பார்த்து நான் உங்கள் தொழிலைப்பற்றி கேள்வி யுற்றிருக்கிறேன். அதனால் நீங்கள் எவ்விதம் விரும்புகிறீரோ அவ்விதம் செய்து கொடுக்குமாறு கோரியுள்ளார். இந்திய நாட்டு வண்ணங்கள் சிலவற்றைத் தேர்ந்து அவைகளை அக்காரின் வண்ணத்திற்கேற்ப கூட்டியும் நசுங்கியதை சரி செய்தும் பூசி தந்துள்ளார். நசுங்கிய இடம் எது வண்ணம் பூசிய இடமெது என்பதை காண முடியாத வகையில் இருந்ததைக் கண்டு அதிசயித்து அந்த அமெரிக்கர் ஐயாவின் தொழில் நுட்பத்தினை மெச்சி அமெரிக்க நாட்டுக்கு வருமாறு அழைத்துள்ளார். ஐயாவின் இலட்சியம் பொருளியலன்று அருளியலாதலின் நாட்டைப் பார்ப்பதற்காக வேண்டுமானால் வருவேன், பொருள் நாடி வரமாட்டேன் என்று பொருள் வேட்கை நாட்டமில்லாத் தெளிவோடு பதில் கூறியுள்ளார்.

ஐயாவிடம் தொழிலை நாடி வருபவர்கள் அவரது சிறப்பினை அறிந்தவர்கள் ஆதலின் எவ்வளவு தொகை என்றோ எவ்வளவு காலம் என்றோ கேளார்கள். அம்மாதிரி அறியாதவர்கள் தொழிலை நாடி வரினும் அதை ஏற்கார். தொழிலே இல்லாத சமயம் ஆயினும் கூட தொகையையும் காலத்தையும் குறித்து பேரம் பேசுவோர் தொழிலை ஏற்க மாட்டார். பணத்துக்காக தொழில் இல்லை. தொழிலுக்காகத் தொழில் என்னும் கோட்பாட்டினர். தொழு+இல் கடவுளை தொழுகின்ற வீடே தொழில் என்பது ஐயாவின் கருத்தாம்.

ஏற்ற தொழிலை குறையின்றி செம்மையாக முடித்தலே அறம். பொருளுக்காக தொழிலை விற்பது மறம் என்னும் நீதியினர்.

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர் (குறள்)

ஒருசமயம் கிறித்துவ மருத்துவ மனையில் மருத்துவராக (Doctor) பணிபுரிந்த அம்மையார் ஒருவர் தொழில்நாடி ஐயாவிடம் வந்துள்ளார். ஐயாவின் தொழிற் கூடத்துக்கு எதிரில் சாலையில் காரை நிறுத்தி ஓட்டுநரை அனுப்பி அழைத்துள்ளார். ஓட்டுநர் வந்து அம்மையார் அழைப்பதாகக் கூற தொழிலில் ஈடுபட்டிருந்த ஐயா அவர்கள் அந்த அம்மையாரை உள்ளே அழைத்துவருமாறு கூறினார். கார் சில இடங்களில் பழுது பட்டிருப்பதாகவும் அவைகளைச் சரி செய்து வண்ணம் பூச வேண்டுமென்றும், கார் வெளியில் நிற்பதனால் அதை நேரில் காட்ட விரும்புவதாக ஓட்டுநர் கூற ஐயா அவர்கள் தொழில் உடையோடு வெளியில் சென்று அம்மை யாரைப் பார்த்துள்ளார். காரை விட்டு இறங்கி காரின் பழுதுபட்ட இடங்களை தன் காலால் அந்த அம்மையார் ஐயாவிடம் காட்ட அவர் ஆணவத்தைக் கண்ட ஐயா அவர்கள் ஏதும் பதில் கூறாது உள்ளே செல்ல அவர் மனம் எண்ணியது. ஆயினும் சகித்துக் கொண்டு அம்மையார் கேட்டவைகளுக்கு சில விளக்கங்களைத் தந்துள்ளார்.

ஒரு கால கெடுவுக்குள் வேலையை முடித்துக் கொடுக்கு மாறு அந்த அம்மையார் அதிகார தோரணையோடு கேட்க ஏற்கனவே எடுத்த வேலை ஒன்று நடந்து கொண்டிருந்த தாலும் அவரது ஆணவ போக்கைக் கண்ணுற்றமையாலும் ஐயா அவர்கள் மறுத்து விட்டார். (அந்த அம்மையார் தொழிலுடை யோடு இருந்த ஐயாவின் புறத்தோற்றத்தை கண்டு, அகத்தோற்றத்தைக் காணும் தகுதியின்மையால் அலட்சியமாக எண்ணி அவ்விதம் நடந்தார் போலும்) அம்மையார் சென்று விட்டார்.

பல ஆண்டுகள் கடந்து ஓட்டுநர் ஒருவர் வந்து கார் ஒன்றை வெளியில் நிறுத்தியிருப்பதாகவும் அதை வந்து பார்க்குமாறும்

வேண்டியுள்ளார். உரியவரை உள்ளே வரச் சொல்லென ஐயா கூற அவர்கள் நடக்க முடியாது தள்ளு சக்கர வண்டியில் இருந்தபடி அவர் வேனில் உள்ளார், அதிலிருந்து இறங்க இயலாது என வேண்டி அழைக்க ஐயா அவர்கள் சென்று பார்த்துள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்பு தன்னிடம் தொழிலை நாடி வந்து காலால் காட்டி அதிகாரத்தோடு பேசிய அம்மையார் என்பதை அறிந்தும் அவரது நிலையை கண்டு இரக்க உணர்வோடு நிற்க, அந்த அம்மையார் கொண்டு வந்த காரைக்காட்டி பழுதுபட்டவைகளை சரி செய்து வண்ணம் பூசித் தருமாறு பணிவுடனும் அடக்கத்துடனும் கேட்க, ஆகும் செலவைக் கூறி காலக்கெடுவை உறுதியாகக் கூற இயலாது எனக் கூற (ஐயாவைப்பற்றி அறிந்திருந்ததால்) அம்மையார் தங்கள் சௌகரியம் போல செய்து கொடுங்கள் என நயத்தோடு கூறியுள்ளார். அவ்விதமே செய்து கொடுக்க. தொழில் சிறப்பைக் கண்டு வியந்தும் ஐயாவைப் பாராட்டியும் சென்றார். வேலூர் அடுத்த பாகாயம் ஊனமுற்றோர் மருத்து மனையில் மூத்த மருத்துவராக பணிபுரிந்து வந்தவர் அம்மையார் என்றும் கார் விபத்து ஒன்றினால் கால்களை இழந்ததாகவும் அத்துடன் மலம், சிறுநீர் கழிக்கும் உறுப்புகளும் உணர்ச்சியினை இழந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூற இரக்கமுடன் அவர் ஆணவத்தோடு நடந்து கொண்ட விதத்தையும் விபத்துக்குள்ளாகிய பின்னர் ஏற்பட்டுள்ள மாறுதலை பற்றியும் கூறி இவ்விதம் வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகள்தான் அனுபவங்களாக உயிர் வளர உதவுகின்றன. இத்தகைய அனுபவ படிப்புதான் உண்மையான படிப்பு என்றும் விளக்கினார்கள்.

இவ்விதம் ஐயாவின் தொழில் துறையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் அற்புதங்களும் அநேகம். அவைகள் ஒவ்வொன்றினையும் கூறப்புகின் நீண்டு கொண்டே செல்லும் என்பதனாலும் ஐயாவின் இலட்சிய வடிவினையும் அனுபவம் பேற்றையும் அறிந்து கொள்வதே இவ்வரலாற்றின் நோக்கம் என்பதனாலும் இந்நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன.

சாதுக்கள் தொடர்பு

பகலில் தொழிலாற்றி, இரவு பொழுதை ஓர் ஆறுமாத காலம் வேலூர் அடுத்த அம்மணாங்குட்டை பக்கம் உள்ள ஒரு குகையில் திருவாங்கூரைச் சேர்ந்த ராமானுஜகிரி என்னும் ஒருவருடன் தங்கி கழித்து வந்துள்ளார். அவர் வடக்கே இமயமலைச் சாரல் மற்றும் பல இடங்களில் தங்கி சுற்றி வந்துள்ளவர்.

அவருக்கு தங்கம் செய்யும் வாத பித்து இருந்துள்ளது. அது குறித்து அவர் ஐயாவிடம் கூறுவாராம். ஐயா அவர்கள் அதை சிறிதும் பொருட்படுத்தாது 'சொல்லால் ஆகும் தங்கம்' எனப் பகர்வாராம். வாத வேலைக்கு ஐயா உடன்பாடாக இல்லாத தால் இரவில் ஐயா வந்து தங்குவதை விரும்பாத அவர், அதைக்குறிப்பால் உணர்த்தும் பொருட்டு 'தவத்துக்கு ஒருவர்' என ஐயாவிடம் கூறியுள்ளார். குறிப்பால் அதை அறிந்த ஐயா அவர்கள் 'உனது தவம் என்ன தவம் பல தவங்களை செய்தவன் நான்' என மனதிலே எண்ணிக் கொண்டு திரும்பியவர் மீண்டும் அங்கு செல்லவில்லை. ஆகாரம் மட்டும் ஒருவர் மூலம் அவருக்கு அனுப்பி வந்துள்ளார். அதனால் ராமானுஜகிரி அவர்களின் மனம் பாதிக்கப்பட்டு வருந்தி பல பேரிடம் ஐயா அவர்களை வருமாறு கூறி அனுப்பியுள்ளார். ஐயா போகாததால் அவரே ஐயாவிடம் வந்து நான் இமயமலை செல்ல விருக்கிறேன், திரும்பி வர சில ஆண்டுகள் ஆகும் எனக் கூறி சென்றுள்ளார். அவ்விதமே சில ஆண்டுகள் கடந்து அங்கு பனியின் கடுமையினால் உடல் நலன் பாதிக்கப்பட்டு நாசி புண்ணாகி நீர் வழியும் கோலத்துடன் ஐயாவிடம் வந்துள்ளார். அம்மணாங் குட்டை மடத்தில் எப்போதும் சில சாதுக்கள் தங்கியிருப் பார்கள், மருத்துவமும் செய்யப்பட்டு வந்துள்ளது. அதனால் ஐயா அவர்கள் ராமானுஜகிரியை அம்மடத்திலே தங்க வைத்து உதவிகள் செய்துள்ளார்.

சத்துவாச்சாரி மலையில் இருந்து வந்த நிருவாணத் துறவி ஒருவரைக் காண வேலூருக்கு கிழக்குப் புறத்திலே அமைந் துள்ள மலை வழியே பல முறையும் சென்று வந்துள்ளார். சில சமயங்களில் மேகம் சூழ்ந்து காரிருள் கவ்வியிருக்கும்போது

வழி தெரியாது தடைப்பட்டு நிற்பார். அந்த மலைப்பகுதியில் அப்போது சிறுத்தை, நரி, கழுதை குரத்தி போன்ற கொடிய விலங்குகளும் மலைப்பாம்பு மற்றும் நச்சு பாம்புகளும் பூச்சிகளும் வாசம் செய்து வந்துள்ளன. 'இத்தகைய பயங்கர மான சூழலில் காரிருளில் நீ ஏன் அலைகிறாய், எதை தேடுகிறாய்' என தன் மனதையே தான் கேட்பாராம். 'மற்ற உலக மாந்தரைப் போல உலக போகத்திலே மயங்கிக் கிடக்காமல் மெய்ப்பொருளைத் தேடுகிறேன்' என மனம் விடை கூற 'தேடு, தேடு, நன்றாகத் தேடு' என கூறி அமைதி பெறுவாராம்.

அந்த நிருவாணத் துறவியார் ஐயாவைப் பார்த்து 'இந்த அகால வேளையிலே ஏன் இப்படி வருகிறீர், இங்கே என்ன இருக்கிறது,ஒன்றுமில்லை' என்பாராம். 'ஒன்றுமில்லாத போது நீர் ஏன் இங்கு அமர்ந்திருக்கின்றீர், ஆடை உடுத்தி வெளியே வாரும்' என அஞ்சாது பதில் கூறியுள்ளார். ஒரு சமயம் இருவருக்கும் வாக்கு வாதம் மேலிட்டு ஐயாவை, "இனி நீர் இங்கு வரக்கூடாது" என கடிந்துரைத்ததால் ஐயா அங்கு செல்வதை நிறுத்தியுள்ளார். இவ்விதம் சில ஆண்டுகள் கழிந்துள்ளன. பின்னர் அந்த நிருவாணத்துறவியே பலரிடம் ஐயா அவர்களை வருமாறு சொல்லி அனுப்பியுள்ளார். ஐயா அவர்களுக்கு உபதேசம் செய்து இமயமலை சென்று தவம் செய்யப் போவதாகக் கூறி அனுப்பியுள்ளார். இருந்தும் ஐயா 'யாமே உபதேச வடிவம்' என எண்ணியவராய் அவரிடம் செல்லவில்லை.

வேலூரில் அமிர்தலிங்கசாமி மடம் தெருவில் வேத பாட சாலை ஒன்று இருந்தது. (அது தற்போது இராமகிருஷ்ணா பாடசாலையாக மாறியுள்ளது) அதன் மாடியில் பொந்திலி இனத்தைச் சேர்ந்த துறவி ஒருவர் தங்கியிருந்தார். அவர் வடக்கே காஷ்மீர் மலைப்பகுதியில் 40 ஆண்டுகள் தங்கி இருந்தவர். வயது முதிர்ந்தவர். கம்பீரமான தோற்றம் உடை யவர். வாத (தங்கம் செய்யும்) நாட்டம் உள்ளவர். அடிக்கடி ஏதோ புடம் வைப்பாராம். அவரோடு ஐயா சிற்சில காலம் தங்கியிருந்துள்ளார். மற்றவர்கள் யாரையும் உள்ளே அவர் அனுமதிக்க மாட்டாராம்.

ஐயாவுக்கு இளமைப் பருவம் ஆயினும் அந்த வயது முதிர்ந்த துறவி இளம் பருவமுடைய ஐயாவுக்கு படுக்கை விரித்து வேண்டிய பணிவிடைகள் செய்வாராம். ஐயா பருவ வேற்றுமையை எடுத்துக் காட்டி மறுத்தும் அவர் நான்தான் உமக்கு பணி செய்ய வேண்டும் எனக்கூறி தொடர்ந்து செய்துள்ளார். அவர் வேதங்களைக் கற்றவர் ஆயினும் ஐயா அவர்களிடம் வேத மொழிகளை கேட்டு மகிழ்வாராம். ஒருமுறை ஐயா அந்த துறவியைக் காணச் சென்ற போது, அறை பூட்டப் பட்டிருப்பதைக் கண்டு வெளியில் சென்றிருப்பார் என எண்ணி ஒரு கம்பியைக் கொண்டு பூட்டைத் திறந்து உள்ளே சென்று ஐயா இருந்துள்ளார். இச்செயல்புறத்தால் தவறுபோல் தோன்றினும் அகத்தே அந்த அளவிற்கு உரிமை உணர்வு இருந்து வந்துள்ளது.

பின்னர் அப்பெரியவர் வந்தபோது ஐயா உள்ளே இருப்பதைப் பார்த்து பூட்டி யிருந்தேனே எப்படித் திறந்தீர் என வினவ, இரும்பு பூட்டைத் திறக்க கை சாவி ஒன்றுண்டு மனப்பூட்டைத்திறக்கவோ மெய்யறிவுண்டு எனக்கூற அதைக் கேட்ட துறவி குலுங்கக் குலுங்க சிரித்து மகிழ்ந்தாராம். சில நேரங்களில் அந்த துறவி தம்பூராவுடன் வேதநாயகம் பிள்ளை அவர்களின் பாடலை இசையோடு பாடிக் காட்டி மகிழ்வாராம்.

ஐயா அவர்கள் தொழில் இல்லாத காலங்களில் யாரு டனும் சேர்ந்து பொழுதினைக் கழிக்காமல் தனித்து வேலூரரை அடுத்த பகவதி மலைக்குச் சென்று இரவு திரும்புவார். பல நாள் பகல் ஒரு வேளை மட்டும் தேங்காயுடன் சிறிது வெல்லம் (அ) வாழைப்பழம் (அ) கருணையை சுட்டும் உண்டு வந்திருக் கிறார். ஒரு சமயம் ஐயா அவர்கள், மற்றொருவரிடமிருந்து தனக்கு வர வேண்டிய பணத்தை இரண்டு நாட்களில் அவர் கொடுத்து விடுவதாக வாக்குறுதி தந்ததை நம்பி, தான் வேறொருவருக்கு, தர வேண்டிய பணத்தை இரண்டு நாள் கழித்து கொடுத்து விடுவதாக வாக்களித்துள்ளார். ஆயினும் ஐயாவிற்கு வாக்குறுதி கொடுத்தவர் அதை நிறைவேற்ற வில்லை. அதனால் தான் கொடுத்த வாக்குறுதியை எவ்விதம் நிறைவேற்றுவது என்னும் கலக்கம் ஐயாவுக்கு ஏற்பட்டுள்ளது.

பணம் பெற வேண்டியவர் அந்த நேரத்தில் வந்தும் பணம் கோராத நிலையிலும் ஐயா தான் தந்த வாக்கைக் காக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்தியுள்ளார். எனினும் தன் நெஞ்சறிய தான் பொய்யுரைக்கவில்லை; பிறர் ஊழ் தொடர்பால் இப்படி நேர்ந்துள்ளது எனத் தெளிந்து சமாதானம் அடைந்துள்ளார். இவ்விதம் ஏதாவது தவறு நேரின் அதற்கு சமாதான விளக்கம் கிடைத்தாலொழிய மனம் அமைதியடையாது வருந்தும் என்பார். இதிலிருந்து அவரது நாநயமும் மனத்தூய்மையும் எத்துணை மேம்பட்டிருந்தது என்பதை நாமும் தெரிந்து மேற்கொள்ள முயலுவோம். பொய்யுரைத்து வாழ்வதையே அருங்கலையாக, அறிவுத் திறமாகப் போற்றப்படும் இந்நாளில் ஐயா அவர்களின் பொய்யா வாழ்வினை எண்ணிப் போற்றி உலகம் உய்ய முன் வராதோ!

ஒருநாள் இரவு ஐயா தங்கி இருக்கும் அறைக்கு, அறிமுகமான ஆச்சாரி ஒருவர் ஆரணியிலிருந்து வந்துள்ளார். வந்தவர் தொழில் செய்யும் பொருட்டு அவசரமாக ஐந்து ரூபாய் வேண்டும் என வேண்டியுள்ளார். ஐயாவிற்கு அப்போது தொழிலும் இல்லை, கைவசம் இருந்ததும் ஐந்து ரூபாய் மட்டுமே. இந்த உண்மையை எடுத்துரைத்தும், விடிந்தால் காலை உணவிற்கும் வேறு பணம் இல்லை எனவுரைத்தும் வந்தவர் தொடர்ந்து வேண்ட ஐயா அவர்கள் தனக்குள்ளே எண்ணியுள்ளார். வந்தவர் தன்னலமே கருதிக் கேட்கிறார். அவரால் சமாளித்துக்கொள்ள முடியவில்லை, ஆயினும் நாம் சகித்துக்கொள்வோம் என எண்ணி அந்த ஐந்து ரூபாயை அவரிடம் தந்துள்ளார். அவர் இரவு திண்ணையில் படுத்திருந்து ஐயா எழுவதற்கு முன்னரே எழுந்து புறப்பட்டு சென்றுள்ளார். எழுந்து பார்த்தபோது அவர் காணாததால் சொல்லாமல் கூட சென்றுள்ள அந்த மனித தரத்தை எண்ணி வருந்தியுள்ளார். காலை உணவுக்குச் செல்ல பணம் இல்லாத தால் அறையிலேயே தங்கியிருக்க, எதிர்பாராமல் ஐயாவுடன் பழகிய ஒருவர் வந்து காலை உணவுக்கு ஐயாவை வற்புறுத்தி அழைத்துச் சென்றுள்ளார். இந்த நிகழ்ச்சி கடவுளை

நம்பினோர் கை விடப்படார்! என்னும் முதுமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஒரு நாள் விரக்தி உணர்வு மேலோங்க தனது விலையு யர்ந்த உடைமைகளையெல்லாம் அறையிலேயே விட்டு விட்டு துறவியாக வாழ மகாதேவ மலைக்குப் புறப்பட்டார். அங்கு அரி ரிஷி என்பவர் மகாதேவ மலைக்கு வருவதற்கு முன்பு, அணைக்கட்டு மலைக் குகையில் இருந்தவர். ஐயா அவருடன் முன்பு ஓரிரவு தங்கியிருந்துள்ளார். ஏற்கனவே அறிமுகமான அவருடன் தங்கி துறவு வாழ்வை மேற்கொள்ள எண்ணியே அங்கு சென்றார். ஆயினும் மலைக்குச் செல்லும் வழியிலேயே வேறு ஒரு துறவிக்கும் ஐயாவுக்கும் யோக வாழ்க்கை குறித்து வாதம் ஏற்பட்டுள்ளது. அந்த வாதத்தினால் அந்த வாழ்க்கை ஐயாவுக்கு ஏற்புடையதாகப் புலப்படவில்லை. எனினும் சில நாட்கள் அரி ரிஷி என்பவருடன் தங்கியிருந்தும் அது நீடிக்க வில்லை.

வேடம் பூண்டவர்கள் துறவு, ஊழால் அமைந்தது. ஐயா அவர்களோ உணர்வால், விளக்கத்தால் துறவு மேற் கொண்டவர். பிறர் கையை எதிர்நோக்கி வாழ்வதை இழுக்கு என்றும் உழைத்தும், பிறருக்கு கொடுத்தும் வாழ்வதே வாழ்வாகும் என்றும், அதுவே கடவுள் சம்மதம் என்றும் உணர்ந்து, மீண்டும் உழைத்து வாழ விரும்பி பழைய தம்மிடத்திற்கு திரும்பி வந்துள்ளார். எனினும், உடன் தொழில் அமையப் பெறாததினால் பிறந்த ஊர் (ராஜமன்னார்கோயில்) சென்று வர புறப்பட்டார். இடையில் திருவண்ணாமலை யடைந்தபோது மலையைச் சுற்றி வலம் வரவேண்டும் என்கிற எழுச்சி எழ,சுற்றி வரும்போது மலையின் மேற்கு புறத்தில் பாதையிலிருந்து காட்டுக்குள் ஒரு கல் தூரத்தில் மலையோரம் அமைந்திருந்த ஆசிரமத்தில் மலையாள நாட்டைச் சேர்ந்த காட்டு சிவா என்னும் யோகி ஒருவர் இருப்பதாக கேள்வியுற்றி ருந்ததினால் அவரைப் பார்த்துச் செல்லும் நோக்கத்தோடு அங்கு சென்றுள்ளார்.

அந்த நேரம் அந்தி நேரம். மனமும் சோர்ந்து உடலும் சோர்ந்து மிகுந்த களைப்புடன் வந்த ஐயாவை நோக்கி

அங்குமேடையின் மீது அமர்ந்திருந்த அந்த யோகி வாயினால் பேசாது கை சாடையில் எங்கு வந்தாய் எனக்கேட்க, பார்க்க வந்தேன் என ஐயா கூற, பார்த்து விட்டாய் அல்லவா சரி போ என கையால் சாடைக்காட்டியுள்ளார். வந்த நேரத்தையும் இருந்த நிலையையும் கண்டும் ஒரு சிறிதும் இரக்கமின்றி அரக்கத் தன்மையோடு நடந்து கொண்ட அந்த நிகழ்ச்சியை எண்ணி இரக்கத்தை வளர்த்துக்கொள்ளாத இவரெல்லாம் ஒரு யோகியா என சிந்தித்தவாறே திரும்பி மலை வலம் வந்து கோயிலுள் சென்று தரிசித்து சிறிது நேரம் தங்கிப் பின் பயணம் மேற்கொண்டார். ராஜமன்னார் கோயில் சென்று சில காலம் தங்கியிருந்து மீண்டும் வேலூர் வந்தடைந்தார். அந்த யோகி (காட்டு சிவா) வேலூரிலுள்ள எல்.ஆர்.கே. (L.R.K) லட்சுமி பீடி தொழிற்சாலையின் உரிமையாளர் லட்சுமண முதலியாருக்கு நன்கு தெரிந்தவர். வேலூர் வந்தால் அவர் வீட்டில்தான் தங்குவது வழக்கமாம்.

அடியார் வருத்தம் தனைக் கண்டு தரியார் இறைவர்

மீண்டும் ஒருமுறை தம் தாயாரைப் பார்க்க ஊருக்குச் சென்ற போது வண்டி மாறிச் செல்ல கும்பகோணம் ரயில் நிலையத்தில் இறங்கியபோது காலை நேரம் (ரயில் ஸ்டிரைக்) (Strike) அப்போது கடுங்கோடைக்காலம், தம் ஊருக்கு புறப்பட்ட பஸ்ஸில் கூட்டம் மிகுந்திருந்ததால் சீட்டு (டிக்கெட்) பெற முடியாமல் நின்று விட்டார். அடுத்த பஸ் பிற்பகல்தான். அதிலும் டிக்கெட் கிடைக்குமோ கிடைக்காதோ என எண்ணி 24 கல் தொலைவிலுள்ள தம் ஊருக்கு வலங்கைமான் வழியாக தாம் கொண்டு வந்த பொருள்கள் நிரம்பி கனத்துள்ள இரு பைகளையும் இரு கைகளில் ஏந்திக் கொண்டு நடையாகச் சென்றுள்ளார்.

நெடுங்காலம் மழையின்றி வறட்சியால் வயல்களெல்லாம் காய்ந்து வெடித்துக் கிடந்த காட்சி, வெங்கதிரோன் தணலாய் காய நிழலற்ற சாலையிலே பாதி தூரம் நடந்து உடம் பெல்லாம் வியர்த்தும், பாதம் முதல் உச்சி வரை வெப்பத்தால் எரிய சோர்ந்தும், மேலும் அடி எடுத்து வைக்க முடியாத நிலையில் பாதம் கொப்பளித்திருக்க பாதை ஓரம் பழைய ஒரு மண்டபம்

கண்டு தங்கி மனம் மிக வருந்தியுள்ளார். சற்று நேரத்திற் கெல்லாம் காற்று வீச கருமேகங்கள் சூழ்ந்து 2 மணி நேரம் பெருமழை கொட்டியது. காய்ந்து வெடித்துக் கிடந்த வயல்களெல்லாம் நீர் நிறைந்து குளங்கள் போல தோற்ற மளிக்கும் காட்சி. இயற்கையின் மாறுபட்ட இவ்விருவகை காட்சிகளையும் உடனுக்குடன் ஒரு சேரக் கண்டு வியந்து போனார்கள். உடம்பின் எரிச்சலும் சோர்வும் இருந்த இடம் தெரியாமல் அகல, உடம்பெல்லாம் குளிர்ந்து தெம்பூற இறை வனின் பெருங்கருணையை நினைந்து, நினைந்து போற்றி நடை தொடர்ந்து ஊர் சென்றடைந்தார். மழை பெய்யா திருந்தால் தொடர்ந்து நடந்து ஊர் சென்றிருக்க முடியாது.

இளமைக்கால தொடர்புகள்

ஐயா அவர்களின் இளமைகாலத்தில் ஊரில் அவருடன் நெருங்கி பழகியவர்கள் சிலர். அவர்களில் நாராயணன் என்பவரை ஓர் ஆங்கில அகராதி என்பார் ஐயா. புதிய புதிய ஆங்கில சொற்களை உபயோகித்து சரளமாகப் பேசக் கூடியவர். சிவப்பிரகாசம் என்பவர் அஞ்சல் துறையிலே பணியாற்றியவர். கந்தர்வ கோட்டை தருமலிங்கம் இளைஞர் காங்கிரஸ் மன்றத் தலைவர். மேடை பேச்சாளர், சோதிட சாத்திரம் அறிந்தவர். திருஞானம் என்பவரும் சோதிடம் கற்றவர். நா பலிதம் படைத்தவர். இவர் ஐயாவின் அப்போதைய நிலையைக் கண்டு நீங்கள் பிற்காலத்தில் மிக உச்ச நிலையில் இருப்பீர் என்று கூறி கண்ணீர் வடித்துள்ளார்.

ஐயாவின் இளமைப் பருவ நண்பர்களில் சண்முக சுந்தரம் என்பவர் ஒருவர். அவர் ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக பணியாற்றி வந்தவர். அவரது திருமணத்திற்கு ஐயாவை வருமாறு வேண்டியுள்ளார். உலகாயிதம் சம்பந்தப்பட்ட அலுவல்கள் எதற்குமே கலந்து கொள்ளாத ஐயா அவர்கள் அத்திருமணத்திலும் கலந்து கொள்ளவில்லை. மணமகனோ மணப்பந்தலில் ஐயாவைத் தான் தேடியுள்ளார். காணாது வருந்தியுள்ளார். பின்னர் ஐயாவை சொந்த ஊரில் சந்தித்த போது மண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாதது குறித்துச் சொல்லி வருந்தியுள்ளார்.

நான் தஞ்சைக்கு (அவர் வீட்டுக்கு) வருகிறேன் என ஐயா கூறியுள்ளார். ஐயாவுடன் நண்பர்கள் திருஞானம் இன்னும் சிலர் தஞ்சைக்கு சென்றுள்ளனர். சண்முகசுந்தரம் அவர்களை இரவு உணவுக்கு வருமாறு வேண்டியுள்ளார். ஐயா அதற்கு உடன்பட்டு திரும்பி வந்து ஓரிடத்தில் அமர்ந்து வேறு நண்பர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்துள்ளார். இரவு உணவு நேரம் வந்தும் அவர்கள் உரையாடல் தொடர்ந்து கொண்டேயிருக்க, ஐயா நினைவூட்டியும் அவர்கள் உரை யாடலை நிறுத்தவில்லை. சண்முகசுந்தரம் குடியிருந்த வீட்டுக்குச் செல்லும் வழி திரு ஞானம் என்பவருக்கு நன்கு பழகிய வழி. ஐயாவுக்கு அத்துணை பழக்கமில்லை. எனினும் காலங்கடந்து செல்லவே, இளம் தம்பதியர் நமக்காகக் காத்திருப்பார்கள் என எண்ணி ஐயா துணிந்து தனியாக நினைவில் இருந்த சில அடையாளங் களைக் கொண்டு நடந்து அந்த வீடு அடைந்துள்ளார்.

ஐயா எண்ணியவாறே அவர்கள் காத்திருந்துள்ளனர். மற்ற நண்பர்கள் வராதது குறித்து விளக்கங்கூற அவர் ஐயாவை அமரச் செய்து தானே உணவு பரிமாறியுள்ளார். தனது குணங்களையும் விளக்கங்களையும் ஓரளவு அறிந்தும் தன்னிடம் பெருமதிப்பும் வைத்திருந்ததனால் இளம் பெண் பரிமாறும்போது தவறு நேர்ந்து விடுமோ என்கிற அச்சத்தில் இவரே பரிமாறுகின்றாரோ என்று எண்ணி ஐயா அவர்கள் ஏன் நீ பரிமாறுகிறாய், உன் மனைவி பரிமாறட்டுமே, நீயும் உடன் உட்கார் என்று கூறவே அந்த அம்மையார் பரிமாற இருவரும் உணவு அருந்தியுள்ளனர்.

பின் ஐயா தனதில்லம் சென்றபோது தாயார், ‘‘என்ன அப்பா சண்முக சுந்தரம் மனைவி எப்படியிருக்கிறாள்?’’ என்று வினவ, ‘‘அப்பெண் பரிமாறும்போது முழங்கையளவு பார்த்தேன். நிறைய தங்க வளையல்கள் இருந்தன’’ என்று கூறியுள்ளார். தாயார் இப்படியும் ஒரு பிள்ளை இக்காலத்தில் இருக் கின்றாயே என்று கூறி நகைத்துள்ளார். ஐயாவின் இந்த செயல் பண்டைய தமிழர் பண்பாடு குறித்து புற நானூற்று பாடல் ஒன்றில் குறித்துள்ள நிகழ்ச்சிக்கு சான்றாக அமைந்துள்ளது.

திருமணத்திற்கு பெற்றோர் உடன்படாததால் தன் காதலனுடன் வெளியேறி விடுகிறாள் ஒரு நங்கை. பெண் காணப் படாத தினால் தாய் தந்தையர் அவள் காதலனுடன் வெளியேறியிருப்பாள் எனக் கருதித்தேடி செல்லுகின்றனர். வழியில் கணவன் மனைவி இருவர் வந்து கொண்டிருந்தனர். அவர்களை இவர்கள் தங்கள் பெண்ணின் தோற்ற அடை யாளங்களையும் அவள் காதலனின் அடையாளங்களையும் சொல்லி இத் தகைய அடையாளங்கள் உடைய இருவர் இவ்வழியே செல்வதை நீங்கள் பார்த்தீர்களா? என வினவ, வந்தவர்களில் ஆண்மகன், நீங்கள் கூறும் அடையாள தோற்றமுடைய ஆண்மகன் ஒருவன் செல்வதைப் பார்த்தேன். அவன் அருகில் பெண் ஒருத்தியும் சென்று கொண்டி ருந்தாள். அவளது அடையாளங்களை எனது மனைவியைக் கேளுங்கள் எனக் கூறியுள்ளான். அவளும் அந்தப் பெண்ணின் அடை யாளங்களைக் கூற தன் மகள்தான் தன் காதலனுடன் செல்கின்றாள் என்பதை உறுதி செய்து கொண்டனர் என்பது அப்பாடலின் கருத்து.

‘பிறர் மனை நோக்கா பேராண்மை’ என்னும் வள்ளுவப்பெருமான் வாக்கு இங்கு நினைவு கூறத்தக்கது.

ஐயா அவர்கள் பிறந்த ஊர் சென்று அங்கு தங்கியிருக்கும் காலங்களில் பழகியவர்கள், தெரிந்தவர்கள் எல்லாரும் சூழ்ந்து கொள்வார்களாம். அவர் ஊரில் தங்கியிருக்கும் வரை வருவோரிடமெல்லாம் ஓயாது நற்கருத்துக்களை பேசி வருவத னாலும் அதனால் பலரும் வந்து வந்து போவதனாலும் அந்த தெருவே கலகலப்பாக இருக்குமாம். அங்குள்ளோர் ’நீங்கள் ஊருக்கு வந்தால் வெண்கலக்கடையில் யானை புகுந்தது போன்று தெருவே கலகலப்பாக இருக்கிறது’ என்றும் ஊரை விட்டு சென்றிடின் வெறிச்சோடிக்கிடக்கிறது என்றும் கூறுவார் களாம்.

ஐயா ஊரில் இருந்த காலை, பின்லே உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர் சிவப்பிரகாசம், ஐயாவிடம் ஐயா நான் பள்ளியில் அடக்குமுறை என்கிற பொருள் பற்றி பேச வேண்டுமென பணித்துள்ளனர், மற்றொரு மாணவனுக்கு

அகிம்சையைப் பற்றி பேச பணித்துள்ளனர். காந்தியாரின் அகிம்சை கொள்கையைப் பற்றி போற்றியும் ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறையைப் பற்றி கண்டித்தும் பேசி வரும் இந்நாளில் நான் அடக்குமுறையைப் பற்றி என்ன பேசுவது எப்படி பேசுவது எனப் புரியவில்லை எனக் கூறி வருந்தினாராம். ஐயா அவர்கள் அப்பொருளின் சிறப்பினை யும் இன்றியமையாமையையும் குறித்து பல கருத்துக்களை கூறி வரவே, கேட்டவர் இதுவே போதும் மேலும் என்னால் தாங்க முடியாது எனக்கூற, ஐயா அவர்கள் தாம் கூறிய கருத்துக்களை கோர்வைப்படுத்தி விரித்துப் பேசுமாறு கூறினாராம்.

பள்ளியில் அம்மாணவரையே முதலில் பேச அழைத் துள்ளனர். பேசத் தொடங்கிய அம்மாணவர் அடக்குமுறை என்ற சொல்லை கேட்ட அளவானே அச்சொல் வெறுக்கத்தக்க அருவருக்கத் தக்க பொருளையுடையதாகக் கருதப்பட்டு வருகிறது. அது தவறு. உயர்ந்த பொருளை அச்சொல் கொண்டுள்ளது. அதைப் பிரித்தால் அடக்கு + முறை = நியதிக்கு கட்டுப்படு என்பதாம். எந்த ஒரு உயிர்ப் பொருளும் உயிரற்றப் பொருளும் நியதியை தன்னிடத்தே அடக்கி யிராவிட்டால் அப்பொருள்களால் நன்மையே விளையாது மாறாக தாறுமாறான தீமையே விளையும். உதாரணமாக அண்டத்தில் கோள்கள் தங்கள் வழியிலேயியங்காமல் மாறுபட்டு இயங்கினால் இந்த உலகம் நிலைக்குமா உயிர்கள் வாழ முடியுமா? நதி தன் போக்கில் செல்லாமல் அடிக்கடி மாறின் விளைவு என்னவாகும்? சீன நாட்டில் இவ்விதம் ஒரு நதி தன் போக்கை அடிக்கடி மாற்றிக் கொள்வதனால் பெரும் இழப்பு ஏற்படுவதைக் கண்டு அதை சீனாவின் துயரம் என்றே வரலாற்றில் குறித்துள்ளனர். அதே போல ஒரு கணவனும், மனைவியும் கணவன் மனைவி என்கிற கட்டுப்பாட்டில் ஒழுகாவிடின் அவர்கள் குடும்பம் என்னவாகும்? இவ்விதம் அண்டக்கோள்களும், உலக இயற்கையும் பிண்ட உயிர்களும் முறையான அடக்கத்தை - கட்டுப்பாட்டை மீறி நடப்பின் அதனால் விளைவது இம்சையே துன்பமே.

எனவே அகிம்சை, அடக்கு முறையின் ஒரு கூறே. அடக்கு முறை இல்லாவிடத்து அகிம்சை இல்லை என்னும் இன்னும் ஐயா கூறிய கருத்துக்களையும் விளக்கி பேசியுள்ளார். பின்னர் அகிம்சை யைப் பற்றி பேச வந்த மாணவர் ஓரிரு சொற்களைக் கூறி மேற்கொண்டு பேச முடியாமல் நிறுத்தி விட்டாராம். ஏனெனில் அகிம்சையைப் பற்றி பேச வேண்டிய கருத்துகள் யாவும் அடக்கு முறையில் உள்ளடக்கி கூறப்பட்டதனால் அடக்கு முறையைப் பற்றி பேசியவருக்கு மிக்க பாராட்டுக் கிடைத்ததாம். (ஐயா கூறியவைகளில் எடுத்துக்காட்டாக ஒரு சில கூறி விரிவஞ்சி மற்றவை விடப்பட்டன) மற்றுமோர் சமயம் முதல்வர் தலைமையில் ஆண், பெண் சமத்துவம், சமத்துவ மின்மை என்பன குறித்து அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பேச்சு போட்டி நடந்துள்ளது. அப்போட்டியில் ஐயாவின் நண்பர், அவரது கருத்துக்களை கேட்டறிந்து சமத்துவமின்மை என்பது குறித்து பேசியபோது சிறந்த பாராட்டுக் கிடைத்துள்ளது. எனினும் அரசியல் சட்டக் கோட்பாட்டினையொட்டி, ஆண், பெண் சமத்து வத்தை ஏற்க வேண்டியிருப்பதாக முதல்வர் அவர்கள் கூறி கூட்டத்தை முடித்துள்ளார்.

சமத்துவமின்மைக்கு ஐயா அவர்கள் கூறியவற்றில் ஒரு சில மட்டும் எடுத்துக்காட்டாக இங்கே எடுத்துக்காட்டி மற்றவை விரிவஞ்சி விடப்பட்டன. அகக்கூறாலும் புறக்கூறாலும் குணத்தாலும் செயலாலும் மற்ற எல்லா வகையினாலும் ஒரு சிறிதும் பேதமுறாது ஒத்த நிலையுடைய இரு பொருட்களை சமத்துவமுடையன என்று கூறுதல் பொருந்துமே ஒழிய அவற்றில் ஒரு சிறிது பேதமுற்றிருப்பினும் சமம் என்ற சொல்லால் குறிப்பிடுவது பொருந்தாவாம். உலகின் கண்ணுள்ள மாந்தர்களில் எல்லாவகையினும் ஒத்த இருவரை காண முடியாமை கண் கூடான உண்மை. இந்திரிய அறிவுக்கே புலனாகக்கூடிய மாற்றமுடைய ஆண் பாலர், பெண் பாலரை சமத்துவமுடையவர் எனக்கூறுவது எப்படி பொருந்தும்.

விலங்கினங்களில் சிங்கம், மாடு, ஆடு முதலியன, பறவை இனங்களில் கோழி, மயில் முதலியனவும் தோற்றத்தால்

மாறுபட்டுள்ளன. பெண்பாலர் தான் கருவுற்று குழந்தை பெற வேண்டியுள்ளது.மாயைக்கடந்த ஆன்ம அனுபவ விளக்கம் பெறும்போது பேதமற்று எல்லாம் ஒரு பொருளின் ஏகதேச விகற்பங்களே என்கிற உண்மை விளக்க அனுபவத்திலேதான் சமத்துவம், சமரசம் என்பது பொருளுடையதாகும். ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை என்று எடுத்துக்காட்டிய வள்ளல் பெருமானாரின் அருளுரையிலிருந்தே இவ்வுண்மை பெறப் படுகின்றது. மற்று, இம்மாயா எல்லையில் சமத்துவ நிலைக்கு உரியவை என்கிற உண்மை கருத்தின் அடிப்படையில் தான் ஒருவரை ஒருவரும் பிற உயிர்களையும் நேசித்து, பழக வேண்டியதை சமத்துவம் என்கிற சொல்லால் உபசார வார்த்தையால் கூறப்படுகிறது.

இந்த அடிப்படை உண்மையை எடுத்துக்காட்டாதும், மறந்தும் சமத்துவம் என்கிற சொல் தகாத இடங்களிலெல்லாம் கையாளப்படுவதன் காரணமாகத்தான் தகுதியறிந்து அடங்கி ஒழுகும் பண்பு அருகி, ஆணவம் மேலோங்கி ஒருவரை ஒருவர் மதியாது ஒழுகும் இழிநிலை பெருகி வருகிறது. இனியேனும் தகாத இடங்களில் சமத்துவம் என்னும் வெற்றுரை பேசி விழலுக்கு நீர் இறைக்கும் செயலினைத் தவிர்ப்போம்; என்பனவாம்.

எல்லாத் தொழிலும் செய்யக்கூடிய வல்லமையிருந்தும் பெரிய அளவில் பல தொழிற்கூடங்கள் நடத்தும் ஆற்றல் இருந்தும் அநித்திய பொருள் நாட்டத்தில் சென்றால் ஆன்மீக நெறிக்கு தடை ஏற்படும் எனக் கருதி அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே பொருள் தேவை, அந்த அளவு பொருளைத் தரக் கூடிய தொழில் போதும் என தொழிலைச் சுருக்கிக் கொண்டு பழுதுற்ற காரின் வடிவமைப்புகளை சரிசெய்வதும் அவற்றிற்கு வண்ணம் தெளிப்பதும் என்கிற அளவில் ஓரிடத்தில் வாடகை கொடுத்து தொழில் கூடம் அமைத்து தொழில் செய்து வந்தார்கள்.

மெய்ஞ்ஞான வித்தகரும் வேதாந்தப் பண்டிதரும்

வேலூரில் பீடி இலை வாணிபம் செய்து வந்த ஒரு முகம்மதி யரிடம் கணக்கெழுதும் தொழில் செய்து வந்த மாணிக்க

முதலியார் என்பவர் நாற்பதுமுறை வேத சாத்திரங்களைத் திரும்பத் திரும்ப ஓதி பயின்றுள்ள ஒரு சிறந்த வேதாந்தியும் தர்க்கத்தில் மிக வல்லவருமாவார். அவர் ஐயா அவர்களை பலமுறை அவரது தனிமையையும் தோற்றத்தையும் கண்ணுற்று அவர் ஒரு யோகியாக இருக்க வேண்டுமெனக் கருதி அவரை சந்திக்க வேண்டுமென முயன்று ஒருமுறை ஐயா அவர்களை மினர்வா கபே உணவு விடுதியிலிருந்து வெளியே வந்த போது சந்தித்துள்ளார். அவர் ஐயாவிடம் உங்களிடம் ‘‘ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். கேட்கலாமா’’ எனக் கேட்டுள்ளார். “கேட்கத் தகுந்ததைக் கேளுங்கள்” என ஐயா கூறியுள்ளார். ‘‘உங்கள் இலட்சியம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்’’’ என கேட்டுள்ளார்.

ஐயா அவர்கள் அந்த வினாவிலிருந்து அவர் ஒரு வேதாந்தி என்பதையும் அவரது பிடிக்குள் தன்னை சிக்க வைக்க இந்த வினாவினைத் தொடுத்துள்ளார் என்பதையும் தனக்குள்ளே தீர்மானித்து அந்த வேதாந்த கருத்தின் அடிப்படையிலேயே “நானே இலட்சியமாக இருக்க எனக்கு வேறோர் இலட்சியமா? அப்படியொன்று இருக்குமாயின் அது சத்தியமாகுமா? உமது கேள்வியே குற்றமுடையது” எனப் பகர்ந்துள்ளார்.

மாற்றானை வீழ்த்த எய்யப்பட்டக்கணையே திருப்பி எய்யப்பட்டு எய்தவனையே தாக்கி வீழ்த்தியது போலா யிற்றாம் அவரது நிலை. அவரது நாற்பதாண்டு கால வேத நூல். பயிற்சி சில நொடிப்பொழுதிலே சரிந்து விழவே கதி கலங்கிப் போனாராம். அவர் நிலை கண்டு ஐயா இரக்கமுற்றுள்ளார். அந்நாள் தொட்டு மாணிக்க முதலியார் அவர்கள் ஐயாவிடம் அடிக்கடி வந்து உரையாடுவாராம். அவரது வேதநூல் பயிற்சியையும் தர்க்க நூல் புலமையையும் கொண்டு ஐயா அவர்களை எப்படியாவது மடக்க வேண்டுமென பல காலும் முயன்று பற்பல விதமாக கேள்விகளைக் கேட்பாராம். அத்தனைக்கும் தடை சிறிதுமின்றி தக்க மாற்று விடை ஐயாவிடம் பிறக்குமாம்.

தான் தோல்வியையே தழுவி வந்தமையால் சிற்சில நேரங்களில் அவருக்கு சினமும் எழுமாம். ஒரு முறை அவர்

'நான் என்ன கருத்தினைக் கூறினும் அதற்கு உடன்படக் கூடாது என்பது உமது எண்ணம் போலும்' என அவரது சினத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு ஐயா அவர்கள் சிறிதும் பதட்டமின்றி அமைதியாக 'முடிந்தால் முயன்று பாருமே' என மொழிந்தாராம். மாணிக்க முதலியார் 60 வயதை தாண்டியவர். ஐயாவோ முப்பது வயதுக்குட்பட்டவர். தனது நீண்ட கால நூற்படிப்பு ஒரு இளைஞரிடம் பயனற்று நிற்பது கண்டு ஐயாவை அவர் மிகவும் வியந்து போற்றுவாராம். அவரது நுணுக்கமான சிக்கலான வினாவிற்குக்கூட தெளிவான விடை ஐயாவிடம் பிறப்பதைக் கண்டு மகிழ்ந்து மலைத்து விடுவாராம்.

சில இடங்களில் தாங்கள் கூறுவது வேதத்தில் இல்லை. சாத்திரத்தில் இல்லை. யுத்தி பொருத்தம்... யுத்தி பொருத்தம் என ஆவியுண்டவர் போல் உரைத்தவாறே பிரமித்து நிற்பாராம். ஐயாவின் பேராற்றலை உணர்ந்ததனால் அவரிடம் மதிப்பும் நம்பிக்கையும் கொண்டு வேதம் கற்ற அவர், அவரது சொந்த வாழ்விலும் உலக நடப்பிலும் ஏற்பட்ட ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு காரணம் கேட்டு தெளிவாராம். வேதம் கற்ற நான் வேதமறியாத ஒருவரிடம் அடிமைத் தொழில் செய்யவும். தான் வறியவராய் இருப்பதும் மற்றவர் செல்வம் படைத்திருப்பதும் ஏன் என்பனவற்றிற்கெல்லாம் தன்னால் காரணம் காண முடியாது, ஐயாவிடம் கேட்டு அறிந்து அமைதி பெறுவாராம்.

அப்போது வடார்க்காடு மாவட்ட காவல்துறை கண் காணிப்பாளராக பணிபுரிந்து வந்தவருக்கு (வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்)மாலை நேரத்தில் தமிழ்மொழி கற்பித்து வந்துள்ளார். ஐயாவின் ஆன்மீக சிந்தனைகள் பற்றியும் ஞானத்தெளிவு குறித்தும் கண் காணிப்பாளரிடம் மாணிக்க முதலியார் தெரிவித்துள்ளார். அதனால் ஐயாவை நேரில் கண்டு சில விளக்கங்களைத் தெரிந்து கொள்ள விரும்பி நேரில் அழைத்து வருமாறு மாணிக்க முதலியாரிடம் கூறவே, ஐயாவிடம் சென்ற போது அவர் கண்காணிப்பாளரின் விருப்பத்தைத் தெரிவித்து வருமாறு அழைத்துள்ளார்.

அப்போது ஐயா ஞானத்தை விரும்புவோர் அது உள்ள இடத்தை தேடி, நாடி அதைப் பெற வேண்டும்; அதுதான் ஞானத்துக்கு கொடுக்கும் மரியாதை; அப்போதுதான் ஞானம் பெற முடியும். ஞானம் என்பது மனிதன் தேடியலைந்து பெறுவது. மனிதனை தேடிப்போய் சேருவது ஞானம் அல்ல. அது அஞ்ஞானம். இது ஞானபீடம். அவர் ஞானத்தை விரும்பினால் இங்கே வரட்டும். அவர் வீட்டில் ஏதாவது வேலை செய்ய வேண்டுமா, மண்சுவர் வைக்க தேவைப்பட்டு அழைத்தால் கூட வருவேன். ஞானம் போதிக்க வர மாட்டேன் என ஞானமிடுக்கோடு கூறியுள்ளார். அதைக்கேட்ட மாணிக்க முதலியார் திகைத்தும், சோர்ந்தும் நான் நாற்பதாண்டு காலம் வேத, சாத்திரங்களைப் பயின்றவன் என கர்வம் படைத் திருந்தேன். ஆயினும் இந்த விளக்கம் எனக்குத் தோன்ற வில்லை. என்னுடையது வெறும் ஏட்டுப்படிப்பு; உங்களுடை யது ஞான நடை என்னும் உண்மையை உணருகின்றேன் என்று கூறிப் பணிந்து சென்றுள்ளார்.

இவ்விதம் வந்து வந்து உரையாடி கேட்டுத் தெளிவு பெற்று வந்த மாணிக்க முதலியார், ஒரு நாள் என்ன தோன்றியதோ மீண்டும் ஐயாவை சந்திக்கும் வாய்ப்பு தனக்குக் கிட்டுமோ! கிட்டாதோ என்னும் ஐய உணர்வு காரணமோ அல்லது வேறுயாதாலோ ஐயாவைப் பற்றித் தான் அறிந்து உணர்ந்த உண்மைகளை கீழ்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

’நான் நாற்பதாண்டு காலம் சர்வ வேத சாத்திரங்களையும் கற்றறிந்தவன் என்றும் இந்த வடஆற்காடு மாவட்டத்தில் என்னுடன் தருக்கம் செய்ய வல்லவர் ஒருவரும் இல்லை யென்றும் மாணிக்ககல்லே கல்லு, மாணிக்கம் சொல்லே சொல்லு எனக்கு ஈடு ஒப்பு உயர்வு ஒருவரும் இல்லையென்றும் இறுமாப்புற்றிருந்தேன். உம்மை வேத சாத்திரங்களை கற்று அறியாத ஒரு சாதாரண யோகி என்று எண்ணியிருந்தேன். ஆனால் நீரோ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே சர்வ வேத சாத்திரங்களையும் கற்று உணர்ந்து விட்டு விட்டீர், நான் இன்றுதான் பயில ஆரம்பித்திருக்கிறேன் என்ற உண்மையை உணரப் பெறுகின்றேன்’ என்பது அவரது வாக்கு. அவரது

உள்ளுணர்விலேயிருந்து எழுந்த உண்மைகளை நற்சான்றாகக் கூறிச் சென்ற அவர் மீண்டும் ஐயாவை வந்து சந்திக்கவே யில்லை.

வடலூர், சித்தி வளாகத் தொடர்பு

ஐயா அவர்கள் வேலூரில் தொழில் செய்து கொண்டு வரும் காலை வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் ஓராண்டு அல்லது ஈராண்டுக் கொருமுறை தாம் பிறந்த ஊராகிய ராஜமன்னார் கோயில் சென்று வருவாராம். அவ்விதம் சென்று திரும்பி வரும் வழியில் சிதம்பரம் ரெயில் நிலையத்தில் இறங்கி, போதிய பேருந்து வசதியில்லாததால், நடைப்பயணமாக வள்ளல் பெருமானால் உத்தர ஞான சிதம்பரம் என்று குறிக்கப் பட்டுள்ள வடலூர் வருவாராம். அங்கு அப்பெருமானால் தோற்றுவிக்கப் பட்டுள்ள தருமச்சாலை மற்றும் சத்திய ஞான சபையை வழிபட்டு அப்பெருமான் நிறைவு பெற்ற சித்தி வளாகம் (பெயர் வழக்கு மேட்டுக்குப்பம்) செல்வாராம். அங்கு அப்பெருமான் தாம் பெற்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பேற்றினை மற்ற உலக மாந்தரும் பெற்று உய்யும் பொருட்டு தாம் வைத்திருந்த விளக்கினை வெளியில் கொண்டு வந்து வைத்து அதையே கடவுளாகக் கருதி வழிப்பட்டு வாருங்கள் என அருளுரைக் கூறித் திருக்காப்பிட்டுக் கொண்ட திரு அறையையும், அத்திரு விளக்கினையும் வழிபட்டு பின் நடையாக பண்ருட்டி ரெயில் நிலையம் அடைந்து ரெயில் ஏறி வேலூர் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தாராம்.

ஒருமுறை சித்தி வளாகம் வரும்போது இரவு மணி 7 இருக்கும். திரு விளக்கின் முன்பு ஓர் அம்மையார் ரவி வர்மா வரைந்த பார்வதி போன்ற தோற்றப்பொலிவோடு உருக்கமாக வழிபட்டு நின்றிருந்துள்ளார். அவர், ஐயா அவர்களைக் கண்டதும் அவரை நன்கு அறிந்தவர் போல உரையாடி யுள்ளார். தான் கும்பகோணம் அடுத்த ஓர் கிராமம் என்றும் தாசி பரம்பரை யென்றும் தனக்கு ஒரு பெண்ணும் ஆணும் இருப்பதாகவும் கூறி ஐயா அவர்களின் ஊர் தாய் தந்தையரை கேட்டு அவர்கள் தனக்குத் தெரியும் என்றும் ஐயா அவர்களை, அழகும் இளமையும் ஆற்றலுமுடைய நீர் ஏன் இவ்விதம்

இருக்கின்றீர் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்த வேண்டுமென்றும் வேண்டியுள்ளார்.

ஐயா, அவருக்கு தக்க மறுப்பு அளிக்க, நீண்டவாதம் நடந்துள்ளது. அந்த அம்மையார் கெஞ்சி கண்ணீர் வடித்து எனக்காக நீர் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கூறி உனது தாய் தந்தையிடம் வந்து சொல்லி உனக்கு திருமணம் செய்து வைப்பேன் எனக் கூறியுள்ளார். ஐயா அவர்கள் தனக்குள்ளே இவர்களைப் பார்த்தால் பார்வதி போன்று இருக்கிறார்கள், எனக்காக ஏன் இப்படி கதறுகிறார்கள். இவர்களிடம் இருந்து எப்படி தப்பிச் செல்வது என எண்ணிக் கொண்டிருந்தபோது அந்த ஊர்காரர் ஒருவர் வந்து அம்மா பால் தயாராக இருக்கிறது வாருங்கள் என அழைக்க உனக்கும் பால் தருகின்றேன் என்று கூற ஐயா வேண்டாம் என்றுள்ளார். அவர் சென்றபின் ஐயா இனி இங்கு இருக்கக்கூடாது எனக்கருதி பக்கத்தில் ஒரு குடிசையில் இருந்த ஒருவரை அழைத்து அவரிடம் தண்ணீர் வாங்கி அருந்திவிட்டு அன்று இரவே (மணி 12 இருக்குமாம்) வடலூர் வந்து தங்கி காலை பண்ருட்டிக்கு நடையாக வந்து ரெயில் ஏறி வேலூர் வந்துள்ளார். அந்த அம்மையாரின் மகன் நாதசுர வித்வான் ராஜரத்தினம் பிள்ளையிடம் நாதசுரம் பயின்று வந்ததாக கூறியுள்ளார்.

மற்றுமோர்முறை சித்திவளாகம் சென்ற சமயம் திரு விளக்கினை பணிந்து போற்றி, திருவறை வழி பட வந்தபோது திருவிளக்கிற்கு தொண்டாற்றிவந்த வயது முதிர்ந்த சங்கரலிங்க நாடார் என்பவர் திருவறைக்கு தீப ஆராதனை காட்ட, அவரிடம் அத்திரு அறையை திறந்து காட்டுமாறு ஐயா கோரியுள்ளார். சாவி மட்டுமே என் வசம் உள்ளது, திறக்கும் அதிகாரம் எனக்கில்லை, யாரையும் உள்ளே செல்ல அனுமதிப்பதில்லை எனக் கூறியுள்ளார்.

ஐயா அவர்களுக்கு உணர்ச்சி மேற்பொங்க, “தகுதியற்ற வர்கள் யார் யாரோ உள்ளே சென்று வரும்போது தகுதியுடைய எனக்கு உரிமையில்லையா? திறந்திடுக’’ என அதிகார மிடுக்குடன் கூறவே, அவர் திகைத்து வாசலில் ஓர் இடத்தில்

சாவியை கீழே வைத்து, ''நீரே திறந்து கொள்க'' எனக் கூறியுள்ளார். சற்று நேரம் ஐயா அவர்கள் அமைதியுடனிருந்து ''நான் பார்த்து விட்டேன் சாவியை எடுத்துக்கொள்க''வெனக் கூறியுள்ளார்.

கட்டளையை மீறி திறப்பது குற்றம் என்கிற உணர்வு ஒரு புறமும் அதே நேரத்தில் வள்ளல் பெருமான் சித்தி பெற்ற அந்த புனித இடத்தை கண்ணுற வேண்டுமென்கிற உரிமை உணர்வு ஒரு புறமும் ஐயாவின் அகத்தே எழுந்திருக்க வேண்டும். வள்ளல் பெருமான் 'உரியவர்கள் வருங்காலத்து தானே திறக்கும்' என செப்பியுள்ள அருள்மொழியின் படி ஐயா அவர்களின் அகத்தே அப்புனித அறை தானே திறந்து காட்சியளித்திருக்க வேண்டும்! அக்காட்சியை அகத்தே சுண்ணுற்றதினாலேயே அறையை திறக்குமாறு உரிமை கோரியவர், சாவியைக் கீழே வைத்தும், எடுத்து திறந்து பாராமல் பார்த்துவிட்டேன், சாவியை எடுத்துக் கொள்கவெனக் கூறி யுள்ளார்.

அந்தப் பெரியவர் சாவியை கீழே வைத்த இடத்திலேதான் ஐயா அவர்கள், பின்னர் ஐந்து கொத்து விளக்குகள் அமைந்த சுடரொளி கம்பத்தை (தற்போது உள்ளபடி) நிறுவினார்.

ஐயாவின் இளமைப் பொலிவையும் உரிமை முழக்கத்தையும் நடந்த நிகழ்ச்சியையும் கண்ட அம்முதிய வருக்கு ஐயாவினிடத்திலே அவர் சித்தரோ (அ) முனிவரோ என்னும் அச்சமும் அடக்கமும் தோன்றியுள்ளது. அதனால் சித்தி வளாகத் திருமாளிகையின் முன்புறத்தில் அமைந்திருந்த அவரது குடிலில் (அந்த இடம் தற்போது ஜோதி வெளியாக, சித்தி வளாகக் கோயிலின் முகப்பு வாயிலாக ஐயா அவர்களால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது) அந்த இரவு ஐயா அவர்களை தங்க வைத்து உபசரித்துள்ளார்.

அக்குடிலின் முன்புறத்தே சித்தி வளாகக் கோயில் திரு விளக்கின் நேர் எதிரே அவ்விளக்கினை தரிசித்தவாறே ஐயா அவர்கள் ஒரு கயிறு கட்டிலில் அமர்ந்திருக்க அம்முதியவர் திருவருட்பா ஆறாந்திருமுறை பாடல்கள் சிலவற்றை உள முருகக் கண்ணீர் மல்க இரவு முழுதும் பாடிக் கொண்டே

யிருந்துள்ளார். அருட்பாவின் இன்னொலியை செவியருந்த திருவிளக்கின் அருள் ஒளியை கண் பருக, அவ்வருட் போதத்திலே ஐயா அவர்கள் திளைத்திருக்க, உலக விருள் விடிய கதிரோன் மெல்லென வெழும் அருணோதயம் கண்டு ஐயா அவர்கள் அங்கிருந்து புறப்பட, அப்பிரிவினை தாங்க முடியாது ஏங்கும் அப்பெரியவரின் உள்ளத்தை அவரது முகம் வெளிப்படுத்த அவ்விடத்தை விட்டுப்பிரியாது பிரிந்து வந்துள்ளார்.

பிரியாது பிரிந்த அந்த இடந்தான் ஜோதி வெளியாகவும் இரவெல்லாம் அருட்போதத்தே திளைத்து அமர்ந்திருந்த அந்த இடத்தில்தான், வானகத்தாரையும், வையகத்தாரையும், மற்றகத்தாரையும்; வான் நோக்கியும் வையம் கீழ் நோக்கியும் அமைந்துள்ள இரு பெரு விளக்குகளும் வட்ட வடிவத்தில் அமைந்துள்ள மற்ற எண் விளக்குகளும் ஒளிக்கரம் நீட்டி வழிகாட்டி மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடவே சமரச சுத்த சிவ சன்மார்க்க சங்கத்தை வந்தடைமின் என்று அறைகூவி அழைக்க ஜோதி தம்பம் ஐயா அவர்களால் அமைக்கப்பட்டு பொலிவுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இம்மாதிரி ஒரு தம்பம் அமைப்பதற்கு அருட்பாவில் ஆதார மில்லை என துறவி கந்தசாமி அவர்கள் கூறியதாக கேள்வி யுற்று வள்ளல் பெருமான் அன்பர்களுக்கு 'நீங்கள் சமரச சுத்த சன்மார்க்க நெறியில் செல்லுங்காலத்து கண்டறியாததை காண்பீர்கள் கேட்டறியாததை கேட்பீர்கள்...' என்று அருளுரை பகர்ந்துள்ளதை நினைவு கூர்ந்து அமைந்தார். பின்னர் சில நாட்கள் கடந்து ஐயா அவர்கள் அருட்பாவினை எடுத்துத் திறந்தபோது வள்ளல் பெருமான் சிவகாரண பூரண தம்பம் குறித்து தந்த விளக்கமும் அதன் வரைபடமும் கண்ணுற்று வியந்து ஜோதி தம்பம் அமைந்தது அருட் செயலேவென விளம்பினார்; பூரித்தார். (இந்நிகழ்வு ஜோதி தம்பம் அமைந்தப் பின் நடந்தது)

வேலூர் கோட்டை மைதானத்தில் மாலை நேரங்களில் சென்று கோட்டையைச் சுற்றி வரும் வழக்கம் ஐயாவுக்கு உண்டு. அந்த மைதானத்தில் 20 முறை வேதங்களை ஓதியறிந்த

வயது முதிர்ந்த சாஸ்திரி ஒருவர் வந்து அமர்வதைக் கேட்டு வியப்புற்று, அங்கு சென்று பலமுறை அவரைப் பார்த்தும் இருக்கிறார். அப்போது ஐயாவுக்கு வேத வாக்கியமான ஜெகத லட்சனை அஜெகத லட்சனை ஜெகதா ஜெகத லட்சனையின் விளக்கம் தெரிந்து கொள்ள ஏக்க முற்றிருந்த நேரம். அதனால் அந்த வேதாந்த பெரியவரை அடுத்து அவ்வாக்கியத்தின் பொருள் அறியும் விழைவினை தெரிவித்துள்ளார்.

ஐயாவின் இளமைப் பருவத்தைக் கண்டு இந்த இளம் வயதில் வேதப்பொருளை கேட்பதை அறிந்து வியந்து நீ யார்? எந்த ஊர்? எந்த ஜாதி? என்ன தொழில்? என்கிற வினாக்களை எழுப்பி தெரிந்து கொண்டு நாளை வா என்று சொன்னாராம். அவரது ஏக்க பசிக்கு உரிய உணவு கிடைக்கும் என்று நம்பியிருக்க "நாளை வா" என்ற விடை கிடைக்கவே, தன் மனதுக்குள்ளேயே 'இன்றைய பசிக்கு நாளை உணவா?' என்று வருந்தி எண்ணியவாறே நடந்துள்ளார். ஐயாவின் உண்மை யான ஏக்கப் பசி கண்டு ஆண்டவர் மேலும் பசியினால் வாடப் பொறாது அவ்வேத வாக்கியத்தின் பொருளை அகத்தே விளக்கி பசியாற்றியுள்ளார். அந்த பொருளாவது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை என்பதாம் (சித்தாந்தத்தில் உயிருக்குயிரான இறைவன் வேறாகவும், ஒன்றாகவும், உடனாகவும் இருப்பதையுணர்த்தும் பொருளாகத் தோன்றுகிறது).

அந்த இளமைப் பருவத்திலே வானத்திலே நட்சத்திரங்கள் தொங்கிக் கொண்டிருப்பது போன்று, ஐயாவின் உள்ளமாகிய வானத்திலே ஐயங்கள் தொங்கி கொண்டிருக்குமாம். அவ்வப்போது ஒவ்வொன்றினை எடுத்து அசைபோடுவாராம். இவ்விதம் இருந்த ஐயப்பாடுகள் யாவும் காலப்போக்கில் எங்கு சென்று மறைந்தனவோ என்று வியப்புறும் வண்ணம் தெளி வினைப் பெற்றுள்ளார். ஏதாவது ஓர் ஐயம் எழினும் உடனே அதற்கு விடை கிடைத்துவிடும் என்பார். இதிலிருந்து ஐயாவின் பக்குவ முதிர்ச்சினையும் அதனால் பெற்றுள்ள அருள் பேற்றினையும் நம்மால் உய்த்துணர முடிகிறது.

வாக்குறுதி வலியுறுத்துதல்

ஒரு சமயம் ஒரு எந்திரத்தை பழுது பார்க்க நேர்ந்த போது அதற்கு பொருத்தமான பிஸ்டன் ஒன்று எங்கும் கிடைக்காமல் சென்னையில் பிராட்வேயில் அமைந்திருந்த ஒரு பெரிய நிறுவனத்தில் சரியான அளவினை கொடுத்து அந்த அளவில் ஒரு பிஸ்டன் கேட்டுள்ளார். கல்கத்தாவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு எழுதி அங்கிருந்துதான் அதை தருவிக்க வேண்டுமென உரிமையாளர் கூறி ஒரு குறித்த காலங்கழித்து வருமாறு கூறியுள்ளார். அவ்விதம் சென்ற போது இன்னும் வரவில்லை என்று கூறி மீண்டும் ஒரு கெடு வைத்து அனுப்பி யுள்ளார்.

ஐயாவின் எளிய உடையைக் கண்டு நாட்டுப் புறத்தார் என எண்ணி அலட்சியமாக இவ்விதம் பல கெடுக்கள் வைத்துள் ளார். கடைசியாக ஐயா மிகவும் கண்டிப்பாக முடியும் அல்லது முடியாது எனக் கூறுங்கள் எனக்கேட்க உங்கள் முகவரிக்கு இன்னும் 10 நாட்களில் அனுப்பிவிடுவதாகக் கூறி அனுப்பி யுள்ளார். அவ்விதம் அனுப்பி வைக்கப்பட்ட அந்த பிஸ்டன் ஏற்கனவே ஐயாவிடம் பொருந்தாத அளவில் இருந்த பிஸ்டன் அளவிலேயே இருந்துள்ளது. அதை எடுத்துக் கொண்டு அந்த நிறுவனத்துக்குச் சென்றுள்ளார். பலமுறை நடக்க வைத்தும் நீண்ட காலங்கடத்தியும் கொடுத்த அளவில் இல்லாமல் மாறுபட்ட அளவில் அனுப்பி வைத்ததால் ஐயா அவர்கள் சற்று வேகமாக அதை மேசையின் மீது வைத்துள்ளார்.

உரிமையாளர் என்ன கோபமாகக் காணப்படுகிறீர்கள் எனக் கேட்க இதை நான் வீசி எறிந்திருக்க வேண்டும், பெருந்தன்மையால் மேஜையின் மீது வைத்தேன். இத்தனை பெரிய நிறுவனம் வைத்துக்கொண்டு இவ்வளவு நாட்கள் கடத்தி நான் கொடுத்த அளவில் ஒரு பிஸ்டனை தயார் செய்து அனுப்ப இயலவில்லை. நீங்கள் ஆர்டர் கொடுங்கள் எந்த அளவில் எத்தனை வேண்டும் நான் தயார் செய்து அனுப்பு கிறேன் என வீரமுழக்கம் செய்துள்ளார். உரிமையாளர் சிரித்துக்கொண்டே ஐயாவை கட்டிப்பிடிக்க வந்துள்ளார். ஐயா ஆவேசமாக 'தொடாதீர், நீர் ஓர் பிணம். உமது

சொல்லுக்கு உயிர் இல்லை' என இடித்துரைக்க, அவர் அசைந்து நிற்க, அந்நிறுவனத்தில் பணி செய்து கொண்டிருந்த ஆண், பெண் பாலார் பலரும் திகைப்போடு ஐயாவை நோக்கி யுள்ளனர். ஐயாவை சமாதானப்படுத்த உரிமையாளர் ஒரு வேலையாளை அழைத்து காப்பி வாங்கி வருமாறு பணித்துள்ளார். உம்மிடம் அதை நான் ஏற்க மாட்டேன் என ஐயா மறுத்துள்ளார். உரிமையாளர் நீங்களாவது எனக்கு வாங்கிக் கொடுங்கள் எனக் கோரியுள்ளார். நான் இருக்குமிடம் வாரும் வாங்கித் தருகிறேன் என மறுமொழி கூறி வெளியேறி யுள்ளார். பின்னர் வேலூரிலேயே தானே முயன்று ஒரு பட்டரையில் தன்னிடமிருந்த அந்த பிஸ்டனை கடைந்து பொருத்தியுள்ளார். தனக்கு ஆற்றல் இருந்தும் பெரு முயற்சியை ஏன் மேற்கொள்ள வேண்டும், எளிதாக வாங்கி பொருத்தி விடலாம் என எண்ணியே மேற்கூறிய வகையில் முயன்றுள்ளார். ஒவ்வொருவரும் தன் சொல்லை பிறழாது காக்க வேண்டும், காக்கத் தவறின் அவர் உயிருடன் இருப் பினும் நடைப்பிணமே என்பது ஐயாவின் பேராத முடிபு.

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

என்னும் தேவரின் வாக்கும் இங்கு ஒத்து நோக்க வல்லது.

தூய நெஞ்சம்

ஐயா அவர்கள் ஒரு சமயம் தனது வேலைக்காக வண்ணங்கள் (Paints) வாங்கும் பொருட்டு சென்னை சென்று வழக்கமாக வாங்கும் (ஒக்ஸ் (Oks) கம்பெனி) கடையில் தேவையான வண்ணங்கள் பெயர் அடங்கிய பட்டியலைக் கொடுத்து ஃபில்டெக்ஸ் நிறுவனத்தில் (Fil Tex) தயாரிக்கப் பட்ட கருப்பு மற்றும் குங்கும வண்ணங்களை (Black & Marune (Colour) கொடுங்கள் எனக் கோரியுள்ளார். அப்போது இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலமாதலால் அமெரிக்க நாட்டு ஃபில்டெக்ஸ் நிறுவன தயாரிப்பு வண்ணங்களுக்கு மிக்கத் தேவை (Demand) ஏற்பட்டிருந்தது. அதனால் அந்த கடை உரிமையாளர் ஐயா

வழக்கமாக வாங்குபவர் என அறிந்தும் அந்த நிறுவனத் தயாரிப்பு இல்லை, வேறு நிறுவனத் தயாரிப்பு உள்ளது தரத்திலோ விலையிலோ மாற்றம் ஏதும் இல்லை, நிறுவனப் பெயர்தான் மாற்றம் எனக் கூறியுள்ளார். வேறு கடைகளில் சென்று விசாரித்தும் (ஐயா குறித்துக்கேட்ட) அந்த நிறுவன தயாரிப்பு இல்லை என்பதை அறிந்து மீண்டும் அந்த முதல் கடைக்கே வந்து வேறு நிறுவனத் தயாரிப்பு வண்ணங்களையே வாங்க முற்பட்டுள்ளார். அப்போது அந்த கடையில் உள்ள ஐயாவுக்குப் பழக்கப்பட்ட ஒரு விற்பனையாளர் மூலம் ஐயா கேட்ட நிறுவனத் தயாரிப்பு இருப்பதாகவும் வேறு கடைகளில் இல்லாததால் அதிக விலைக்கு கள்ள வாணிபம் செய்யப்படுகிறது என்கிற உண்மையை அறிந்து சென்னையில் ராஜூ என்பவரிடம் சென்றுள்ளார்.

அந்த ராஜூ என்பவர் ஐயாவிடம் தொழிற் பயிற்சி பெற்றவர். சென்னையில் தொழில் தொடங்கி பெரிய அளவில் வளர்ந்து பெரும் பொருள் ஈட்டியுள்ளவர். அஞ்சாத உள்ளமும் உடல் பலமும் கொண்டவர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். சென்னையில் செல்வாக்கு உள்ளவர். அந்த காலத்தில் போக்கிரித்தன்மை உடையவர்கள் கூட அவர் பெயரைக் கேட்டால் அடங்கி விடுவர். அவரிடம் ஐயா அவர்கள் அந்த கடைக்காரனைப் பற்றிக் கூறி வருந்தியுள்ளார்.

தொழில் முறையில் அந்தக் கடைக்காரர் ராஜூ என்பவருக்கும் பழக்கமுடையவர். அதனால் தாங்கள் கோரியவைகளையே வாங்கி வருகிறேன் எனக்கூறிச் சென்று அந்தக் கடைக்காரரை கோரியுள்ளார். வாடிக்கையாளர்கள் ஆன தால் அதிக விலை கோரி பெற அஞ்சி ஐயாவிடம் கூறியது போலவே அவரிடமும் கூறியுள்ளார். அந்தக் கடை விற்பனை யாளர்கள் பலரும் ராஜீ என்பவருக்கு நன்கு அறிமுகமான வர்கள். ஆதலால், கடைக்காரன் கூறுகிறபடி அவன் தரும் வண்ணங்களுக்கே விலைப் பட்டியல் வாங்கிக் கொண்டு (ஐயா கோரும் வண்ணத்துக்கும் கடைக்காரன் தரும் வண்ணத்துக்கும் நிறுவன விலையில் மாற்றமில்லை) அவர்களிடம் (Store Keeper) கூறி வண்ண டப்பிகளை அடுக்கி

கட்டும்போது ஐயா கோரிய நிறுவனத் தயாரிப்பு டப்பிகளை வைத்துக்கட்டி அனுப்பும்படி ஏற்பாடு செய்யலாம் என எண்ணிக்கொண்டு ஐயாவிடம் சென்று தனது எண்ணத்தை கூறியுள்ளார். ஐயா அவர்களோ அதற்கு சற்றும் இசைந்திலர். கடைக்காரனிடமே சொல்லி கேட்டு வாங்கலாம் எனக் கூறியுள்ளார்.

வாடிக்கையாளர்களாகிய நம்மிடமே அந்தக் கடைக்காரன் பொய் கூறி வஞ்சிக்கிறான், அதனால் கடைக்காரனுக்கு உரிய விலையில் நட்டம் இல்லை அவனை அப்படித் தான் செய்ய வேண்டும் எனக் கூறி நீங்கள் புறப்படுங்கள் நான் வாங்கி அனுப்புகிறேன் எனக்கூறவே ஐயா பலமுறை மறுத்தும் நீங்கள் ஏதும் இதில் தவறு செய்யவில்லை, கோரிய வண்ணத்தையும் விலைப்பட்டியலையும் (Bill) நான் வாங்கி அனுப்புகிறேன் எனக் கூறி அனுப்பியுள்ளார்.

எனினும், ஐயாவுக்கு மனம் இடந்தராததால் உணவும் கொள்ளாமல் வேலூர் வந்துள்ளார். அதையே எண்ணி எண்ணி மனதில் பெரும் போராட்டம் நிகழந்துள்ளது. அன்று இரவும் உணவு கொள்ளாது உறக்கமின்றி உடல் சோர்ந்து மனமும் தளர்ந்து சிறு மயக்க நிலையிலே தரையில் சாய்ந்துள்ளார். அப்போது அவரது மனோவெளியிலே மகாலட்சுமியே பூலோகத்தில் சீதையாய் பிறந்து மாயையால் படாதபாடு பட்டாள் என்றால் அற்ப ஜீவனாகிய நீ எம்மாத்திரம் என்னும் அசரீரி வாக்கு கேட்டுள்ளது. உடன் ஐயாவுக்கு நீ வேண்டி விரும்பி தவறு இழைக்கவில்லை. ஊழ்வலியே இதற்குக் காரணம் என்னும் தெளிவு பிறந்துள்ளது. விரைவிலேயே அவரது உடலும் மனமும் சோர்வகன்று தெளிவுற்று பழைய நிலைக்கு மீண்டுள்ளன. எத்தவறு இழைத்தேனும் தனது காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டி வீறு கொண்டு திரியும் இன்றைய உலகத்துக்கு இது ஒரு நற்பாடமாக அமையும்.

ஞானத்தேடல்

ஒருமுறை தன்னுடன் பழகிவந்த மணி என்பவருடன் திருவண்ணாமலை சென்றுள்ளார். ரமணர் ஆசிரமத்திற்கு

அருகே இருந்த சிவானந்த முனிவர் குடிலுக்கு சாந்தானந்தம் என்பவர் ஐயாவை அழைத்துச் சென்றுள்ளார். ஐயா அமைதியாக அமர்ந்திருக்க அந்த முனிவர் ஐயாவைப் பார்த்து ஒன்றும் கேளாமல், பேசாமலிருக்கிறீரே எந்த சந்தேகமாக இருந்தாலும் கேளுங்கள் என்று பலமுறையும் வற்புறுத்தி யுள்ளார். எட்டு திக்கும் பதினாறு கோணமும் முட்டித்ததும்பி முளைத்தோங்கும் சோதியை... என்னும் பட்டினத்தார் பாடலின் எட்டு திக்கும் பதினாறு கோணமும் என்னும் சொற்களின் முழு உண்மைப் பொருள் யாது என்று தேடிக் கொண்டிருந்த காலம், அந்த முனிவர் பன்முறையும் வலியுறுத்தவே அச்சொற்களைக் கூறி பொருள் விளக்கம் கோரியுள்ளார்.

நீண்ட நேரம் விடை பகராது மௌனமாக இருக்கவே என்ன பதில் கூறுங்கள் என்று பல முறைகேட்டுள்ளார் ஐயா. பின்னர் அந்த முனிவர் ஒருவாறு, சுவாசிக்கும்போது வெளிவிடும் உள்ளிழுக்கும் (ரேசக பூரகம்) காற்றின் அளவைக் குறித்த யோகப் பொருளைக் கூறியுள்ளார். ஐயா அந்தப் பாடலைப் பாடியவர் யோகி அல்ல ஞானி, ஆகவே அதற்குரிய ஞானப் பொருள் கூறுங்கள் என மீண்டும் வினவ விடை பகர முடியாது சங்கடமுறுவதை கண்ணுற்று ஐயா, தன் மனத்துக் குள்ளேயே பேசாமலிருந்த என்னை கேட்கத் தூண்டி விட்டு தானே வலையில் சிக்கிக் கொண்டார் என எண்ணிக் கொண்டு மீண்டும் விடை கூறுங்கள் எனக் கோரியுள்ளார். விட மாட்டார் போலிருக்கிறது என்று எண்ணிய அந்த முனிவர் போகப்போக உங்களுக்கே அதன் பொருள் தெரியவரும் எனக் கூறி சமாளித்துள்ளார்.

பின்னர் ஒரு அமாவாசை தினத்தன்று சிட்டி சைக்கிள் கடை கோவிந்தன் என்பவர் ஐயாவை திருவண்ணாமலை காட்டு சிவா ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். அமாவாசை தோறும் அந்த யோகி ஆசிரமம் வரும் சீடர்களுக்கு ஆன்மீக சொற்பொழிவு செய்வது வழக்கமாம். அன்று ஓங்காரப் பொருள் குறித்துப் பேசியுள்ளார். சொற்பொழிவு முடிந்த பின் ஐயா அவர்கள் அந்த யோகியை நோக்கி நீங்கள் விளக்கியது

மாத்திரைப் பொருள். அம்மாத்திரைப் பொருள் கூறுங்கள் என வினவியுள்ளார். அப்பொருள் அறியாத அவர் திகைத்து ஐயாவை பார்த்து அமாவாசை தோறும் வந்து போகுமாறு வேண்டிக்கொண்டாராம்.

முன்பு ஒரு முறை சோர்வடைந்து களைத்து இங்கு வந்தபோது போவென விரட்டியதையும் இப்போது வருமாறு வேண்டிக் கொள்வதையும் தனக்குள்ளே எண்ணி வந்து விட்டார். மீண்டும் அங்கு ஐயா சென்றதில்லை. அந்த யோகி, முன்பு தன்னால் 'போ' என விரட்டப் பட்டவர் இவர்தான் என்பதை அறிந்தாரில்லை.

சமாதி நிலை முடிவான பேறல்ல

ஐயா அவர்கள் வேலூர் குயப்பேட்டை ஆரணி சாலையில் ராமச்சந்திர நாயுடுக்குரிய இடத்தில் தொழிற்சாலை அமைத்துக் கொண்டு தொழில் செய்து வந்தார். அவ்வீட்டாரே தினமும் உணவளிக்க முன்வந்தனர். வீட்டம்மையார் உகந்தவா ரெல்லாம் உணவு படைத்தும் வேண்டிய உதவிகள் செய்தும் பேறு பெற்றப் புண்ணியவதியார். இவர்கள் மூத்த மகள் பின்னர் தொடர்ந்து உணவளித்து வந்தார்.

ஒரு சமயம் கடுங்கோடையில் ஐயாவுக்கு தலைமுதல் பாதம் வரை கருமாரி அம்மை நோய் பாதித்து பல நாட்கள் அந்நோயால் தாக்குண்டிருந்தார். அந்த நோயின் கடுமையைப் பற்றி ஐயா கூறிய போது கேட்பதற்கே மனந்தாங்க முடிய வில்லை. கொப்புளங்களிலிருந்து அம்மை பால் வடியுமாம். அந்த நோயிலிருந்து மீண்டும் எழுவதே ஐயம் என பார்த்த வர்கள் பலரும் கருதியுள்ளனர். அந்த நிலையிலும் தன்னை பார்க்க வருபவர்களிடத்தில் தளராமல் விளக்கங்களைக் கூறி உரையாடிக் கொண்டிருப்பாராம். ஒருநாள் இரவு நோயின் வருத்தம் தாங்க முடியாது சோர்ந்து அமர்ந்திருக்கையில் உடல் பற்றிய நினைவு மறைந்துள்ளது. புறத்தோற்றமும் மறைந்த னவாம். மனம் ஒடுங்கி சமாதிநிலை கூடியுள்ளது. நீண்ட நேரம் அவ்விதமே தொடர்ந்ததாம். அப்போது உள்ளத்தின் ஆழத்தில் இவ்விதமே இருந்து விடலாமா (அ) உலகத்துக்கு திரும்பலாமா

என்னும் ஓர் உணர்வு தலை தூக்கியுள்ளது. சமாதி நிலை முடிந்த பேறல்ல; உலகத்திலே வாழ்ந்து முடிவானப் பேற்றினைப் பெற வேண்டும் என்கிற தெளிவு தோன்ற மிகச் சிரமப்பட்டு சங்கல்பம் செய்து மனதை தேடி நினைவுக்கு கொண்டுவர நேர்ந்ததாம். வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவதற்கு முன்பு சமாதிநிலை மிகப்பெரியதாகப் பேசப்பட்டு வந்துள்ளது. வள்ளல் தோன்றி சமரச சுத்த சன்மார்க்க நெறியில் வாழ்ந்து மரணமிலாப் பெருவாழ்வு பெறுவதே பெரும்பேறு என்பதை இவ்வுலகுக்கு (ஏன் எல்லா உலகுக்குமே) காட்டிய பின்னர் சமாதி நிலையை ஐயா எங்ஙனம் முடிவாக ஏற்றுக் கொள்ள முடியும்?

உண்மை திருமணம்

ஐயா சென்னையில் இருந்த காலத்தும் பின்னர் வேலூர் வந்து தொழில் செய்யும் காலத்தும் பல பெண்கள் ஐயாவை திருமணம் செய்து கொள்ள முன் வந்துள்ளனர். ஏற்கனவே தன் தாயார் மற்றும் உறவினர்கள் வற்புறுத்திய போதே மறுத்தவர் எங்ஙனம் இதற்கு உடன்படக்கூடும். குடியேற்றத்தில் (குடியாத்தம்) ஒரு அம்மையார் வசித்து வந்துள்ளார். அவருக்கு பெரியவீடு ஒன்றும் சொந்தமாக இருந்தது. அவர் வேதம் பயின்றவர். சாதுக்களிடம் பிரியம் உள்ளவர். அவருக்கு இரு பெண்கள். அப்பெண்களும், தங்கள் வீட்டுக்கு வரும் சாதுக் களுக்கு பாத பூஜை செய்து பணிவிடை செய்யும் பண்புடைய உத்தமப் பெண்கள் என ஐயா கூறியுள்ளார். அந்த அம்மையார் தனது இரு பெண்களையும் ஐயாவுக்குத் திருமணம் செய்து கொடுக்க விழைவு கொண்டிருந்தார். சாந்தானந்தம் என்னும் துறவி மூலம் அதற்கு முயற்சியும் நடைபெற்றுள்ளது.

உலகியல் வழக்கப்படி நடைபெறும் திருமணம் ஊழ்வழி நடப்பன என்றும், ஓர் அசுத்த மாயா உடம்புடன் மற்றொரு அசுத்த மாயா உடம்பினை சேர்த்து வைப்பது என்றும் ஐயா விளக்கம் தந்துள்ளார். திருமணம் என்பது திரு+மணம் அருள் மணம் தன்னிடம் கமழ வேண்டும், அதற்கு அருள் பேற்றி னைத்தான் பெற வேண்டும், அதுதான் திருமணம் என்னும் சொல்லுக்குரிய பொருள். உலகியல் திருமணம் உபச்சார

வார்த்தையே, அந்த உண்மைத் திருமணம் பெறுவதற்கே இந்த உபச்சாரத் திருமணம் என்கிற உண்மையை அறிந்து அதற்குரிய வழியிலே ஒழுகி வாழ்வதே வாழ்வு. அதுவல்லாது மற்றவை பிழைப்பே (பிழையுடையன) என போதித்துள்ளார்.

உண்மைத் திருமணத்தைக் கண்ட ஐயா அவர்கள் இந்த உபச்சார திருமணத்தை எங்ஙனம் ஏற்பார்.

சங்கராபுரம் துறவியார் தொடர்பு

வாணியம்பாடிக்கடுத்த அம்பலூரைச் சேர்ந்த பெரிய கவுண்டர் மற்றும் குள்ளாகவுண்டர் என்பவர்கள் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரின் உறவினர்கள். ஐயாவிடம் தொடர்புள்ளவர்கள். அவர்கள் வாயிலாக வாணியம்பாடி அடுத்த சங்கராபுரம் என்னும் கிராமத்தில் துறவி ஒருவர் (சத்தி உபாசகர்) இருந்து வருவதாக அறிந்து அவரைப் பார்க்க ஐயா சென்றுள்ளார். கண்ணுற்ற போது இருவரும் ஏற்கனவே ஒருவரையொருவர் பார்த்திருக்கும் உணர்வுடன் நோக்கியுள்ளனர். ஐயா அங்கு அமர்ந்திருக்க பலரும் அத்துறவியை வந்து வணங்கி திருநீறு பிரசாதம் பெற்று சென்றுள்ளனர்.

தரிசனம் முடிந்த பின்னர் பேசாமல் அமர்ந்திருக்கும் ஐயாவைப் பார்த்து ஏன் பேசாமல் இருக்கின்றீர் ஏதாவது தெரிந்த பாட்டு ஒன்று கூறும்படி கேட்டுள்ளார். கேட்டும் ஐயா பேசாதிருக்க மீண்டும் மீண்டும் வற்புறுத்தியுள்ளார். ஐயாவின் உள்ளத்தே யிருந்து கீழ் வரும் பாடல் வெளிப்பட்டுள்ளது. 'முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூன்னியமாய் அப்பாலுக் கப்பாலாய் இருந்தறியீர், அந்தவூர் எம்மவூர் சொந்தவூர் வந்தவூர் சேதி கேளீர்' இப்பாடல் ஐயாவின் அனுபவ எல்லையையும் துறவியரின் அனுபவ எல்லையையும் நுணுக்கமாய் கூறாது கூறுவது போல் அமைந்துள்ளது. இம்மொழி செவிமடுத்ததும் அத்துறவியார் அசைந்து சற்று நேரம் மௌனமாயிருந்து தனது உபாசனா சக்தி மூலம் ஐயாவின் நிலையை அறிந்து ஐயாவிடம் அன்பும் மதிப்பும் பூண்டுள்ளார். அத்துறவியார் விருப்பத்திற்கிணங்க ஐயா

அங்கேயே உணவு எடுத்துக் கொள்வார். அங்கு உணவு தயாரிக்கும் பொறுப்பிலிருந்த தனது தமையனாரிடமும் ஐயா அங்கு வரும்போதெல்லாம் அவருக்கு உணவு படைக்க வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளார். இந்த உபசாரம் அங்கு வருவோர் வேறு யாருக்கும் வழங்கப்பட்டதில்லை. அத்துறவி யார் ஐயங்கார் வகுப்பை சேர்ந்தவராயினும் அவர்கள் சாதி ஆச்சாரம் பாராமல் ஐயா உண்ட இலையையும் அவர்களே எடுத்துப் போடுவர். அந்த அளவிற்கு அவர் உள்ளத்தில் ஐயா உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார். ஐயாவை அவர் சைவர் என்று உளம் குளிர அழைப்பாராம்; அவர் பல சித்துக்களையும் ஐயாவிடம் காட்டியுள்ளார்.

ஒரு முறை தனது சட்டைப்பையில் கையை விட்டு ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளை எடுத்து ஐயாவிடம் நீட்டியுள்ளார். இதென்ன ஆறுமாதம் முயன்றால் நானும் பல சித்துக்களைச் செய்வேன் என மனத்துக்குள் எண்ணியவாரே நான் தொழில் செய்கிறேன்; எனக்கு வேண்டிய பொருளை நான் ஈட்டிக் கொள்வேன் எனக் கூறி ஐயா அதை வாங்க மறுத்துள்ளார். கொடுப்பதை ஏன் வாங்க மறுக்கிறாய் என துறவியார் முறைத்துப் பார்க்க ஐயாவும் அதற்கெதிராய் முறைப்பைக் காட்டியுள்ளார்.

ஐயாவுக்கு பொருள் மீது பற்றின்மையை அறிந்து பணம் என்றால் அவ்வளவு லஜ்ஜை எனக்கூறி மகிழ்ந்துள்ளார். துறவியார் மூக்குப்பொடி போடும் பழக்கமுடையவராதலின் ஐயாவிடம் ஒரு சிட்டிகை தந்துள்ளார். ஐயா மறுக்க மீண்டும் மீண்டும் துறவியார் வற்புறுத்த ஐயா தனது அகத்தே அதை ஏன் பொடியாக கருதி மறுக்க வேண்டும் அனுக்கிரகமாக ஏற்றுக் கொள்ளலாமே என நினைத்து வாங்க கையை நீட்டிய போது ஐயாவின் அக நினைவை அறிந்த துறவியார் கலகலவென சிரித்து இது உனக்கு வேண்டாம் எனக்கூறி பொடியை கொடுக்க வில்லை. தான் அமர்ந்திருக்கும் இடத்தில் எதையும் உண்டு பார்த்திராத ஐயா அவர்கள் ஒரு முறை செல்லும்போது துறவியார் திராட்சைக் கனிகளை உண்டு கொண்டிருந்தாராம். ஐயா அமர்ந்ததும் பக்கத்தில் அசுத்தமான இடத்தில் சிதறி

விழுந்திருந்த ஒரு திராட்சை கனியை சுட்டி எடுத்துக்கொள்ள லாமே என துறவியார் கூற பெரியவர் சொல் அமுதம் என நினைத்து அதை ஐயா எடுக்கச் செல்ல சிரித்தபடியே வேண்டாம் எனத் தடுத்து விட்டாராம். இவ்விதம் பல சோதனைகளைச் செய்து ஐயாவின் உள்ளப் பாங்கின் உயர்வினைக் கண்டு பூரித்துள்ளார் அந்தத் துறவியார்.

சேந்தமங்கலத்தைச் சேர்ந்த கல்வியில் உயர் பட்டங்கள் பெற்ற சடாமுடியுடன் கூடிய நிருவாணிகள் பலர் துறவியாரிடம் வந்து வணங்கிச் செல்வார்கள். இவர்களெல்லாம சித்து வேண்டி என் காலில் வந்து விழுகிறார்கள் என ஐயாவிடம் துறவி கூறியுள்ளார். உயர் பதவிகளில் உள்ளவர்களும் பெருஞ் செல்வந்தர்களும் துறவியார் தரிசனத்துக்காகக் காத்திருந்து வணங்கிச் செல்வதை ஐயாவும் பல முறை கண்ணுற்றுள்ளார்.

ஒருமுறை சென்னையிலிருந்து வந்த ஒருவர் ஒரு சிறு மூட்டையை துறவியாரிடம் தந்து அம்மையார் கொடுத்தனுப் பினார்கள் எனக் கூறியுள்ளார். அந்த அம்மையார் என்னிடம் மிகுந்த பக்தியுடையவர். அடிக்கடி வந்து தரிசனம் செய்து செல்பவர் என்று துறவியார் கூறிக்கொண்டே அதைப் பிரித்துப் பார்க்க உள்ளே ஒரு சிறந்த மாதுளங்கனி இருக்க எடுத்து தானுண்ணாது ஐயாவிடம் தந்து உண்ணுமாறு கூற, கையில் பெற்ற ஐயா அக்கனியை நோக்கியவாறே கனிந்த உளம் கொண்ட மாது கொடுத்தனுப்பிய கனி என்று தனக்குள்ளே எண்ணியவாறு அக்கனியை தூக்கி பிடித்தவாறு மாது+உளம்+ கனி என பிரித்து அந்த அம்மையாரின் உள்ளக் கனிவையும் அதற்கேற்ப சொல்லமைந்த அக்கனியின் பெயரையும் பொருத்தி விளங்கக் கூற துறவியார் ஐயாவின் பிறர் உள்ளத்திலுள்ள உணர்வினை அளந்து அறிந்து கூறும் பேற்றினையும் தமிழ் மொழியில் உள்ள ஆற்றலையும் எண்ணி வியந்து கல கல வென நகைத்துள்ளார்.

துறவியார் ஒரு முறை ஐயாவிடம் ரமணரையும், நாகூர் சமாதி தர்க்காவையும் பார்த்து வாரும் என்று கூறியுள்ளார். ஐயாவும் பெரியவரது விருப்பம் என எண்ணி திரு வண்ணாமலை அடைந்து ரமணர் ஆசிரமம் சென்றுள்ளார்.

அப்போது ரமணர் அவருக்கென அமைக்கப்பட்ட கல் ஆசனத்தில் அமர்ந்திருக்க எதிரில் பெருங்கூட்டம் அமர்ந்து கண் மூடி தியானத்தில் இருக்கக்கண்டு வாயிற்படியண்டை நின்று ரமணரையே உற்று நோக்கியிருக்க, பின்னர் வந்தவர்களும் உள்ளே சென்று அமராது வாயிற்படியண்டை நிற்க சிறு கூட்டமே சேர்ந்து விடவே ரமணர் ஐயாவை நோக்கி உள்ளே வந்து அமருமாறு கையசைத்து சைகை காட்டியுள்ளார். அப்போதுதான் ஐயா தான் நிற்கும் இடத்தில் சிறு கூட்டமே நிற்பதைக் கண்டு அவர்கள் உள்ளே சென்று அமராதிருக்கத் தான் ஒரு காரணமோ என எண்ணி தான் உள்ளே சென்று அமராமல் அங்கிருந்து புறப்பட்டுள்ளார்.

ஓடும் ரயிலில் பீடு முழக்கம்

பின்னர் சங்கராபுரம் துறவியார் விழைவின் படி நாகூர் சமாதியையும் பார்த்து வரும் நோக்கத்துடன் வேலூரிலிருந்து புறப்பட்டு மாயவரம் சென்று அங்கிருந்து நாகப்பட்டினம் செல்லும் ரெயிலில் ஒரு பெட்டியில் ஏறி ஒரு பக்கமாக அமர்ந் துள்ளார். அப்பெட்டியில் ஒரு கிறித்துவ மத பிரசாரகர் அவரது குழுவினருடன் இசைக்கருவிகளை மீட்டி தனது மதிப்பிற்குரிய பாடல்களை பாடியும் களிப்புற்றும் அப்பெட்டியிலிருந்த மற்றவர்களுக்கு கிறித்துவமத பிரசாரம் செய்தும் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் கிறித்துவை ஏற்காவிடின் அழிந்து படுவீர்கள் என அச்சுறுத்தியும் வந்துள்ளார். அப்பெட்டியில் படித்தவர்கள் பலரும் இருந்தும் அவருக்கு ஈடு கொடுக்க முடியாமல் திகைத்திருந்துள்ளனர். அந்த வகையில் ஐயா அவர்களிடமும் அவர் துண்டு பிரசுரம் ஒன்றை நீட்டி யுள்ளார். அதை வாங்கி பார்த்து பக்கத்தில் வைத்துள்ளார் ஐயா. அதைக் கண்ணுற்ற அப்பிரசாரகர் சினத்துடன் என்ன வைத்து விட்டீர் கிறித்துவை ஏற்காவிடில் மரித்து போவீர் என மிரட்டியுள்ளார், சிங்கத்தை சிறு நரி மிரட்டிய கதை போன்று, அங்கு நிலவி வந்துள்ள சூழலை கண்ணுற்றும் அமைதியுடன் வீற்றிருந்த ஐயா அவர்கள் மரித்து போவீர் என்ற சொல் கேட்டு யாரைப்பார்த்து மரித்து போவாய் எனக் கூறுகின்றீர், நான் இதுவரை இறந்ததும் இல்லை, பிறந்ததும் இல்லை. உனது

இயேசு செத்தார், நீ சாகப் போகிறாய் என இடிபோல் முழங்கி யுள்ளார். அதுவரை மற்ற எல்லாரையும் மிரட்டி எக்களிப்பில் இருந்த அக்குழுவினரும் அம்மத பிரசாரகரும் ஐயாவின் முழக்கத்தைக் கேட்டு இடியுண்ட நாகம் போல் அடங்கி ஒடுங்கி விட்டனர். அடங்கி கிடந்த மற்றவர்கள் எல்லாம் களிப்புற எழுச்சியுடன் ஐயாவை பாராட்டியுள்ளனர்.

இதைக்கண்டு பிரசாரகர் மனம் புழுங்கி வெளுத்த முகத்தினராய் அடங்கி கிடக்க, ரெயில் நிலையம் வந்ததும் ரெயில் நின்ற போது ஓசை படாது இறங்கி சென்று விட்டனர். அப்பெட்டியில் இருந்த சிலர் ஐயாவின் ஊரைச் சேர்ந்தவர்கள், ஐயாவுக்கு தெரிந்தவர்கள். ஆயினும் அவர்களால் ஐயாவை அடையாளங்காண முடியவில்லை. அவர்களும் மற்றவர்களும் தாங்கள் வைத்திருந்த ஆட்டோகிராப்பில் ஐயாவின் கையெழுத்தைக் கோரியுள்ளனர். ஆனால் ஐயா அவர்கள் கையெழுத்திட மறுத்துள்ளார்.

ஐயா பின்னாளில் மேற்படி நிகழ்ச்சியை விளக்கியபோது அப்போது கூறிய, இதுவரை நான் இறந்ததும் இல்லை பிறந்தது மில்லை என்னும் கூற்றுக்கு அடிப்படை சைவ சித்தாந்த அனுபவ விளக்கமென்றும் அதன்படி ஆன்மாவுக்கு ஆதி அந்தம் இல்லையென்றும் விளக்கி சமரச சுத்த சன்மார்க்க நிலையில் பிறப்பு இறப்பு என்பது ஏக தேச விகற்ப பேதமே யன்றி உண்மையில்லை என்றும் விளக்கினார்கள்.

வெளியனுபவம்

ஐயா இளமைப்பருவத்தே (16 ஆண்டு அகவையிலே) தன்னை வெளியாகக்கண்டு அவ்வனுபவத்தை பெற்றிருக் கிறார் என்பதற்கு ஓர் சான்று.

ஐயாவுடன் தொடர்பு கொண்டு அவரது அறிவு மொழி களைப் பலகாலும் கேட்டு இன்புற்று மிக்க மதித்து பழகி வந்த நண்பர்களில் ஒருவர் அவரது ஆட்டோகிராப்பில் ஒரு பக்கத்தைக் காட்டி தனக்கு அறிவுரை எழுதுமாறு கோரியுள்ளார். அதற்கு ஐயா அவர்கள் அப்பக்கத்தை விட்டுவிட்டு வேறு பக்கங்களை மற்றவர்களிடம் எழுதி

வாங்கப் பயன்படுத்திக் கொள்ளும் என மொழிந்துள்ளார். அந்த நண்பர் அதன் பொருள் விளங்காமையால் வியப்போடு ஐயாவை நோக்கியுள்ளார். பின்னாளில் அவ்வெற்றுப் பக்கத்தைக் கண்ணுறும் போது என் நினைவு தோன்றும் என்றும் அதன் பொருள் விளங்கும் என்றும் கூறியுள்ளார்.

தன் வெளியனுபவத்தை அவ்வெற்றுப் பக்கத்தின் மூலம் எழுதாமல் எழுதியுள்ளார் என்பதை அவரறிவு மொழிகளைக் கேட்கும் வாய்ப்பு பெற்றமையால் அறிய முடிந்தது. வெளியனு பவத்தை எங்ஙனம் ஏட்டில் எழுத முடியும்? ஏடகத்தேயெழுதாத மறைகளெல்லாம்... என்னும் வள்ளல் பெருமான் அருள் வாக்கும் ஈண்டுணர்ந்து தெளிவுறத்தக்கது. இதுவரை நான் இறந்ததுமில்லை பிறந்ததுமில்லையென்று கிறத்துவ மத பிரசாரகர் முன் முழங்கிய மொழியும் மேற்படி அனுபவத்திற் கோர் எடுத்துக்காட்டு.

நாகப்பட்டினம் அடைந்து அங்கிருந்து நாகூர் விடியற் காலையடைந்துள்ளார். நேரே நாகூர் ஆண்டவர் மசூதி (தர்க்கா) சென்று முன் வாயிலில் நின்று காத்திருந்துள்ளார். இன்னும் பலர் தரிசனத்துக்காக வந்து நின்றிருந்துள்ளனர். சற்று நேரத்தில் மௌலானா (இஸ்லாமிய மதகுரு) வந்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றுள்ளார். ஐயா மட்டும் துணிந்து பின் தொடர்ந்துள்ளார். வேறு யாரும் உள்ளே செல்லக்கூடாது என்பது விதியாக இருந்த போதிலும் உண்மை யறிதலையே இலட்சியமாகக் கொண்டுள்ள உத்தமர்களுக்கு அவ்விதி பொருந்தா என்னும் கோட்பாட்டுக்கு இயைய ஐயா பின் தொடர்ந்தார் போலும். மௌலானா ஏழு வாயிற் கதவுகளைத் திறந்து உள்ளே சென்று மூல இடத்தை அடைந்துள்ளார். ஐயாவும் சில வாயிற் படிகளை கடந்து உள்ளே சென்று நின்று மூல இடத்தை நோக்கியுள்ளார். சற்று நேரத்தில் மௌலானா சாம்பிராணி தூபம் இடவே அப்புகை எங்கும் நிறைந்து மூல இடம் மறையவே ஐயா வெளியே வந்துள்ளார். வெளியில் நிற்போருக்கு அந்த மூல இடம் தூரத்தில் மங்கிய ஒளியுடன் இருப்பதனால் தெளிவாகப் புலனாக வாய்ப்பில்லை.

அந்த நாகூர் ஆண்டவர் மசூதி மூல இடத்திலே ஐயா கண்டறிந்த உண்மை என்ன என்பதை வெளிப்படுத்தவில்லை. நம்மனோர்க்கு அதை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணமாக இருக்குமோ என்று யூகித்தறிந்து அமைய வேண்டியுள்ளது. துறவியாருக்கு அதை வெளிப் படுத்தியிருக்க வேண்டும். ஏனெனின் ஐயா அங்கு சென்றதே துறவியாரின் விருப்பதற்கிணங்கவே.

துறவியார் தம்முடைய முற்பிறவி நிகழ்ச்சிகள் சிலவற்றை ஐயாவிடம் கூறியதாகக் கூறியுள்ளார். முற்பிறவியில் சிறு பிராயத்தில் பள்ளியில் படிக்கும்போது பள்ளிக்கு தவறாமல் செல்வதில்லையாம். தனியிடத்துக்குச் சென்று தியானம் செய்வாராம். ஒரு முறை பள்ளித் தேர்வுக்கே செல்லவில்லை யாம். அவ்வாறிருந்தும் பள்ளி திறந்த பின்னர் அவர் தேர்வில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதாம்.

ஆசிரியரை வினவியபோது அவர் தேர்வுக்கு வந்து எழுதியதாகக் கூறினாராம். அதனால் அவர் வடிவத்தில் வந்து எழுதியது அவர் வணங்கும் சத்தி என்பது உணரப்படுகிறது. இப்பிறவியில் அவரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள குள்ளா கவுண்டரும் பெரியாகவுண்டரும் முற்பிறவியில் செங்கல் வாணிபம் செய்து வந்ததால் செங்கல் சூளை அமைத்து கல்லை சுடுவதற்காக நெருப்பு வைத்துள்ளனர். பலமுறை வைத்தும் நெருப்பு பற்றி எரியாமல் அணைந்து அணைந்து போயிற்றாம். அவர்களுக்கு ஒன்றும் விளங்காமல் சூளையை சுற்றி வந்து மேலே ஏறி பார்த்தபோது அதன் மீது அந்த துறவியார் அமர்ந்திருந்தாராம். அவர்கள் அஞ்சி பக்தியோடு நடந்ததைக் கூறி வேண்ட, கீழே இறங்கியுள்ளார். பின்னர் நெருப்பு பற்றி எரிந்ததாம். முற்பிறப்பில் ஏற்பட்ட அத்தொடர்பு இப்பிறவியிலும் தொடர்ந்து வந்துள்ளதை விளக்கினாராம். குள்ளா கவுண்டரும் பெரியா கவுண்டரும் மதித்து வணங்கிய துறவியாரே ஐயாவிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருப்பதையறிந்து அவர்களும் ஐயாவிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தனர். அவர்கள் வேலூரில் ஒட்டேரி க்குப் போகும் வழியில் பாகாயம் மலைக்கு பக்கத்தில்

ஒரு ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஐயா அவர்கள் ஆசிரமம் அமைத்து அங்கு தங்குவதற்காக பட்டா செய்து கொடுப்ப தாகக் கூறினார். ஆனால் ஐயா அதை ஏற்கவில்லை. தனித்து ஆசிரமம் அமைத்து அமர்ந்தால் தன்னை மற்றவர்களிடமிருந்து வேறு பிரித்துக் காட்டி தன்னை விளம்பரப்படுத்திக் கொள் வதாக ஆகும் எனக் கருதி 'சகஜ பழக்கமே பழக்கம் என வள்ளல் பெருமான் கருத்துக்கேற்ப சகஜமாக வாழ்வதே சிறப்பு என மறுத்தார் போலும், ஐயா அவர்கள் அந்த வண்ணமே மற்ற வர்களில் தானும் ஒருவனே என்பதாகவே வாழ்ந்தார்.

துறவியார் பிற்காலத்தில் சங்கராபுரத்தை விட்டு சென்னை சென்று தங்கியுள்ளார். அவர் சிறிது வயிற்று வலியினால் துன்புற்று வந்ததாகவும் தெரிய வருகிறது. சென்னையிலிருந்து வேலூருக்கு வந்த ஐயங்கார் ஒருவர் ஐயாவைப் பார்க்க வந்துள்ளார். ஐயாவைப் பார்த்து வருமாறு துறவியார் பணித்ததாகக் கூறியுள்ளார். மேலும் ஐயாவைப் பற்றி துறவியார் அவர் ஏதாவது வேண்டும் என்றால் தானே! எதுவுமே வேண்டாம் என்கிறாரே! இராமலிங்க மன்னோ அவர் என்று அடிக்கடி கூறுவதாகவும் கூறியுள்ளார்.

ஐயா அவர்கள் இராமலிங்க வள்ளலாகவே துறவியாருக்கு புலனாகியுள்ளார் போலும். வள்ளல்பெருமான் விட்டுச் சென்றப் பணியை தொடர்ந்தும், வள்ளல் பெருமானின் தனித்தன்மையை உலக மெலாம் அறியவும் ஆற்ற வரும் பணி முன்பே துறவியாரின் அகக் காட்சியில் தோன்றியுள்ளது போலும். துறவியார் இறுதியில் சமாதியடைந்து, அவரது சமாதி சென்னையைச் சேர்ந்த தாம்பரத்தில் இருப்பதாகத் தெரிய வருகிறது. அவரது அன்பர்கள் ஆண்டுதோறும் அவரது சமாதிக்கு குருபூஜை செய்து வருவதாகவும் அறிய வருகிறது.

பகவதி மலைத்தொடர்பு

ஐயா அவர்களின் இப்புனித வரலாற்றினை சிற்றறிவிற்கு எட்டிய அளவில் எழுதுவதற்கு புண்ணியம் வாய்க்கப்பெற்ற இச் சிறியேன் 2001ம் ஆண்டு முடிய முப்பது ஆண்டுகள் ஐயா அவர்களைக் கண்டு அவர்களின் அருளுரைகளை செவி

மடுக்கும் பேறு பெற்றவன் என்பதை ஐயா அவர்களுடன் சில நிகழ்ச்சிகளை கண்டு அனுபவித்ததை இந்நூலை கற்கும் அன்பர்களும் அறிந்து அனுபவிக்க விரும்பி இங்கு குறிக்க முனைகின்றேன்.

வேலூருக்கு கிழக்கேயுள்ள மலைத்தொடரில் பகவதி மலை எனக் குறிக்கப்படும் தொடர் ஒன்றுள்ளது. மலைக் குடை யாமலே குகைகளும், சுனைகளும் பலபேர் கூடும் அளவிற்கு பெரிய கூடம் போன்ற அமைப்பும் இயற்கை யிலேயே அங்கு அமைந்துள்ளது. அந்த சுனைகள் எந்த வறண்ட காலத்திலுங் கூட வற்றி பார்த்ததில்லையென ஐயா கூறியுள்ளார். அங்கு சிறு சிறு கோயில்கள் இருந்து ஒரு காலத்தில் சிறப்புற வழிபாடுகள் நடந்திருக்க வேண்டும் என்பதற்கான சிதைந்த அடை யாளங்கள் உள்ளன. அங்கு சித்தர்களும் சமண முனிவர்களும் வாசம் செய்துள்ளதற்கான அடையாளங்களும் உள்ளன. அங்கு சென்றடைந்ததும் சதா அலைகின்ற மனம் தானாகவே அடங்கி அமைதி பெறுகின்ற ஓர் இயற்கையனுபவ உணர்வினைப் பெற்று அனுபவித்தவன் என்கிற உண்மையை இங்கே குறிப்பது பிழையாகாது, பயனுள்ள தென்றே கருதுகின்றேன். ஏனெனில் புனிதர்கள் வாசம் செய்த இடமாதலின் புனிதத் தன்மை பல நூற்றாண்டுகள் கழிந்தும் அங்கு சூழ்ந்து நிலைத்து நிற்கின்றன என்னும் ஓர் உண்மையை உலகம் அறிதல் நலம் என்னும் காரணம் பற்றியே.

ஐயா அவர்கள் சென்னையை விட்டு வேலூர் வந்தடைந்த சில ஆண்டுகளிலிருந்தே சுமார் ஐம்பது ஆண்டு காலம் பகவதி மலைத் தொடர்பினைப் பெற்றிருந்தார் என்பதை அவர் வற்றின் வாயிலாக அறிய வருகிறது. அம்மலையில் மைசூர் சந்தன மரங்களுக்கு ஒப்பான சந்தன மரங்கள் நிறைந்திருந்த தாக அவருடன் பழகிய வயது முதிர்ந்த பெரியாகவுண்டர் மற்றும் குள்ளா கவுண்டர் முதலியோர் கூறியதாக வெளிப் படுத்தியுள்ளார். யாவும் ஆரம்பகாலத்தில் ஆங்காங்கே சில மரங்கள் இருந்ததையும் சிறந்த மூலிகைகள் வளர்ந்திருந்ததை யும் கண்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஐயாவுடன் மலைக்கு உடன் வந்த அன்பர்களுக்கும் அம்மூலிகைகளைக் காட்டி

விளக்கியுள்ளார். அம்மூலிகைகள் எல்லாம் தற்போது முற்றிலும் அருகிவிட்டன. வள்ளல்பெருமான் புல்லறிவு ஓங்குங்காலத்து நச்சுயிர்கள் மிகும்! என்று மொழிந்துள்ள உண்மையின்படி நச்சுச் செடிகள் மிகவே அவ்வமுத மூலிகைகள் மறைந்தன போலும்.

தொடக்க காலத்தில் ஐயா அவர்கள் தனித்தே அடிக்கடி மலைக்குச் சென்றுள்ளார். காலை சென்று இரவு திரும்பி யுள்ளார். சில சமயங்களில் இரவும் அங்கேயே இருந்துள்ள தாகக் கூறியுள்ளார். தொண்டான் துளசி சாமியார், சாந்தானந்த சாமியார், சித்த சமாஜ வட்டத்தைச் சேர்ந்த சுகுமாரன் என்பவர் போன்ற துறவிகள் சிலர் சில காலம் அங்கே தங்கியிருந் துள்ளனர். நாளடைவில் ஐயா சில அன்பர்கள் சூழ சென்று அங்கேயே உணவு சமைத்து உண்டு இருந்து வந்துள்ளனர். மலையைச் சார்ந்துள்ள கிராமங்களிலிருந்து மேய்ப்பதற்காக ஆடு,மாடுகளை ஒட்டி வருவோர், விறகு சேகரிக்க வருவோர் சூழவே அவர்களுக்கும் உணவை பெருக்கி பகிர்ந்தளித்து வந்தார். ஓர் ஞாயிறு விட்டு ஓர் ஞாயிறு விடாது தொடர்ந்து சென்று களிப்புறும் இக்களிப்பினை இச்சிறி யேனும் இருபது ஆண்டுகள் முடிந்த அளவில் பெற்று களிப் புற்றுள்ளேன். நளபாகம் என்று ஏட்டில் கற்றும் செவியால் கேட்டும் உள்ளேன். அனுபவத்தில் ஐயா அவர்களின் கை பாகத்திலே நளபாகத்தை உண்டு மகிழும் பேறு பெற்றுள் ளேன். சமையற்கலையின் உன்னதத்தையும் அதில் உள்ள பாக வகைகளையும் ஓரளவு தெரிந்து உண்டு மகிழ்ந்ததை இங்கு விளக்கின் நீளும் என்பதால் அஞ்சி விடப்பட்டது.

பலதரப்பட்டவர்களின் தொடர்பு

மற்றும் வேலூரில் எல்.ஆர்.கே.(LRK) லட்சுமி பீடி நிறுவனம் மற்றும் லட்சுமி திரையரங்கின் உரிமையாளர் லட்சுமண முதலியார் என்பவர் ஐயாவிடம் மிக்க மரியாதையும் அன்பும் உடையவர். இவர் ஐயாவிடம் தொழில் சம்பந்த மாகவும் அவர் ஒரு யோகி எனக் கருதி தங்கம் செய்யும் வித்தையைக் கற்க வேண்டுமென்னும் நோக்கத்திலும் தொடர்பு கொண்டிருந்தார். ஐயா ஒரு ஞானி என்பதை

யறியாது இது குறித்து பல முறை விளக்கமும் கோரியுள்ளார். அதற்கு பலப்பல விளக்கங்கள் கொடுத்ததாகக் கூறியுள்ளார் ஐயா. அவைகளில் ஒரு சில சுருங்க இங்கே குறிக்கப் படுகின்றன. உழைப்பின்றி தந்திரத்தால் தங்கத்தைப் பெற முயற்சி செய்வது குற்றம் என்றும் உழைத்து பொருளீட்டி அதைக் கொண்டு தங்கம் வாங்க முடியும் என்றும் சொல்லால் ஆகும் தங்கம் என்றும் கூறியுள்ளார்.

இச்சொல் இருவகை பொருளுடையது. அவை சான்றோர் வாக்கினின்றும் பிறக்கும் சொற்கள் விலை மதிப்பற்றன. அச்சொற்களின் பெருமையுணர்ந்தோர் பொருளை வாரி வழங்குவர் என்பது ஒன்று. ஓட்டையும் பொன்னையும் ஓக்கக் காணும் பற்றற்றோர் சொன்ன மாத்திரத்தில் ஓடும் பொன் னாகும் என்பது மற்றொன்று. மேலும் பலவகை உலோகப் பொருளிலே தங்கமும் ஒன்று. ஈண்டு இதற்கு மட்டும் ஏன் சிறப்பு வழங்கப் படுகிறதுயெனின் ஒவ்வொரு உலோகத் திற்கும் ஒவ்வொரு குற்றங்கள் உண்டு. தங்கம் குற்றமற்றது. அதாவது களிம்பற்றது என்பதனால். ஆயினும் அது நித்திய மானதல்ல. மலங்களால் மூடப்பட்டுள்ள ஆன்மா மலங்கள் நீங்கப்பெற்று தூய்மை பெறுதல் வேண்டும். அதுதான் உண்மையான தங்கம், நித்திய தங்கம் என்றும், சித்தர்கள் பாடலும் இதற்குச் சான்றாம் என்பன போன்ற விளக்கங்கள் அவை.

ஐயாவிடம் எல்லாக் கலைகளும் எல்லா ஆற்றல்களும் இயற்கையாகவே பொதிந்து இருந்தன என்பதை அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தெளிந்தவர்கள் ஓரளவு அறிவர். அவர் உலகப் பற்று கொண்டு அவைகளை காரியப் படுத்தியிருந்தால் அவை இன்று உலகம் போற்றி புகழத் தக்கதாகப் பரிணமித்திருக்கும். அருள் பேற்றையே இலட்சிய மாகக் கொண்டு அதற்காக மட்டுமே இவ்வுலகத் தொடர்பைக் கொண்டிருந்தபடியால் அவை கண்ணுக்குப் புலனாகாது மண்ணுக்குள் மறைந்த புதைப் பொருளாகி விட்டன. தொழிலுக்காகப் பழகியவர்கள், வீரத்துக்காகப் பழகியவர்கள், இனிய தமிழ்ப் பேச்சுக்காகப் பழகியவர்கள், வேதப் பொருளுக்

காகப் பழகியவர்கள், யோகத்துக்காகப் பழகியவர்கள் ஞானத்துக்காகப் பழகியவர்கள் எனப் பலத்தரத்தினர் ஐயா விடம் பழகியுள்ளனர். ஐயா இரக்க குணமுடையவராதலின் பிழைப்புக்காகப் பழகியவர்களும் உண்டு. வரலாற்றின் இயல் கருதி (அவர்களில்) சிலரை நினைவுபடுத்துவது பொருத்த முள்ளதே.

வேலூர் நகராட்சிக்குத் தலைவராகவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவருமான மா.பா. சாரதி, தேவன் நிழற்பட நிலைய (போட்டோ ஸ்டுடியோ) உரிமையாளர் தேவராஜி, சித்த சமாஜ நிறுவனர் சிவானந்தரின் சீடர் காய்கடை கன்னியப்பன் இன்னும் பல சீடர்கள், எஸ்.எல்.எஸ். (SLS) லாரி சர்வீஸ் உரிமையாளர் கிருஷ்ணா சர்வீஸ் மோட்டார் உரிமையாளர் கிருஷ்ணசாமி முதலியார் (இவர் இளமை முதல் இறுதி வரை ஐயாவிடம் தொடர்பு டையவர்) நாவிதர் மணி, ஆசிரியர் முனிரத்தின முதலியார் (இவர் மருத்துவம், சோதிடம் அறிந்தவர்) சச்சாதி என்பவர் குடைசாமியார், திருவண்ணாமலையில் தங்கியிருந்த சாந்தானந்தசாமி, பரஞ்சோதி (பரஞ்சோதியின் சீடர்) வேதாந்தி பங்காரு நாயுடு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணி புரிந்து ஓய்வு பெற்ற திருவத்திபுரம் கந்தசாமி, நெய்வேலி சன்மார்க்க சங்க செயலாளர் துரை. சக்கரவர்த்தி, மருதூர் தீனதயாளன், சுப்புராஜ் முதலியோர் மற்றும் ஆர்க்காடு ஆசிரியர் இராமன், வேலூர் வெங்கடேஸ்வரா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றிய கதிரேசன், திருவத்தி புரம் தமிழாசிரியர் நடராசன், மண்டி அனந்த சயனம் செட்டியார், தொரப்பாடி குணாபாய் குடும்பத்தினர், வேலப்பாடி வேதாந்தப் பாடம் பயின்ற தாய்மார்கள், தமிழாசிரியர் அரங்கநாதன், அரசு கருவூல உதவி அலுவலர் கணபதி அய்யர் நினைவில் வந்தவர்கள். வராதவர்கள் இன்னும் எத்தனையோ. சுடுகாட்டு சாமியார், தொண்டான் துளசி சாமியார் முதலியோரிடமும் சிறு தொடர்பு இருந்துள்ளது.

திருப்புன்கூரில் கண்ட அதிசயக் காட்சி

லட்சுமண முதலியாருடன் ஐயா சில தலங்களுக்குச் சென்ற போது நந்தனாருக்கு நந்தி விலகி காட்சி தந்த திருத்தலமாம் திருப்புன்கூர் சென்றிருந்தபோது (1972) மூலவருக்கு நேராக இல்லாமல் சற்று வலப்புறமாகத் தள்ளிய மைக்கப்பட்டிருக்கும் நந்தியின் உருவச்சிலை சுதையினால் செய்யப் பெற்ற சிறு வடிவமாக இருப்பதையும் எவ்வளவு தூரம் விலக்கியமைக்கப் பட்டிருக்கிறது எத்தனை அடி உயரம் என்பதை யெல்லாம் மிக நுட்பமாக கவனித்திருக்கிறார் ஐயா.

சில ஆண்டுகள் கடந்து மீண்டும் அத்தலம் செல்லும் வாய்ப்பு கிடைத்தபோது நெய்வேலி அன்பர்கள் மற்றும் சிலரும் சிறியேனும் உடன் சென்றிருந்தோம். நந்தியின் உருவத்தைக் கண்டு திகைப்புற்று ஆழ்ந்த சிந்தனையில் பல மணித்துளிகள் நின்று கொண்டிருந்தார். பின்னர் அக்கோயிலில் பூசை செய்து வரும் வயது முதிர்ந்த குருக்களை அணுகி நந்தி சிலைப் பற்றி விசாரித்தபோது அங்கு வைக்கப்பட்டிருக்கும் சிலை திருவண்ணா மலையில் கருங்கல்லில் செதுக்கப்பட்டு அங்கிருந்து ரெயிலில் கொண்டு வந்து சுமார் நூறு ஆண்டு களுக்கு முன் அமைக்கப் பட்டதாகவும், ரெயிலில் கொண்டு வரும்போது வழியில் ஒரு பாலத்திற்கு அடியில் ரெயில் வரும்போது பாலத்தில் பட்டு தலை கழுத்துப் பகுதியோடு உடைந்து விட்டதாகவும் பிறகு அதை ஒட்ட வைத்து அமைக்கப்பட்டதாகவும் அவரது முன்னோர் கூறியதாக விளக்கி ஒட்ட வைத்ததற்கு அடையாளமாகக் கழுத்துப் பகுதியில் சுற்றிலுமிருந்த கீரலைக் காட்டினார்.

இந்த சிலை வைக்கப்படுவதற்கு முன்பு அங்கிருந்த சிலை குறித்து ஐயா விசாரித்தபோது அந்த சிலை சுதை யினால் செய்யப்பட்டது என்றும் அது நந்தனார் காலத்தில் வைக்கப் பட்ட சிலை என்றும் அது சிதைந்து பழுதடைந்து போயிருந்த தால் அதை மாற்றி கருங்கல்லில் செய்த இந்த சிலை அமைக்கப்பட்டதாகவும் கூறினார். ஐயா சிந்தனையிலாழ்ந்து முன்பு கண்டது கனவு அல்ல விழிப்பில் கண்ணால் கண்டதே. இந்த அற்புதத்திற்கு காரணம் இறைவன் செயலே. நந்தனார்

காலத்துக்குத் தன்னை அழைத்துச் சென்று அந்தக் காட்சியை காட்டினார் போலும் என விதந்து தேர்ந்துரைத்தார்.

திருப்பெருந்துறையில் தோய்ந்த உள்ளம்

சைவ சமயக்குரவர் நால்வரில் திருவாசகமும், திருக் கோவை யாரும் பாடியருளியவர் மாணிக்கவாசகப் பெருமான் ஆவார். அப்பெருமானாருக்கு இறைவன் குருவடிவில் வந்து காட்சி தந்து திருவடி தீக்கையருளிய இடம் திருப்பெருந்துறை. இத்தலம் ஆவுடையார் கோயில் என்றும் வழங்கப்பெருகிறது. இவ்வுண்மை திருமாலும் பன்றியாய் உருவெடுத்தும் காணாத் திருவடி உருநாமறிய ஓர் அந்தணனாய் ஆட் கொண்டான்... என்று அப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகப் பாடல் மூலம் தெளியப்படுகிறது. இப்பாடலில் வரும் அந்தணன் என்னும் சொல் இக்காலத்தே ஒரு சாதியினர் தங்களுக்குச் சூட்டிக் கொண்டிருக்கும் சொற்பொருளுடைய தன்று. தமிழ் நூன் மறைப்படி, நெறிப்படி ‘அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்’ என்னும் பண்புச்சொல். மேலும் அந்தம் என்பது முடிவினைக் குறிப்பதனால் முடிவில் நிற்பவர் அதாவது மாயை கடந்து அதன் முடிபினைப் பெற்றவர் என்பதுமாம்.

இப்பெருஞ்சிறப்புடைய திருப்பெருந்துறைக்கு ஐயா அவர்கள் லட்சுமண முதலியாருடன் ஒருமுறை சென்றபோது அங்கு குரு வடிவில் வந்து இறைவன் உபதேசம் செய்தருளிய இடத்தில் மாணிக்க வாசகப்பெருமானாராலேயே கட்டப் பட்ட கோயிலின் கருவறையைக் கண்ணுற்றுள்ளார். உடன் சென்றவர்கள் அக்கருவறையைச் சுற்றி பிற்காலத்து மன்னர் களாலும் சைவமட தம்பிரான்களாலும் கருங்கற்களால் விரித்து கட்டப்பட்டுள்ள கட்டிட அமைப்பையும் சிற்ப அழகையும் கண்டு மகிழ்ந்திருக்க அக்கருவறையின் ஒவ்வொரு கல்லும் ஐயாவிடம் பேசியதாகவும் அதனால் மீண்டும் வருவேன் என்று சொல்லி திரும்பியதாகவும் பின்னர் கூறக்கேட்டோம்.

தைப்பூச தரிசன வழிபாடு

தைப்பூசம் தவறாதீர்கள் என்னும் வள்ளல் பெருமான்

ஆணைப்படி ஐயா அவர்கள் கிருஷ்ணா சர்வீஸ் உரிமையாளர் கிருஷ்ணசாமி முதலியாருடன் ஏறத்தாழ முப்பது ஆண்டு களுக்கும் மேலாக (1963 லிருந்து) ஒவ்வொரு ஆண்டும் தைப்பூச ஜோதி தரிசன விழாவிற்கு வடலூர் வந்து ஜோதி தரிசனங்கண்டு வழிபட்டு வந்துள்ளார். வள்ளல் பெருமானுக்கு அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் அகத்தே காட்டிய அக்காட்சியை அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க பிற மாந்தரும் அப்பேற்றினை பெறும் முகத்தான் புறத்தே குறியாக அமைக்கப்பட்டதே வடலூர் சத்திய ஞான சபையும் தைப்பூச ஜோதி தரிசனமும் என்பது வள்ளல் பெருமான் வரலாற்றி னின்றும் அறியப்படுகிறது. உண்மையுணர்வோடு தைப்பூசந் தோறும் தவறாது வந்து வடலூர் சத்திய ஞானசபையிலே ஜோதியைத் தரிசனங்கண்டு வழிபட்டுவரின் அகத்தே அக்காட்சியைக் கண்டுய்யும் பேறு பெறலாம் என்பதே வள்ளல் வாக்கு. அவ்வாக்கிற்கேற்பவே ஐயா அவர்கள் அப்பேற்றினைப் பெறுவதையே தனது வாழ்வாக்கிக் கொண்டார். வள்ளல் விட்டுச்சென்ற பணியினைத் தொட்டுத் தொடர்ந்தாற்றி வரும் செயலே அக்கூற்றினை மெய்ப்பிப்பதாம். இச்சிறியேனும் பதினைந்தாண்டுகளாக ஐயா அவர்களுடன் தொடர்ந்து வரும் பேறு வாய்க்கப் பெற்றுள்ளேன்.

சிதம்பரம் வழிபாடு

ஒவ்வொரு முறையும் வடலூர் வரும்போது தைப்பூச நாளைக்கு முன்னாள் நெய்வேலி வந்து நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் வரைப்படப்பணி (Drafts man) யாற்றி வரும் திருவத்திபுரம் கந்தசாமி அவர்கள் வீட்டில் தங்குவதும் அன்றிரவு வள்ளல் பெருமானால் பூர்வஞான சிதம்பரம் என்று விளக்கம் செய்யப்பட்ட சிதம்பரம் சென்று இரவு 10 மணிக்கு நடைபெறும் (அர்த்த ஜாமபூஜை) பூசையினைக் கண்டு வழிபட்டு வருவதும் வழக்கமாகக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த பூசையின் புறச்செயல்பாடுகளே பாமரர் முதலி யோரையும் ஈர்த்து ஒன்றச் செய்யும் பெற்றியுடைத்தாம், எனின் அனக உணர்வுடையோர் அப்பரம்பரக்காட்சியில் தோய்வர் என்பது ஐயா அவர்கள் உடன் சென்றவர்களை

என்னக் கண்டீர்கள் என்ற வினாவிலிருந்து யூகிக்க முடிகிறது. இது புறக்காட்சி, அகக்காட்சி காணும் தகுதி பெற வேண்டுமென மொழிவார்.

திருப்பெருந்துறை தொடர் வழிபாடு

இவ்விதம் தொடருங்கால், ஏற்கனவே ஒரு முறை திருப் பெருந்துறை சென்றிருந்தபோது மணிவாசகப் பெருமானால் அமைக்கப்பட்ட கருவறை ஐயாவுடன் பேசியதால் மீண்டும் வருவேன் என்று தனக்குத்தானே கூறிக்கொண்ட உணர்வு செயல்படத் தொடங்கியது. உத்தரஞான சிதம்பரம் என்னும் வடலூரில் தைப்பூச ஜோதி தரிசனங்கண்டு அன்று மாலை திருப்பெருந்துறைக்குப் பயணம் தொடரலாயிற்று. இப் பயணம் சுமார் பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்தன. திருப் பெருந்துறையோடு ஐயாவுக்கு முற்பிறவிகளிலேயே நெருங்கிய தொடர்பிருந்தது என்பது அவ்வப்போது நடந்த சில அற்புத நிகழ்ச்சிகள் வெளிப்படுத்தின.

நெய்வேலி அன்பர்கள் சிலருடன் இச்சிறியே னுக்கும் ஐயாவுடன் ஒவ்வொரு முறையும் திருப்பெருந்துறை செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இத்தொடர் பயணத்தின் முதலில் கோயிலுள் சென்ற போது தலைமை குருக்கள் (அக்கோயிலின் குருக்கள்மார்கள் நம்பியார்கள் என்றழைக்கப்படுகின்றனர்) ஐயாவை வரவேற்று மாணிக்கவாசகரின் சிறப்பினையும் கோயில் வரலாற்றினையும் கூறி திருவாசகத்துக்கு ஒப்பான வேறு நூல் உலகில் இல்லை என்று புகழ்ந்துரைத்தார். அந்த சந்நிதானத்திலே அக்கூற்றை மறுக்கக்கூடாது என்பதாலும் ஆயினும் உண்மை வெளிப்பட வேண்டும் என்னும் நோக் காலும் அக்கூற்றுக்கு மறு மொழியாக திரு+வாச+அகம் என்றும் வள்ளலார் மூலம் வெளிப்பட்டது, திரு+அருள்+பா என்றும் கூறியமைந்தார் (ஐயா மேற்படி சொற்களைப் பிரித்து கூறியதற்கேற்ப கூட்டல் குறியிட்டு ஈண்டு காட்டப்பட்டது) குருக்கள் அச்சொற்களின் பொருளாழத்தை உணர்ந்தவராய் அமைதியடைந்தார்.

மாணிக்கவாசகப் பெருமான் அகத்தே, 'திரு' வாசம் செய்தது என்பதும் வள்ளல் பெருமான் அகமே அருளாகி 'பா'

வெளிப்பட்டது என்பதும் இதனால் யூகித்து உணரலாம். மணிவாசக பெருமானால் அமைக்கப்பட்ட கருவறையின் மூலவருக்கு ஆத்மநாதர் எனப்பெயர் வழங்கப்படுகிறது. மற்ற சிவன் கோயில்களிலே கருவறையில் அமைக்கப்பட்டுள்ள சிவலிங்க வடிவம் போன்றதல்ல ஆத்மநாதர் வடிவம். ஆவுடையார் மட்டும் உண்டு. லிங்கம் (கூம்பு வடிவம்) இல்லை. மாணிக்கவாசகப் பெருமான் தான் பெற்ற அனுபவப் பேற்றை உலகத்தார் அறிந்து அவரும் அப்பேற்றினைப் பெற வேண்டும் என்னும் பேரிரக்க நோக்கினால் அவ்விதம் அமைத்துக் காட்டியுள்ளார். சிவலிங்க வடிவத்தில் லிங்கம் காரண வடிவம்-சிவம், ஆவுடையார் காரிய வடிவம்-சத்தி - காரணம் அருவம். காரியம் உருவம். ஆக சிவலிங்க வடிவம் அருவத்தையும் உருவத்தையும் (சிவ சக்தியையும்) குறிப்பதாம். ‘சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே‘ என்றும் ’சிந்தைதனைத் தெளிவித்து சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம்’ என்றும் பாடியுள்ள அவரது கூற்றின் வாயிலாகவே அவர் சிவமானார் என்னும் உண்மை பெறப் படுகிறது. அதனாலேயே அங்கு லிங்கம் இன்றி ஆவுடையார் மட்டும் விளங்கச் செய்யப்பட்டுள்ளது. பிற்காலத்தே உலோகத்தால் லிங்கம் செய்யப்பட்டு ஆவுடையார் மேல் வைக்கப்பட்டு உண்மை மறைக்கப்பட்டு வருகிறது. அக்கோயிலில் ஆவுடையார் மட்டுமே மூலத்திலிருப்பதனால் அக்கோயில் ஆவுடையார் கோயில் என்றே பெயர் விளங்கி வருகிறது. மேலும் மற்ற சிவன் கோயிலில் இருப்பதுபோல் இக்கோயிலில் கொடிமரம், நந்தி மற்றும் பலிபீடம் கிடை யாது. மூலவருக்கு காட்டப்படும் கற்பூர தீபாராதனையும் வெளியில் கொண்டுவரப்படுவதில்லை. ஏனெனில் இங்கு மாணிக்கவாசகர் என்று குறிக்கப்படும் ஆன்மா சிவமாகி விட்டது என்கிற உண்மையைக் காட்டுவதனால். மற்ற கோயில் களில் ஆன்மா சிவத்தை முன்னிலைப்படுத்தி வழிபடுகிறது. இப்பேருண்மையை உலகோரும் உணர்ந்து அடைதல் வேண்டும் என்னும் பொதுமை இரக்க உணர்வினால் இக்கோயில் அமைக்கப்பட்டு விளங்கி வருகிறது. அபிடேக

ஆராதனைகளும் வீதி உலாவும் மாணிக்க வாசகர் திருவுரு வுக்கே இங்கு நடத்தப்பட்டு வருகிறது.

கருவறைக்குப் பின்புறத்தில் இறைவன் குரு வடிவில் தோன்றி மாணிக்க வாசகருக்கு திருவடித்தீக்கை செய்த கோலத்தை கல்லில் வடிவமைக்கப்பட்டு வழிபாடு செய்யப் பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு சென்ற போது நம்பியார் இந்த இடத்தைக் காட்டி தீக்கை வகைகள் பற்றியும் மாணிக்க வாசகர் பெற்ற தீக்கைப் பற்றியும் கூறிக்கொண்டு வந்தார். ஐயா அவர்கள் அடிமுடி-அடிமேல், முடி கீழ், இறைவனின் அடியும் ஆன்மாவின் முடியும் சேர்தல் என விளக்கினார்கள். உடனே தலைமை நம்பியார் பெரிய ரோஜா மலர்மாலை ஒன்றை கொண்டு வந்து ஐயாவுக்கு அணிவித்து மிக்கப்பரிவுடனும் பணிவுடனும் அத்திருகோலத்துக்கு ஆராதனைக் காட்டி உபசரணை செய்தார். நம்பியார் அக்கோயிலில் பல ஆண்டு களாக பூசனை செய்து வந்தும் அடிமுடி விளக்க உண்மை யினை அப்போது தான் தெரிந்து கொண்டார் என்பது அவரது உபசரணையிலிருந்து அறிய முடிகிறது.

வள்ளல்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா உரைநடை பகுதியைச் சிறியேன் வாசித்த காலை ஓர் இடத்தில் அடி முடி என சுட்டி, அடிமேல், முடி கீழ் இதை குருமுகமாகக் காண்க என்ற சொற்றொடருக்கு பொருள் விளங்காது ஏங்கி யிருந்தேன். ஒருமுறை ஐயாவிடம் இதை தெரிவித்து விளக்கத் தினை எதிர்நோக்கி நின்றேன். அதற்கேற்றத் தகுதியின் மையாலோ யாதோ! விளக்கம் பிறக்கவில்லை. பலமுறை இது குறித்து சிந்தித்தும் விளங்காமல் ஏக்கமுற்றிருந்தேன். சில ஆண்டுகள் கடந்து திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலில் ஐயா அவர்கள் விளக்க செவி மடுத்து பொருளறிந்து உள்ளம் நெகிழும் வாய்ப்பினை இச்சிறியேனுக்கு திருவருள் கூட்டு வித்தது.

ஒரு முறை தைப்பூச ஜோதி தரிசனங்கண்டு மறுநாள் காலை திருப்பெருந்துறை கோயில் சென்றிருந்தபோது மாணிக்க வாசகர் திருவுருவத்துக்கு அபிஷேகம் நடந்தது. இதற்கு முன் பலமுறை வந்தபோது அபிஷேகம் நடைபெற

வில்லையே என்று வினவிய போது, இன்று பௌர்ணமி, இம்முறை தைப்பூச மறுநாள் பௌர்ணமி வந்ததால் இவ்வாய்ப்பு கிடைத்தது என அறிந்தேன். ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் அபிஷேக ஆராதனையும் கோயில் திருவுலாவும் உண்டு என நம்பியார் விளக்கினார். மாணிக்க வாசகர் சந்நிதிக்கு எதிரில் உள்ள மண்டபத்தில் வரிசையாக உள்ள கற்றூண்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு உருவம் கைகூப்பிய வண்ணம் நின்ற கோலத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளது. அவ்வுருவங்களில் அக்கோயிலை விரிவுப்படுத்திய அரசர்கள் மற்றும் தம்பிரான்கள் இடம் பெற்றிருந்தனர். திருவாவடுதுறை சைவ மட ஆதீனத்தின் கண்காணிப்பில் கோயில் இருந்து வருகிறது. அபிஷேகம் நடந்து கொண்டிருந்த போது ஐயாவுக்கு நேர் எதிரில் முதல் தூணில் வடிவமைக்கப் பட்டிருக்கும் அரச உருவத்தையே நீண்ட நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அடுத்து ஒரு தம்பிரான் உருவமும் ஐயாவின் பார்வையைக் கவர்ந்தது. நெய்வேலி திரும்பிய பின்னர் நோக்கு குறித்து விளக்கம் கோரியபோது அவ் வுருவங்கள் அவரது முற்பிறவியின் தோற்றம் என்ற உணர்வினை தோற்றுவித்ததாகக் கூறினார். சங்கராபுரத்து சாமியார் நீர் ஒரு தம்பிரானாய்ப் பிறக்க வேண்டியவர் காலப் பருவம் சரியில்லாததால் இங்ஙனம் பிறந்திருக்கின்றீர் என மொழிந்ததும் ஈண்டு நினைவு கூறத்தக்கதாம். தம்பிரான் என்ற சொல் உலகியல் மரபுப்படி, அப்பெயரையும் வேடத்தையும் பூண்டோரைக் குறிப்பதாக அமைந்திருப்பினும் தம்+பிரான் என்னும் அச்சொல்லின் உண்மைப் பொருள் தாம் பிரானோடு ஆனவர் என்பதை குறிப்பதாம்.

இக்கோயிலின் மற்றொரு சிறப்பு மூலவர் ஆத்ம நாதருக்கு வெண்சோறும் பாவக்காய் கறியுமே நிவேதனம் செய்யப் படுகிறது. மற்றக் கோயில்களில் உள்ளது போல பலப்பல நிவேதனங்கள் இல்லை. நிவேதனம் செய்யப்பட்ட அச் சோற்றை (சூது மதியினரால் மனித வடிவில் பிறக்கும் போதே உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டுள்ளபடி) பிறப்பினாலேயே தாழ்ந்தவர்கள் என ஒதுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட குலத்த வர்க்கே முதலில் வினியோகம் செய்யும் மரபு இன்னும் நடந்து

வருகிறது. சாதி பேதம் என்னும் பொய்மையையகற்றி ஏழைகளின் பசி தவிர்த்தலே இறைநெறி என்னும் கோட்பாட்டை வலியுறுத்தவே மணிவாசகப் பெருமானால் இந்நியதி வகுக்கப்பட்டது போலும். பாவக்காய் கறி படைக்கப்படுவது, இக்காயம் (சரீரம்) பாவத்தினால் வந்தது. அதனால் இந்தப் பாவக் காயத்தை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து பிறவிப் பிணியை அறுக்க வேண்டும் என்னும் உட்பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆத்மநாதர் வயதானவர் என்றும் அதனால் அவருக்கு மற்ற நிவேதனங்கள் செறிக்காது என்பதால் இந்த நிவேனதம் மட்டுமே படைக்கப்படுவதாக ஒரு கற்பனைக் கதை கூறப்படுகிறது.

ஒருமுறை மூலவருக்கு பின் சுவற்றில் பிரபை வடிவத்தில் இருபத்தேழு விளக்குகளும் அதன்மேல் மூன்று விளக்குகள் ஃ வடிவத்திலும் சுடர் விட்டுக் கொண்டிருந்தன. ஃ வடிவில் அமைந்த மூன்றில் மேல் உள்ளது செந்நிறத்திலும் மற்ற இரண்டில் ஒன்று வெண்ணிறத்திலும் மற்றொன்று மஞ்சள் நிறத்திலும் விளங்கின. செந்நிறத்தில் விளங்கியது அக்கினி யையும் வெண்ணிறத்தது சூரியனையும் மஞ்சள் நிறத்தது சந்திரனையும் குறிப்பனவென்றும் மற்ற இருபத்தேழு விளக்கு களும் இருபத்தேழு நட்சத்திரங்களைக் குறிப்பனவென்றும் இந்த அமைப்பு அண்டக் காட்சியைக் காட்டுவன என்றும் ஐயா விளக்கினார்கள். அவ்விளக்கின் சுடர்கள் சிறிதும் அசைவின்றி காணப்பட்டதனால் உடன் வந்தவர்களில் சக்கரவர்த்தி என்பவர் இவை மின்விளக்காக இருக்குமோ என்னும் ஐயத்தை எழுப்பினார். அவ்வமயம் ஒரு விளக்கின் சுடர் அசைந்தது. அவ்வசைவினை ஐயா அவர்கள் சுட்டிக் காட்ட அவ்வய்யம் அகன்றது.

அடுத்து ஒருமுறை தைப்பூசத்துக்கு முன்னாள் நெய்வேலி யில் சில அன்பர்கள் புடைசூழ தமிழ் மொழியின் சிறப்பு குறித்து பேசிக் கொண்டிருந்தார் ஐயா. அப்போது தமிழ் எழுத்துக்கள் உயிர் என்றும் மெய்யென்றும் உயிர் மெய் யென்றும் ஆயுத எழுத்தென்றும் அமைந்துள்ள பாங்கு பிண்ட தத்துவத்தின் விளக்கமென்றும் ஆயுத எழுத்தின் மேலுள்ள

வட்டம் நெற்றிக் கண்ணையும் கீழமைந்துள்ள இரு வட்டங்களும் முகத்தின் இரு கண்களையும் குறிப்பனவென்றும் மேலுள்ள நெற்றிக்கண் மூடிக்கிடப்பதனாலேயே உயிர்கள் அஞ்ஞான இருளில் சிக்குண்டு தவிக்கின்றன, அக்கண் திறக்கப் பெறுதலே மெய்ஞ்ஞானம் பெறுதல் என்றும் ஃ எனும் ஆயுத எழுத்தை உச்சரிக்கும் போது அண்ணாக்கும் உண்ணாக்கும் ஒன்று சேர்ந்து மூச்சுக்காற்றும் ஓசையும் அடங்க அங்கே மோனம் பிறத்தலை உய்த்துணரலாம் என்றும் விளக்கி மேலும் தமிழ்மொழியில் பொய்யெழுத்தென்பது இல்லை; ஆகவே அது சாகா மொழியென்றும் அதனால் தான் சாகாக் கல்வியைக் கற்பிக்க வல்லது தமிழ் மொழி யொன்றே என்னும் வள்ளல் பெருமான் மொழிந்த மெய்ப்பாட்டினையும் விளக்கினார்கள். காரணமின்றி காரியமில்லை என்னும் ஆதார உண்மையின் படி தமிழ் மொழியில் உள்ள காரணச் சொற்கள் தான் தமிழ் என்றும் இடுகுறிச்சொற்கள் புகுந்தவை என்றும் அதனாலேயே தொல்காப்பியம், பாணினீயம் முதலிய இலக்கண நூல்களிலும் குற்றங்கள் உள்ளனவென்று வள்ளலார் கூறினார் என்றும் தொடர்ந்து விளக்கினார்கள்.

இந்த உண்மைகள் எந்த சத்தியால் மறைக்கப்பட்டுள்ளனவோ! தமிழறிஞர்களும் ஏன் கண்மூடியுள்ளனரோ! தமிழர்கள் என்று கண் திறப்பரோ! மெய்யுணர்ந்தெழுவரோ! ஆதியால் தோற்றுவிக்கப்பட்டுள்ள இவ்வுலகம் அனாதி இறை மொழியாம் தமிழைப் போற்றி உய்யும் பேறு என்று பெறுமோ! கள்ள வாதனையைக் களைந்தருள் நெறியைக் காதலித் தொருமையில் கலந்தே உள்ளவாறிந்த உலகெலாம் களிப்புற் றோங்குதல் என்று வந்துறுமோ வள்ளலே... என்று அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரிடத்தில் வள்ளல் பெருமான் முறையிட்டு ஏங்கு வதையும் உணர்ந்து நாமும் முறையிட்டு ஏங்குவோம்.

மறுநாள் தைப்பூச ஜோதி தரிசனம் கண்டு அதற்கடுத்த நாள் திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) சென்ற போது கருவறையில் கண்ட காட்சி அற்புதக்காட்சி. மூலவரைச் சுற்றி பிரபைவடிவில் பன்னிரு விளக்குகளும் (வலப்புறம் ஆறும்

இடப்புறம் ஆறும்) மேல்புறத்தில் ஆயுத எழுத்து ஃ வடிவில் மூன்று விளக்குகளும் சுடர் பரப்பிக் கொண்டிருந்தன. உடன் வந்தவர்களில் சக்கரவர்த்தி அவ்விளக்குகளை எண்ணி பன்னிரு விளக்குகளும் மேல் மூன்று விளக்குகளும் இருப்பதை கூட்டி இது எதைக் குறிக்கின்றனவென ஐயாவிடம் கேட்டார்.

பன்னிரு விளக்குகளும் தமிழ்மொழியின் பன்னிரு உயிர் எழுத்துகளையும் மேல் உள்ள மூன்றும் மோன எழுத்தாம் ஆயுத எழுத்தையும் குறிப்பனவென்றும் இங்கு வருவதற்கு முந்திய நாள் தமிழ் மொழியின் எழுத்துக்கள் குறித்து பேசியதையும் அதற்கேற்ப மாணிக்கவாசகர் அமைத்த கோயிலில் விளக்குகள் சுடர்விடுவதையும் ஒற்றுமைப்படுத்தி காட்டினார்கள். அதைக் கேட்டு எங்கள் மெய்சிலிர்க்க எங்கள் உணர்வில் இன்பம் ஊற்றெடுத்தது. அத்துடன் ஐயாவுக்கும் மாணிக்கவாசகருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை எண்ணியும் வியந்தோம்.

ஐயா அவர்கள் மூலவரையே நோக்கி நின்று கொண்டிருந்தார். உடன் சென்றிருந்த நாங்கள் நால்வரும் அங்கு சுவற்றில் எழுதப்பட்டிருந்த திருவாசகப்பாடல் ‘நிலநீர் நெருப்புயிர் நீள் விசும்பு... திசை பத்தெனத் தான் ஒருவனுமே பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ‘ என்னும் பாடல் (எண் 319) குறித்து உரையாடிக் கொண்டிருந்தோம். சிறிது நேரங்கடந்து ஐயா அவர்கள், ஆயுத எழுத்து வடிவத்தில் அமைந்திருந்த விளக்குகளில் கீழ் இரு விளக்குகளும் அணைந்து மீண்டும் சற்று நேரங்கடந்து சுடர்விட்டு எரிவதைப்பார்த்து அரிய சித்து. இந்த நிகழ்ச்சியை நீங்கள் கண்ணுற்றீர்களா என வினவினார். எங்களில் சக்கரவர்த்தி பார்த்ததாகக் கூறினார். மற்ற நாங்கள் பாடல் குறித்து உரையாடிக் கொண்டிருந்ததால் இடையில் அணைந்ததைக் கண்ணுறவில்லை எனக் கூறினோம். கருவறையில் யாரும் இல்லை, அதனால் அணைந்த விளக்கை யாரும் ஏற்றவில்லை என்பது தெளிவு. பின்னர் தான் குருக்கள் வந்து உள்ளே சென்றார். அருள் பேறு பெறின், மாயை ஒளியால் காணும் திறமுடையக்கண்கள் அந்நிலைமாறி அருள் ஒளியால் யாவையும் காணும் திறம் பெறும் என்பதைக்

காட்டுவனவாகும் இவ்வற்புத நிகழ்ச்சி என ஐயா விளக்கந் தந்தார்.

.....செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்கவென எனக்கே, திருவுளம் பற்றிய ஞான தேசிக மாமணியே...' என்னும் அருட்பா பாடலும் அமைந்துள்ளதை எண்ணி மகிழ்ந்து அப்பேற்றினைப் பெற அருட்சோதியை இறைஞ்சுவோமாக.

எல்லாக் கோயில்களும் கிழக்கு நோக்கியிருக்க இக் கோயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. சிதம்பரத்தில் பொற் சபையும் தெற்கு நோக்கியே அமைந்துள்ளது. வள்ளலார் திசைகள் குறித்து தந்துள்ள விளக்கத்தில் தென்திசையை ஞானதிசை எனக் குறித்துள்ளார். தமிழ் மொழி தென்மொழி யென்று பெரியோர்கள் பாடியுள்ளனர். உலகில் பொதுவாக மனிதர்களால் பேசப்படும் மொழிகளை கருத்துக்களை சுமந்து செல்லும் வாகனம் என்றே கூறுகின்றனர். இக்கருத்து பற்றியே மொழிகளுக்கு பாடை (வடமொழிப்படி பாஷை) எனக்கூறும் வழக்காறும் உள்ளது போலும். ஆயினும் தமிழில் மொழி என வழங்கும் சொல் இக்கருத்தினைக் கொண்டதன்று.

ஐயா அவர்கள் ஒரு முறை மொழிக்கு விளக்கம் தந்த போது அச்சொல்லை ம்+ஒழி எனப் பிரித்து மோனம் கலைந்த (ஒழிந்து) இடத்தில் பிறந்தது என்றும் பொருள் கூறினார்கள். வள்ளலார் தென்மொழி எனத் தமிழைக் குறித்ததும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் வள்ளல்பெருமான் மொழிகளைப் பற்றிக் கூறியதை, தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துக் காட்டும் பொருட்டு இங்கே குறிக்கப்படுகிறது.

தமிழ்மொழியின் சிறப்பு

'வாச்சிய லட்சிய மொழி வரலாறு என்னையெனின்:- மனிதர், தேவர், முனிவர், அரிபிரமர், உருத்திராதியர் மொழியாய ஆங்கார மொழி, பிரகிருதி மொழி, மாயை மொழி என்பவை அசுத்தமும், சுத்தமுமாகிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரண வைகரியாதி நான்கு வாக்கின் காரியமொழியாகலின் மெய்மொழியன்றென்க. சதா சிவாதி மொழியாகிய பிரணவ

மொழி சுத்த சத்தார்த்த பிரபஞ்ச காரணமாகிய அபர வயிந்துவ காரிய மொழியாகலின் வாச்சிய மெய்ம்மொழி யாயிற்றென்க. பரசிவ மொழியாய திருவருள் துரிய மொழி, துரிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாய்ச் சிற்சத்தி பரவிந்துவிற் பதிதலான் நாதமாத்திரத்தின் உண்டாய மொழியாகலின் லட்சிய மெய் மொழி யாயிற்றென்க'.

திருவருளின்பத்தை அங்கைக் கனியிற் பெற்ற பெரியார் களாகிய நாயன்மார்களைப் பாடுவது எங்ஙனமென சேக்கிழார் பெருமான் தில்லை அம்பலத்தில் இறைவனை நோக்கி ஏங்கி நின்ற காலத்தில் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் எடுத்துக் கொடுக்கப்பட்ட 'உலகெலாம்' என்னும் தமிழ்ச்சொல் மெய் மொழியினது பொருள் விளக்கம் என்பதை விளக்குங் காலத்தே மேற்குறித்த வாறு மொழிகளைப் பற்றி விளக்கி தமிழ் மொழி பரசிவ மொழி என்பதை விளக்கியுள்ளார்.

மேலும் 'தமிழ்' என்னும் சொல்லுக்கிட்ட உரையில் 'மருளியற் கை மல இருளைப் பரிபாக சத்தியால் அருளொளி யாக்கி, அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசத்தி யென்னும் சுத்த ஆன்மாவானது தகர-ககன-நடன அருட்பெருஞ்ஜோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தை சுத்த மோனாதீத வியலால் அனுபவிக்கும் இயற்கை யுண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க. இதன் கருத்து யாதெனில் தமிழ் பாஷையே அதிக சுலபமாகச் சுத்த சிவானு பூதியைக் கொடுக்குமென்பதாம்' என்றும் தமிழ் மொழியின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

நால்வர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் 'தேவாரம்' பாட 'பித்தா' என்னும் தமிழ்ச் சொல்லை இறைவன் அடி எடுத்துக் கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது. திருஞான சம்பந்தர் வடமொழி வேதமோதும் பிராமண குலத்தில் பிறந்தும் வட மொழியில் வல்லுநராயிருந்தும் இறைவனைப் போற்றும் தேவாரத்தினைத் தமிழில் தான் பாடியுள்ளார். மேலும் தன்னை தமிழ்ஞான சம்பந்தன் என்றே குறித்தும் பாடியுள்ளார். உலகில் தமிழ் மொழியோடு வேறு சில மொழிகள் உயர்தனிச் செம்மொழியென குறிக்கப்

பட்டுள்ளன. அவ்விதம் கூறப்படும் மொழிகள் தமிழ் போன்று எல்லாம் வல்ல இறைவனோடு தொடர்புடையன என்பதற்கு சான்றுகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. வடமொழி தேவமொழி என்று சொல்லப்படுவது போன்று மற்ற அம்மொழிகளுக்கும் இருந்தால் அவ்விதம் இருக்கலாம். ஏனெனில் சாகாக்கல்வியைப் போதிக்கவல்லது தமிழ் மொழி ஒன்றே என்னும் வள்ளல் பெருமான் அருளுரையிலிருந்தும் இவ்வுண்மை தெளியக்கிடக்கின்றது. அத்துடன் தமிழ் செத்தாரையும் எழுப்பவல்லது. எழுப்பியுள்ளது என்பது, திருநாவுக்கரசர் நச்சரவத்தால் கடியுண்டு இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிரெழுப்பியதாலும், சுந்தரர் முதலை வாயுண்ட பாலகனை சில ஆண்டுகள் கழித்து மீண்டும் முதலை வாயினின்றும் உயிரெழுப்பியதாலும் திருஞானசம்பந்தர் அவரிடம் பக்தி பூண்டு அவரையே நாடி நின்ற பூம்பாவை என்னும் பெண் இறந்தபின்னர் எரியூட்டப்பட்டு அவ் வெலும்புகளை அப்பெண்ணின் தந்தையார் மட்குடத்தில் சேகரித்து வைத்திருந்ததை மீண்டும் அம்மட்குடத்திலிருந்து தமிழில் பாடி, அப்பெண்ணை உயிரெழுப்பியதலிருந்தும் தெளியக்கிடக்கிறது.

வேலூர் ஐயா அவர்களின் அருளுரையில் தமிழ் அனாதி மொழியென்றும், பொய்யா மொழியின் திருக்குறளின் முதலடியாம் அகரமுதல எழுத்தெல்லாம்... என்னும் தொடர் தமிழ் இறை மொழி என்பதை விளக்குவன என்பதற்கு பற்பல விளக்கங்களும், அருட் பெருஞ்ஜோதியின் தனிப்பெருஞ் கருணையே தமிழ் என்றும் அதற்கான சான்றுகளும் பரக்க விரித்துரைக்கப்பட்டுள்ளது. மறைந்த, மறைக்கப்பட்ட இப் பேருண்மைகளை இவ்வுலகம் அறிந்து உய்வு பெறும் பொருட்டே திருவருளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கருத்துக்களை சுமந்து செல்லும் வாகனம் மொழி என்னும் மேனாட்டார் கருத்துப்படி மற்ற உலகமொழிகளுக்கு பாஷை (பாடை) என்னும் சொல் பொருத்தமுடையதாக இருக்கலாம். ஏனெனில் சாகாக்கல்வியை போதிக்க வல்லன அல்ல என்பதனாலும் அநித்தியத்தையே அவைகள் தம்பால்

கொண்டுள்ளன என்பதனாலுமாம். தமிழ் மொழியில் கருத்து பரிமாற்றமும் நடைபெறுவதனால் பாடை என்னும் சொல் வழக்கு தமிழுக்கும் குறிக்கப்படுகிறது. அத்துடனல்லாது இறைதன்மையைத் தம்பால் பெற்றுள்ளதனால் மொழி என்னும் பண்பாட்டுச் சிறப்பினையும் பெற்றிருக்கிறது. இது நோக்கியே தமிழ் மொழி (கருந்தமிழ் என்பதும் வழக்கு) கொடுந்தமிழ் என்றும் செந்தமிழ் என்றும் தீந்தமிழ் என்றும் வழங்கப் பெறுகிறது. இந்த உண்மையை ஐயா அவர்கள் முத்தமிழ் என்பதற்கு விளக்கம் தரும் காலை உலகத்தமிழ் என்றும் (கொடுந்தமிழ்) ஞானத்தமிழ் என்றும் (செந்தமிழ்) அருள் தமிழ் என்றும் (தீந்தமிழ்) எடுத்துக் காட்டியுள்ளார். மாயா உலக வழக்கில் வழங்கப்படுவதால் உலகத் தமிழ் என்றும் மாயை கடந்த சாந்த வெளியில் வழங்கப்படுவதனால் ஞானத் தமிழ் என்றும் சுத்த வெளிக்கப்பால் அருளால் வழங்கப் படுவதனால் அருள் தமிழ் என்றும் மேலும் விளக்கினார்கள்.

மீண்டும் திருப்பெருந்துறை

ஆவுடையார் கோயிலின் கிழக்கு புறத்தில் பல அறைகள் கொண்ட நீண்ட கட்டிடம் அமைந்துள்ளது. தானியங்கள் சேமித்து வைக்கும் அறைகள் எனக் கூறப்படுகின்றன. அவை களை நோக்கும் போது மிகுதியான தானியங்கள் கோயிலுக்கு வந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. மன்னர்களாலும் செல்வந்தர்களாலும் கோயிலுக்குத் தருமமாகத் தந்த விளை நிலங்களிலிருந்து வரும் தானியங்களைச் சேமிக்கவே அவ வறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று (1989) அவ்வறைகளின் பழுதடைந்த கோலத்தைக் காணும் போது சேமிக்கும் அளவிற்கு தானியங்கள் வராததால் பயன்படுத்தப் படாமலே இந்நிலைக்கு விடப்பட்டது போலும். ஏழைகளின் பசி தவிர்த்தலே இறைவழிபாடு என்கிற உண்மையை விளக்க அமைந்தது இக்கோயில் என்பதை தானிய அறைகளும் கருவறையில் அமைந்துள்ள சோற்றுப்படையலுக்குரிய பெரிய கற்பலகையும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. சோற்றை வடித்து அக்கற் பலகையில் குவித்து மூலவருக்கு நிவேதனம் காட்டி ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்

பட்டிருக்கின்றது. அதன் அடையாளமாகத்தான் தற்போதும் மிகச் சிறிய அளவில் நடந்தும் வருகின்றது. அம்மட்டோடன்றி அந்நிவேதனம் மிகத் தாழ்த்தப்பட்டவர்களாக சுயநல மனிதர்களால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு முதலில் வழங்கப் பட்ட பின்னரே மற்றவர்களுக்கு வழங்கப்படுகின்றது. பிறப்பினால் தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்பது இறைவனுக்கு ஏற்புடைய தன்று என்கின்ற உண்மையை இவ்வுலகிற்கு மாணிக்கவாசக பெருமான் எடுத்துக்காட்டியுள்ளார். பண்டைய காலத்தில் அறத்தை வளர்க்க மன்னரும் மக்களும் தங்கள் சொத்தை கோயிலுக்கு ஈத்தனர். இக்காலத்தே அச்சொத்துக்கள் தனி மனிதன் சொந்த உடைமையாக மாற்றப்பட்டும் மாறியும் வருகின்ற அவலத்தை காண நேர்ந்துள்ளது.

1990ம் ஆண்டு தைப்பூச ஜோதி தரிசனம் கண்டு மறுநாள் காலை திருப்பெருந்துறை கோயிலை அடைந்த போது தலைவாயில் மூடப்பட்டு இருந்தது. கோயில் வழிபாட்டிற்கு வந்த மக்கள் யாரையும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை வெளி மண்டபத்தில் கூடி இருந்தனர். அய்யா வந்துள்ளதை அறிந்த குருக்கள் தலை வாயிலுக்கு கிழக்கில் வண்டிகள் செல்லும் வாயில் கதவை திறந்து அதன்வழியாக உள்ளே அழைத்து சென்றார். உள் மண்டபத்தில் கோயில் குருக்கள் மார்கள் பணியாளர்கள் தருமபுரம் ஆதீனத்திலிருந்து வந்திருந்த துறவியார் ஒருவர் ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். கோயிலின் உள்வாயில் கதவும் மூடப்பட்டு இருந்தது. நாங்களும் உள் மண்டபத்தில் அமர்ந்தோம். தலைமை குருக்கள் முன்னாள் இரவு கோயிலில் களவு நடந்ததையொட்டி காவல் துறையினர் கதவுகளை மூடி முத்திரையிட்டு (சீல்) சென்னையிலிருந்து கைரேகை நிபுணர்களை அழைத்துள்ளனர் என்று ஐயாவிடம் கூறினார். கோயிலின் உள்ளும் தலைமை கோபுரமும் பழுதுபார்க்கும் பணி நடந்துக்கொண்டிருந்ததால் களவுக்கு இட மேற்பட்டதாக பேசப்பட்டது.

களவினை கேள்வியுற்ற ஐயா அவர்கள் ஏறத்தாழ ஒரு மணி நேரம் மௌனத்தில் ஆழ்ந் திருந்தார். பின்னர் நாங்கள்

புறப்பட தயார் ஆனோம். ஐயா எழுந்து கிழக்கு நோக்கி அடி யெடுத்து வைத்தபோது மிக வேகமாக சிறிது நேரம் கிழக்கு திசையில் இருந்து மேற்கு நோக்கி காற்று வீச தொடங்கியது. அதனால் ஐயா அவர்கள் அப்படியே நின்று விட்டார்கள். அந்த காற்று வீசிய நேர்த்தி ஐயா புறப்படுவதை விரும்பாததை போல இருந்தது. திருப்பெருந்துறை பயணமும் மேற்கொண்டு தொடர முடியாததோர் சூழல் உருவாகும் என்பதை அறிந்தே இயற்கையும் இவ்விதம் கலங்கியது போலும்.

தமிழகத்தில் தோன்றிய பெரியார்கள் இறையனு பவத்தை கனவிலும் விழிப்பிலும் நேரிலும் பெற்றதாக அவர்கள் பாடிய பாடல் வாயிலாக அறியக்கிடக்கின்றது. அவ்வழியே நமது ஐயா அவர்களும் கண்ட கனவுகள் எத்தனையோ!! பெற்ற விளக்கங்கள் எத்தனையோ! எனினும் விரி வஞ்சி சில நம்ம னோர் தெளிவுபெற உதவியாக இருக்குமென்பதால் இங்கே சுருங்கக்கூறி பல விடுவிக்கப்பட்டுள்ளன. ஐயா அவர்கள் நாடகத்தின் வாயிலாகவும் தகுதிவாய்ந்த அன்பர்கள் பலரை கூட்டி தனியே ஒரு சிற்றூர் போலமைத்து வாழ்ந்து காட்டுவதன் மூலமும் வகுப்புகள் நடத்தி பயிற்சி கொடுத்தும் உலகத்திற்கு சன்மார்க்க நெறிகளை பரப்ப வேண்டும் என்கின்ற இச்சையை அவ்வப்போது வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் வள்ளல் பெருமானின் தனிச்சிறப்பையும் அவர் பெற்ற ஒப்பற்ற பேற்றி னையும் வெளிப்படுத்தியுள்ள பேருண்மைகளையும் உலகறியச் செய்ய வேண்டும் என்னும் தனது பெரும் வேட்கையையும் வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு பெரும் பொருள் (கோடிக் கணக்காக) வேண்டும் என்றும் ஆயினும் அதற்கேற்றக் கால பருவமும் உயிர் பரிபாகமும் சரியில்லையென்றும் விளக்குவார்கள். நாடகம் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறும்போது காண்போர் எத்தரத்தினராயினும் காண்கின்ற அக்காட்சி யுடன் இரண்டற கலக்குமாறு அக்காட்சிகள் தத்ரூப மாகவும் அதற்கேற்ப அகத்தும் புறத்தும் ஒத்து நடிக்கும் திறமையுடைய பாத்திரங்களும் அமைய வேண்டும் என்று விளக்குவார்கள்.

சிற்றூர் அமைத்து வாழ்ந்து காட்டும் முறையை விளக்கும்

போது நாவில் நீருறும். அருஞ்சுவையும் நறுமணமும் அழகிய தோற்றமும் உடைய பண்டங்களை காணுந்தோறும் நாவில் நீரூறுதல் போன்று நல்ல விளக்கங்கள் செவி வழி மடுக்கும் போதும் நாவில் நீருறுதல் வியப்பன்று. தற்போது இச்செயல் பாடுகள் கானல் நீர் போன்று தோன்றினாலும் உத்தமர் உள்ளத்திலே ஊறிய வேட்கையல்லவா! அவை வீண் போகா. உரிய காலமும் உயிர்பரிபாகமும் வருவது நிச்சயமே.

கனவு - 1

இந்நிலையில் ஐயா ஒரு நாள் இரவு கனவில் ஒரு குளக்கரை சென்றபோது அங்கிருந்த விநாயகர் கோயில் முன் நின்றுள்ளார். அப்போது சிலை வடிவிலிருந்த விநாயகர் உருக்கொண்டு வந்து தங்கம் செய்யும் விதத்தைப் பற்றி விளக்கம் தந்து இது உரிய தருணத்தில் உரிய செயலுக்கே உரியது என்றும் மொழிந்து மறைந்துள்ளார். இதை வாசிக்கும் நம் போன்றவர் களுக்கும் இப்படியொரு விளக்கம் நமக்கு கிடைக்காதா என்னும் இச்சையெழச் செய்யும், நமக்கும் கிடைக்கும் நாமும் பற்றற்றால்.

கனவு - 2

ஐயா பிறந்த ஊர் அருகில் பெரிய அளவிலான இராஜகோபால் சுவாமி கோயில் ஒன்றுண்டு. இளமை பருவத்தில் அக்கோயிலுக்குள் தனிமையாக சென்று அமர்ந் திருக்கும் வழக்கம் எமக்கு உண்டென்று ஐயா கூறியுள்ளார். ஒருமுறை கனவில் கோயிலுள் சென்று அமர்ந்திருந்தபோது தன் தேகத்தை பார்த்து (அறுபதாண்டு பருவம்) மனித பிறவி எடுத்து அடையத்தக்க முழுப்பேற்றினை இன்னும் அடைய வேண்டியுள்ளதே, அதற்குள் இத்தேகம் முதுமை தோன்றி தளரத் தொடங்கியுள்ளதே என்று எண்ணி வருந்தியுள்ளார். அவ்வருத் தத்தோடு கோயிலிலிருந்து புறப்பட்டு வரும்போது கோபுர வாயிலருகில் பெரியதொரு நிலைக்கண்ணாடி இருக்க அதைப்பார்த்த போது அக்கண்ணாடியில் பன்னிரெண்டு வயது சிறுவனைப்போல தன் வடிவம் தோன்றுவதைக் கண்டு அதிசயித்து தன் தேகத்தைப் பார்த்துள்ளார். அதில் மாற்றம்

இல்லை. ஆனால் கண்ணாடியில் மட்டும் இளமை வடிவத்தை கண்ணுற்ற படியே விழித்தபோது புத்துணர்வு உடம்பெல்லாம் பாய மெய் சிலிர்க்க ஓர் இன்ப உணர்வினை பெற்றுள்ளார்.

இக்கனவினை அய்யா விளக்கிய போது இத்தேகம் அசுத்த மாயா பூத அணுக்களால் ஆன அசுத்த தேகம். இதற்கு தோற்றமும் வளர்ச்சியும் தளர்ச்சியும் பிணியும் முதுமையும், முடிவும் உண்டு. இது உன்னுடைய வடிவம் அன்று. நீ என்றும் இளமை உடையவன். அதை நீ பார் என்று இறைவன் காட்டியதே கண்ணாடியில் தோன்றிய இளமை வடிவம் என்றார்கள்.

கனவு - 3

ஒருமுறை கனவில் ஓர் அழகிய துறவி வடிவில் ஒரு பெரியவர் ஐயாவை சந்தித்து ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். என்ன என்று வினவ, நான் சொல்வதை நீ சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். அம்மாதிரி சொல்ல முடியாது என்று ஐயா மறுக்க ஒரே ஒருமுறை எனக்காக சொல்ல வேண்டும் என்று கெஞ்சியுள்ளார். அவர் கெஞ்சியதை கேட்டு இரக்கந்தோன்ற இசைந்துள்ளார். அப்பெரியவர் கூறியது ஒரு மந்திரமொழி என்றும் அது ஆறாவது அறிவை கடந்து ஏழாவது நிலையினை காட்டும் ஒரு விளக்கமென்றும் ஐயா கூறினார்கள். வந்தவர் முருகன் என்றும் அம்மொழியினை வெளிப் படுத்துவது முறையன்று எனவும் முடித்தார்கள்.

கனவு - 4

ஒருமுறை கனவில் ஐயா ஒரு வழியே சென்று கொண்டிருக்க அறிமுகமில்லாச் சிலரும் அவர்பின் தொடர ஒரு பெரிய வீடும் அவ்வீட்டில் கூட்டமும் நிறைந்திருக்க என்ன குறிகள் என்றறிய அவ்வீட்டினுள் செல்ல அங்கே கூடத்தினுள் ஒரு பெரியவர் அமர்ந்திருக்க அவர் பக்கத்தில் சாவிக்கொத்து இருப்பதைப் பார்த்து என்ன நடக்கிறது என்பதை காண நின்றுள்ளார். அப்பெரியவர் அக்கூட்டத்தினைப் பார்த்து நான்ஓர் உண்மையை விளக்க போகிறேன். அவ்விளக்கத்தை பெற தகுதியுள்ளவன் உங்களில்-ஐயாவை சுட்டிக்காட்டி-

அவன் ஒருவன் தான் எனக்கூறி அழைத்துள்ளார். ஐயா அருகில் செல்ல அவ்வுண்மையை காட்டி பக்கத்தில் இருந்த சாவிக்கொத்தை எடுத்து ஐயாவிடம் தந்து இச்சாவிகளுக்கு உரியவன் நீதான் என்று கூறி மறைந்துள்ளார். ஐயாவும் உடன் விழித்துள்ளார். அப்பெரியவர் காட்டியது சின் முத்திரை யென்றும் வந்தவர் தென்முகக்கடவுள் (தஷ்ணாமூர்த்தி) என்றும் கூறினார்கள். கொடுக்கப்பட்ட சாவிகளுக்கு விளக்கம் ஐயா விளக்கவில்லை எனினும் ஐயாவின் அருளுரைகள் அதற்கு விளக்கம் பகர்கின்றன. எத்தனையோ உண்மைகள் மறைத்து மூடப்பட்டுள்ளன. அவைகளை திறந்து உலகிற்கு காட்டுவதும் அம் மட்டோடன்றி இது காறும் வெளிப் படாத உண்மைகளையும் திருவருளால் திறந்து உலகுக்கு காட்டு வதுமே அச்சாவிகள் என்பது குறிப்பாலுணர்த்தும் உண்மை யாகும்.

கனவு - 5

ஒருநாள் இரவு கனவில் ஒரு துறவியும் அவர் பின் ஐயாவும் ஒரு காட்டு வழியாக சென்று கொண்டிருக்கிறார்கள். ஒரு வீட்டை அடைந்தனர். அந்த வீடு மண்டபம் போன்று காட்சி தந்தது. அங்கே வெளியிலும் உள்ளேயும் பலர் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது இரவு 12.00 மணி. அத்துறவி ஐயாவை இவர்கள் விழிப்பதற்குள் உமக்கு திருவருட்பிரகாச வள்ளலார் பெற்ற பெரும் பேற்றினை (மரணமில்லா பேரின்ப பெருவாழ்வு) காட்டுகிறேன், வாவென அவ்வீட்டைச் சுற்றி பின்புறமாக அழைத்துச் சென்று ஓர் இடத்தில் நின்று அதோ பார் எனக்காட்ட அப்பேற்றின் நிகழ்வு அனுபவ பூர்வமாக அகவுணர்வில் தோன்றக் கண்டு மெய் மறந்து சிறிது நேரம் நின்றபின் பார்க்க அத்துறவி அங்கு காணப்படவில்லை. அக்காட்சி ஐயாவிற்கு அகத்தும் புறத்தும் ஓர் எல்லையற்ற இன்ப உணர்வினை ஊட்ட விழித்துள்ளார். விழித்தப் பின்னரும் அக்காட்சியும் அவ்வின்ப உணர்வும் நெடுநேரம் நிலைத்திருந்ததாம்.

கண்ட அக்காட்சி சொல்லால் விளக்கக் கூடியதல்ல வென்றும் பக்குவத்திற்குரியவர்கள் மட்டும் அனுபவப்

பூர்வமாக காணக்கூடியது என்றும் விளக்கியபோதும் அக்காட்சியை இப்போதும் என்னகத்தேக் காண்கின்றேன் என்றும் கூறினார்கள். துறவியாக வந்து காட்டியவர் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரோ! அல்லது அருட்பிரகாச வள்ளலோ! வள்ளல் பெருமான் அப்பேற்றினைப் பெற்ற காலம் இரவு 12 மணி. ஐயா அவர்களுக்கு அக்காட்சியைக் காட்டிய நேரமும் இரவு 12 மணி என்பது ஒப்பு நோக்கத்தக்கது.

கனவு - 6

இதுகாறும் இவ்வுலகினும் மற்றெவ்வுலகினும் ஒருவரானும் பெறப்படாதப் பெரும் பேற்றினை பெற்ற வள்ளல் பெருமானின் ஈடு இணையற்ற சிறப்புகள் மாயப் போக மாந்தரால் மறைக்கப்படுவதனால் அம்மறைப்பினைப் போக்குமுகத்தான் அப்பெருமான் சித்தி பெற்ற சித்தி வளாகத்திலே திருப்பணி செய்ய முனைந்து முயற்சி செய்து வந்த காலை ஒருநாள் இரவு கனவில் சித்தி வளாகத் திருக்கோயிலின் முன் ஐயா நின்றிருக்க நாகத்தின் உருவம் செதுக்கப்பட்ட கற்கள் (நாகப்பிரதிஷ்டை) சுற்றிலும் காணப் பட்டன. அக்கல் நாகங்களின் வாயினின்றும் எச்சில் பிசின் போன்று ஒழுகுவதை கண்டு இவ்வுயிரற்ற நாகங்களின் வாயினின்றும் நஞ்சு வெளிப்படுகிறதேவென அதிசயித்து நின்றுப் பின் விழித்துள்ளார். தற்போது சித்தி வளாகத் திருக்கோயிலின் முன்னர் நடைபெற்று வரும் சீரிய திருப் பணிகள் தொடங்குவதற்கு முன், பலராலும் பலவகையிலும் மறுப்பும் தடையும், சிற்றுரையும், ஏளனமும் எழுந்தபோது இவற்றை முன்கூட்டி எனக்கு எடுத்துரைக்கத் தான் மேற்கூறிய வண்ணம் கனவு தோற்றுவிக்கப்பட்டது போலுமெனக் கூறியமைந்தார். எவ்விதம் உயிரற்ற கல் நாகங்களின் வாயினின்றும் ஒழுகிய நஞ்சு பிறவுயிர்களைக் கொல்லும் குணமற்றதோ அவ்விதமே தோற்ற மாத்திரமான மாயையும் அம்மாயா மாந்தரும் எழுப்பும் மறுப்பும் தடையும் குறுக்கே நிற்க வலிமையற்றதோடு மாய்ந்தொழிவனவே என்கிற வுண்மை இதனால் அறியப்படுகிறது.

கனவு - 7

ஒரு நாள் கனவில் சித்தி வளாகம் காணச் சென்ற ஐயா அவர்கள் திருவிளக்கின் முன் சென்று நிற்க அவ்விளக்கின் முன், தட்டுகளில் பூ மாலை பழவகைகள் புத்தாடை முதலியன வைக்கப்பட்டு யாரையோ வரவேற்பதற்காக அவைகள் வைக்கப்பட்டிருப்பது போன்று காட்சி தந்துள்ளன. நீண்ட நேரம் அங்கு நின்றிருந்தும் வேறு யாரும் அங்கு வருவதற்கான குறிகள் ஏதும் தென்படாததையெண்ணி வியந்து நிற்கை யில் அப்பொருட்கள் வேறு யாருக்காகவுமல்ல தனக்காக (அவருக்காக) தான் என்னுமோர் உணர்வினை இறைவன் உணர்த்த வுணர்ந்து விழித்து சித்தி வளாகத் திருப்பணிக்கு அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் அனுமதி (வரவேற்பு) கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்தார். வள்ளல் விட்டப்பணியைத் தொடர வந்தவர் ஐயா அன்றோ! தற்போதமின்றி அருட் போதத்தால் செய்யும் பணியே அங்கேற்கப்படும் என்பதற்கு இதுவோர் நற்சான்றாகும்.

கனவு - 8

ஐயா அவர்கள் ஒரு நாள் கனவில் தானிருக்குமிடத்தில் தனது ஆசனத்தில் அமர்ந்திருக்க வள்ளல் பெருமான் திருவுருவம் நிழல் போன்று பூமாலையணிந்த தோற்றத்துடன் எதிரில் தோன்றக் கண்டு தனது கழுத்திலும் அவரணிந்துள்ளது போன்ற மாலையிருப்பதைக் கண்ணுற்று வியந்து விழித் துள்ளார். இக்கனவு ஒருமையைக் குறிப்பதென்பதை குறிப்பா லுணர்த்தினார். வள்ளல் பெருமான் இறை யனுபவத்தைப் பாடுங்கால் அவருருவும் தம்முருவுமொன்றாக ஈருருவம் காணாததைப் பாடலில் காட்டியுள்ளார். அவ்வாறே வள்ளலார் வேறு ஐயா வேறு அல்ல, ஒருவரேயென்பதை இக்கனவு உணர்த்தாது உணர்த்துகிறது போலும்.

சித்திவளாகத் திருப்பணிகள்

இனி ஐயா அவர்கள் சித்திவளாகத்தில் மேற்கொண்ட பணிகள் யாவராலும் நேரில் கண்டு களிப்பேறுவகையடையத் தக்கதாய் அமைந்திருப்பினும் அப்பணிகள் குறித்த சில

வரலாற்றுண்மைகளை சுருங்க கூறுதல் பயனுடைத்தாகு மெனக் கருதியிங்கே எழுதத் துணிந்தனம்.

1979ஆம் ஆண்டு தைப்பூச திருநாளடுத்த மூன்றாம் நாள் வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்ட திருவறை தரிசனம் காண சித்தி வளாகம் சென்றிருந்தபோது அப் பெருமானால், எல்லா மனித குலத்தவரும் கண்டு வழி பட்டுய்யும் பொருட்டுத் தம்மிடம் வைத்திருந்ததை கருணை யினால் வெளியில் கொண்டு வந்து வைத்த சத்திய ஞான தீபத்தினை வழிபட்டு நின்ற காலை அவ்விளக் கமைந்துள்ள அச்சிறு கருவறை (பழைய கட்டிடம்) தூய்மையின்றி ஒட்டடைப்படிந்தும் மேல் தளத்தின் மரக்கழி ஒன்று செல்லரித்து சிதைந்து தொங்கிக் கொண்டிருந்ததையும் ஐயா கண்ணுற்று உள்ளம் புழுங்கினார்.

எவ்வுலகினும் யாவராலும் பெற்றறியா அருட் பேற்றினைப் பெற்ற திருவருட்பிரகாச வள்ளலார் சந்நிதியா இக்கோலத்தில் காட்சியளிக்கிறது எனும் ஏக்கத்துடன் மேட்டுக் குப்பம் தொடக்கப் பள்ளிக் கட்டிடத்தின் அருகில் விட்டிருந்த வண்டியில் (Car) ஏறி புறப்பட அங்கு வந்த போது அங்கு நின்றிருந்த அவ்வூரைச் சார்ந்த முக்கியஸ்தர்கள் சிலர் ஐயாவைக் கண்டு வணங்க, ஐயா அவர்களிடம் திருவிளக்கு சந்நிதியிருந்த கோலத்தைக் கூறி இவ்விழா காலத்திலாவது இந்தவூரைச் சார்ந்த நீங்கள் தூய்மையாகவும் சற்றுப் பொலிவுற விளங்கவும் ஆவணச் செய்திருக்கக் கூடாதா என்று கூறினார். அதற்கு மறு மொழியாக அவர்கள் வள்ளலார் உரியவர்கள் வருங்காலத்து எல்லாந்தானே நடக்கும் எனக் கூறியிருப்ப தனால் உரியவர்கள் வருங்காலத்து எல்லாம் சரியாகிவிடும் எனக் கூறினார். சட்டென ஐயா அவர்கள் அந்த உரியவர்கள் ஏன் நாமாக இருக்க முயற்சிச் செய்ய கூடாது? என்னும் வினாயெழுப்பிப் புறப்பட்டார்கள்.

விழாக்கோலமின்றி வெறுமனே ஒரு சடங்கு போல் நடந்து வந்த சித்தி வளாகத் திருவறை தரிசன விழா அடுத்த ஆண்டிலிருந்தே தைப்பூசத் திருநாள் தொடங்கி திருவறை தரிசன விழா முடிய மூன்று நாட்களும் விழாக் கோலத்தோடு

பொலிவுற்று விளங்க ஐயா அவர்கள் ஆவண செய்தார்கள். அம்மட்டோடன்றி ஆண்டு தோறும் தடையின்றி விழாக் கோலங் காண வேண்டி ஒரு மூலதனத்தையும் வடலூர் வள்ள லார் தெய்வ நிலையத்தில் முதலீடு செய்து வைத்துள்ளார்கள்.

மேலும் வள்ளலாருக்கு ஆண்டவர் தன் வடிவை அருட் பெருஞ்சோதியாகக் காட்டி கொடுத்தாரல்லவா! அத்தகைய சிறப்பினையுடைய அவ்விடம் ஒளியின்றிக் கிடப்பதை யெண்ணி அது ஜோதி மயமாக விளங்கயெண்ணினார்கள். தூய உள்ளத்திலேயெழுந்த நினைவிற்கு தொய்வும் உண்டோ! திருகாப்பிட்டுக் கொண்ட திரு அறைக்கு மேற்கிலும் திருவிளக்கு கருவறையின் பின்புறமும் உள்ள வாசலில் உயர்ந்த இரும்பு தூண் அமைத்து அதன் உச்சியில் கொத்து விளக்கு போன்று நாற்றிசையும் நான்கு விளக்கும் மையத்தில் சற்று உயரத்தில் பெரிய அளவில் ஒரு விளக்கும் ஆக ஐந்து மின் விளக்குகளை அமைத்தார். அவ்விளக்குகள் தடைபடாமல் ஒளிர்வதற்கேற்ப மின் கருவிகளும் இணைப்புகளும் பொருத்தப்பட்டன. அவ்விளக்குகளுக்கான மின் கட்டணத்திற்கும் ஒரு நிதி வடலூர் தெய்வ நிலையத்தில் முதலீடு செய்யப்பட்டது. இதன் வட்டித் தொகையில் இருந்து மின் கட்டணம் செலுத்தவும், மின் விளக்குகளை பராமரிக்க வும் ஆண்டு தோறும் திருவறை தரிசன விழா, மூன்று நாட்கள் விழாக் கோலத்தோடு நடத்தவும் அவ்விழா எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்பதற்கான விளக்க குறிப்பும் தெய்வ நிலையத்தில் கொடுக்கப்பட்டது.

ஐயா அவர்களின் பேருள்ளத்தின் விளைவுதான் அந்நாள் தொடங்கி சித்தி வளாகத்தில் ஆண்டுதோறும் நாம் கண்டு களித்து வரும் விழாக்கோலம். பல ஆண்டுகளுக்கு முன்னர் ஐயா அவர்கள் சித்தி வளாகம் காண வந்த காலை திரு விளக்கினைப் போற்றி வந்தப் பெரியவர் நளசக்கரவர்த்தி நாடார் அவர்களிடம் திருக் காப்பிட்டுக் கொண்டத் திருவறையைத் திறக்குமாறு வழக்கிட்டபோது அப்பெரியவர் அய்யா அவர்களின் நியாய உரிமைவுணர்வினையும் அஞ்சாமையையும் கண்டு அஞ்சி அய்யாவின் கோரிக்கையை

மறுக்க இயலாமலும் அதே நேரத்தில் தனது கடமையினின்றும் தான் வழுவின்றிச் செயல்படும் பொருட்டும் திருவறைக்கதவை தான் திறக்காமல் ஐயாவையே திறந்து காணுமாறு உரிய திறவு கோலை கீழே வைத்தார். அவ்விடத்தில்தான் (வாசலில்) ஐயா அவர்கள் பின்னாளில் (மேலே விவரித்துள்ளது) அமைத்த ஐந்து விளக்குத் தம்பம் அமைந்துள்ளது என்பது ஈண்டறிந்து இன்புறத் தக்கதாம்.

சித்திவளாகத் திருவறை தரிசன விழாவிற்காகவும், அங்கமைந்துள்ள ஐந்து மின் விளக்குகள் பராமரிப்பிற்காகவும், மூலதன நிதி தெய்வ நிலையத்தில் செலுத்தி வைக்கப் பட்டுள்ளது குறித்தும் அந்நிதியின் வருவாயில் இருந்து அப்பணிகள் செவ்வையாக நடத்தப்படுகின்றனவா என்பது குறித்தும் வரும் சன்மார்க்க அன்பர்கள் அறிந்து கொள்ளவும், ஏதேனும் குறைகள் காணப்படின் அக்குறைகளை சுட்டிக் கேட்கவும் ஓர் அறிவிப்பினை கல்வெட்டில் பதித்து அங்கு அமைக்கவும் ஐயாவின் திருவுள்ளம் விழைந்தது. அதன் பொருட்டாக இப்பணிகள் குறித்த விளக்கத்துடன் வள்ளல் பெருமானின் தனிச்சிறப்பினையும் கோடிட்டு காட்டும் வண்ணம் தாமே ஒரு வாசகத்தினை வரைந்து அக்கல் வெட்டினை சித்தி வளாகக் கோயிலின் முன்புறம் அழகுற விளக்குத்தூணுடன் பொருத்தி அமைக்க எண்ணி வரை படத்துடன் சேயாறு கந்தசாமி மற்றும் நெய்வேலி அன்பர்கள் மூலம் வடலூர் தெய்வ நிலைய பொறுப்பாளர்களிடம் அனுமதி கோரப்பட்டது. அப்போது அத்தெய்வ நிலையங் களின் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பேற்று இருந்த திரு ஊரன் அடிகள் சிறிது காலம் தாழ்த்தி கோரிய இடம் திருவிளக்கினை மறைக்கும் என காரணம் காட்டி கோயிலின் வேறு இரு மூலை இடங்களை சுட்டி (அவ்விடங்கள் கோயிலுக்கு வரும் அன்பர்கள் கண்களில் எளிதாகப்படும் இடங்கள் அல்ல) அவ்விடங்கள் ஒன்றில் அமைத்து கொள்ளு மாறு தெரிவித்துள்ளார்.

அத்தெரிவிப்பு அக்குழுவினரின் விருப்பமின்மையோடு அலட்சியபாங்கினையும் புலப்படுத்துவதாக தோற்றினமை

யால் ஐயாவின் திருவுள்ளம் அவ்விதம் அமைக்க இசைவுற வில்லை. அதனால் மேற்படி அன்பர்கள் அறங்காவலர் குழுவினைத் தனித்தனியே அணுகியும் அக்குழுவிலொருவராக இருந்த பொள்ளாச்சி திரு.நா.மகாலிங்கம் அவர்கள் வடலூர் வந்தக் காலை அணுகியும் செய்யவிருக்கும் பணியினால் சத்திய ஞான தீபம் மறைக்கப்படாது என்பதற்கு வரைப்படம் மூலம் விளக்கியும் தமிழகத்தில் சிறந்த கோயில் களின் கருவறைக்கு நேர் முன்புறத்தில் நந்தி, கொடிமரம், பலிபீடம் முதலியன அமைக்கப்பட்டிருப்பதையும் ஐயா அவர்களின் திருப்பணி நோக்கங்குறித்தும் விரிவாக எடுத்துரைத்தும், குழுவினர் பின்னர் கூடிப்பேசியும் சாதகமான முடிவு கிடைக்கப் பெறவில்லை. எனவே திரு. மகாலிங்கம் அவர்களால் மிக மதிக்கப்பெறும் திண்டுக்கல் சரவணானந்தா அவர்களிடம் நேரில் சென்று மேற்படி பணி குறித்து விளக்க, அவர் கடிதம் மூலம் திரு மகாலிங்கம் அவர்களிடம் தொடர்பு கொண்டும் சாதகமான நிலை உருவாகவில்லை.

எனினும் சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களை அணுகி முயற்சித்துப்பார்க்க சிலர் விரும்பியதால் ஐயா அவர்களுக்கு உடன்பாடில்லையெனினும் முயற்சிக்குத் தடைவேண்டாமென மறுக்கவில்லை. அவ்வாறே சென்று ஆணையர் அனுமதிப் பெற,பணி குறித்தும் நடந்த வைகளை சுருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கப் பட்டது. அந்த சமயம் வடலூர் தெய்வ நிலையத்தில் ஒற்றுமை யின்றி சில குழுக்கள் பிரிந்து கருத்து மாறுபாடு நிலவி வந்தது போலும். அதனால் ஆணையர் இந்த முறையும் அத்தகைய ஒரு குழுவெனக் கருதி சற்று வெறுப்புணர்வோடு அறங்காவலர் குழுவுடன் ஒத்துப் போங்கள் எனக் கூறி அவர் பணியில் ஈடுபடத் தொடங்கினார். அந்த நிலையில் மேலும் முயலுதல் பயனளிக்காவெனத் திரும்பினார்கள்.

பின்னர் முயற்சித் திருவினையாக்கும் என்னும் நம்பிக் கையால் வேலூர் கிருஷ்ணா சர்வீஸ் (பஸ்) உரிமையாளர் திரு.கிருஷ்ணசாமி முதலியாரும் சில அன்பர்களும் சென்னை சட்ட மன்ற உறுப்பினரையும் அமைச்சரையும் சந்தித்து

முயன்று பார்க்கலாமென்னும் விருப்பத்தை ஐயாவிடம் தெரிவித்தபோது கசப்புணர்வோடு இது தெய்வப்பணி, மனிதப்பணியல்ல, தெய்வ சம்மதமிருந்தால் நடக்கட்டும் யாரிடமும் மண்டியிடத் தேவையில்லை என்றும் கெட்டது போல நல்லது வரும் நல்லது போல கெட்டது வரும், எல்லாம் நன்மைக்கே என்றும் கூறியமைந்தார். இம்முயற்சிகள் 1980-81 ஆம் ஆண்டு வாக்கில் மேற்கொள்ளப்பட்டவை

இங்ஙனம் சில நாட்கள் கடக்க வடலூரில் வதியும் அருள் திருஞானம் என்பவர் ஒரு நாள் ஐயா அவர்களைக் காண வேலூர் வந்தபோது திருப்பணிக்கு தடை இருப்பதை அறிந்து சித்தி வளாக திருவிளக்கினைப் போற்றி காத்து வந்த பெரியவர் நளச்சக்கரவர்த்தி நாடார் வதிந்து வந்த அவருக்கு சொந்தமான இடம் (கோயிலுக்கு முன்புறம்) அவர் உடல் நீத்த பின்னர் அவருக்கு வாரிசுகளின்மையால் சும்மா இருக்கின்றது. அந்த இடத்தை விலைக்கு வாங்கி அங்கு திருப்பணி செய்யலாம் என்றும் அதற்கு பெரியவரின் உறவினர் சன்மார்க்க நெறியில் ஈடுபாடு உடைய திரு.மகாதேவன் என்பவர் சென்னையில் இருப்பதாகவும் அவரைக்கொண்டு இதற்காவன செய்யலா மெனவும் தெரிவித்தார். திரு.சேயாறு கந்தசாமி சென்னை சென்று திரு.மகாதேவனை சந்தித்து ஐயா அவர்களின் கருத்தினையும், பணியினையும் தெரிவிக்க பெரியவரின் பங்காளி களில் அவர் சொத்தின் மீது உரிமை கொண்டாடக் கூடியவர்களை கலந்து ஆவனச்செய்வதாக கூறி அவ்விதமே அவ்விடத்தை வள்ளலார் திருப்பணிக்காக கிரையம் பேசி விக்கிரையம் செய்து கொடுக்க பேருதவியினை செய்தார். பத்திர எண் 3355 நாள் 29-12-1981ன் படி சொத்து கிரயம் நால்வர் பேரில் திருவாளர்கள் 1. கந்தசாமி, 2. ரா. தீனதயாளன். 3.ச.சுப்புராஜ், 4. துரை.சக்கரவர்த்தி பெறப்பட்டது. இன்று அவ்விடம்தான் ஜோதி வெளியாகி சமரச சுத்த சன்மார்க்க நெறியின் ஒப்புமை கடந்த இயற்கை உண்மை சிறப்பினை எல்லா உலகங்களும் அறிய அறிவிக்கும் இடமாக பொலிவுறு கின்றது. அப்பேருதவியாளர் திரு மகாதேவன் அவர்களும் அவ்விடம் குறித்த கருத்தினை வெளிப்படுத்திய திரு அருள் திருஞானம் அவர்களும் சன்மார்க்க அன்பர்களின் நன்றி

யறிதலுக்கும் வள்ளலார் கருணைக்கும் உரியவர்களாவர்.

திருப்பணி தொடங்க அவ்விடத்தை செம்மை செய்ய முற்பட்ட போது அந்த இடத்தை ஊராருக்கு பொது இடம் ஆக்கிக்கொள்ள விருப்பம் கொண்டிருந்த ஊராரில் சிலர் சில தடைகளை உருவாக்கினர். அது ஊராருக்கு பொது இடமாக ஆகி இருந்தாலும் சித்தி வளாகம் கோயிலுக்கு உரிய இடமாக பொலிவுற்றிருக்காது என்பதை உண்மையறிந்தோர் அறிவர். அவ்வாறு இருந்தும் வடலூரில் வதியும் திரு துறவி கந்தசாமி அவர்களும் ஊரார் சிலர் விருப்பத்திற்கு துணை நின்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாம் என யோசனைக் கூறினார் என தெரியவந்தது. எனினும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருளால் தடைகளைக் கடந்து திருப்பணிகள் நடை பெற்றுக் கொண்டு வருகின்றன.

தொடக்கத்தில் இத்திருப்பணியானது சன்மார்க்க அன்பர்கள் அறிந்துக் கொள்ளும் பொருட்டு விழாக் குறிப்புகள் அடங்கிய கல்வெட்டு ஒன்றினை அமைக்கக் கருதியே தொடங்கப்பட்டது. ஆயினும் இவ்விழாக் குறிப்புகள் அடங்கிய கல்வெட்டு ஜோதி தம்பமாக உருப்பெற்று பொலிவுற்று நிற்கிறது. அத்தம்ப ஒளியானது ஒலியாகி, உருவாகி பக்கத்தே தமிழ் மணி மண்டபமாக உருப்பெற்று நிற்கிறது. அதன் கிழக்கில் அருட்பா மண்டபம் ஒன்றும் உருவாகிக் கொண்டு வருகிறது. இன்னும் சில பணிகள் உருவாகிக்கொண்டும் உருவாகவும் இருக்கின்றன. சிறு துளி பெருவெள்ளம் ஆவது போல் சிறு பொறி பெரும் தீயாவது போல் அகண்ட உள்ளத்திலே சிறியதாக உருவான இத்திருப் பணி பெரியதாக வளர்ந்தும் வளர்ந்துக்கொண்டும் இருக்கிறது. இதிலிருந்து தூய உள்ளத்தால் தொட்டது துலங்கும் என்னும் உண்மை நமக்கு கிடைத்துள்ளது.

சாதாரணமாக கல்தொழில் செய்து வந்த சில தச்சர்களைக் கொண்டு வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் சொற்பொருளுக்கேற்ப அவர்களுக்குப் பயிற்சியும் ஊக்கமும் தந்து ஜோதித்தம்பம் அமைப்பதற்கான உறுப்புகளை உருவாக்கினார். ஜோதித் தம்பத்தின் உச்சியில் வட்ட வடிவிலும்

மையத்தில் மேலும் கீழும் விளக்குகள் அமைக்க உலோக வழவமைப்பினை ஐயாவுடன் தொடர்புடைய எல்லப்ப ஆச்சாரி (கருமார்)யை காரியப்படுத்தி உருவாக்கினார். இவையாவும் வேலூரில் உருவாக்கப்பட்டு சித்திவளாகம் கொண்டு வந்து ஜோதித் தம்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய மின் இணைப்பு ஐயா விளக்கியவாறு வேலூர் ஆனந்தா எலக்ட்ரிக்ஸ் உரிமையாளர் அமைத்துக் கொடுத்தார். 1983ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஜோதித் தம்ப திறப்புவிழா நடைபற்றது.

பின்னர் கொத்தனார் வேலை செய்துவந்த கிருஷ்ண மூர்த்தி என்பவர் வேலூர் ஆரணி நெடுஞ்சாலையில் சங்கரன் பாளையம் பகுதியில் ஐயாவுக்குச் சொந்தமான இடத்தில் தொழிற்கூடம் அமைக்க வேலைக்குச் சேர்ந்தார். அவர் ஐயா விளக்குகின்றவாறும் விரும்புகின்றவாறும் புரிந்து பணி செய்தார். அதனால் அவரை சித்தி வளாகத் திருப்பணிக்கு பயன் படுத்திக்கொள்ள எண்ணி தம்மிடமே பணிக்கு வைத்துக் கொண்டு கருங்கல் தொழில் தெரியாத அவருக்குப் பயிற்சி யளித்தும் விளக்கியும் சிறந்தவோர் கல்தொழில் வல்லுனராக உருவாக்கினார். அவரோடு இன்னும் சில கல்தொழில் தச்சர் களைத் தேர்ந்து தமிழ்மணி மண்டபம் அமைக்க உறுப்புகள் உருவாக்கப்பட்டன. அத்துடன் அருட்பா மண்டபம் அமைப் பதற்கான உறுப்புகளும் பெரும் பகுதியும் உருவாக்கப் பட்டன. இவைகள் வேலூரிலிருந்து சித்தி வளாகம் கொண்டு வரப்பட்டு அருட்பா மண்டபத்துக்கு அடித்தளம் (பேஸ் மட்டம்) அமைக்கப்பட்டு அதன் மேற்கில் தமிழ்மணி மண்டமும் உருவாக்கப்பட்டது. அருட்பா மண்டபத்துக்கு கிழக்கில் சன்மார்க்க அன்பர்கள் தங்கவும் திருப்பணிகள் செய்யவும் வசதியாக ஐந்து அறைகளும் சுற்றுச்சுவரும் கட்டப்பட்டன. இவற்றிற்கு வேண்டிய கருங்கற்கள் வேலூரில் உருவாக்கப்பட்டு கொண்டு வரப்பட்டதே. ஐயாவின் அருளுரைகள் பொறிக்கப்பட்டக் கற்பலகைகள் அனைத்து வடிவமைப்புகளிலும் உரிய இடங்களில் பதிக்கப்பட்டுள்ளன. சித்திவளாகம் வரும் அன்பர்கள் அவற்றைக் கண்டின்புறலாம்.

மேற்படி வடிவமைப்புகள் ஜோதித்தம்பம், தமிழ் மணி மண்டபம், அருட்பா மண்டபம் மற்றும் அறைகள் அமைக்க வரைப்படம் என்று ஏதும் தயார் செய்யப்படவில்லை. ஐயா அவர்கள் உள்ளத்தே வரையப்பட்டு உருவாக்கப்பட்டவை களே என்பது அவர் வாழ்வியலில் போற்றிப் புகழத்தக்கதோர் அம்சமாகும். சகலகலா வல்லவர் என்னும் சொல் வழக்கு உலகில் உண்டு, அதற்குச் சான்றாக ஐயாவை குறிப்பின் அது புகழ்ச்சியாகா! அவர் வாழ்வியலையும் திருப்பணியினையும் காண்போர் உண்மை, உண்மையென இறும்பூதெய்துவர்.

ஜோதித்தம்பம் விளக்கம்

ஜோதித்தம்பம் வடிவமைப்புக் குறித்து ஐயா அவ்வப் போது குறிப்பாலுணர்த்திய விளக்கங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. வள்ளல் பெருமான் வையகத்தீர்! வானகத்தீர்! மற்ற கத்தீர் நுமது வாழ்க்கையெலாம் வாழ்க்கை என மதித்து மயங்காதீர்' என்னும் பாடலால் மரண வாதனையைத் தவிர்க்க வளர் ஞான சித்தி புரம் வருக வென்று அறைகூவி அழைத்தார் அன்றோ! இவ்வறை கூவலை சித்தி வளாகம் ஜோதி வெளியில் அமைந்துள்ள ஜோதி தம்பம் வெளிப்பாடாக காட்டி நிற்கிறது. தம்பத்தின் உச்சியின் மையத்தில் கீழ் நோக்கி உள்ள விளக்கு இவ்வையகத்தாரையும் மையத்தில் மேல் நோக்கியுள்ள விளக்கு வானகத்தாரையும் வட்ட வடிவில் சுற்றிலும் உள்ள எண் விளக்குகள் மற்றகத்தாரையும் மரணமிலாப் பேரின்ப பெருவாழ்வு பெற ஒளிகாட்டி, வழிகாட்டி அழைக்கின்றன.

2. அம்மட்டோ வள்ளல் பெருமான் தமது உரையில் 'பிண்டத்திலுள்ளதை அண்டத்தில் காட்டினர், உண்மையை மறைத்து போட்டனர், ஆதியில் ஓர் வல்லவன் பூட்டிய பூட்டு....' எனக் குறித்துள்ளார் அல்லவா! அப்பூட்டினை திறந்து உண்மையை வெளிப்படுத்தும் பொருட்டே ஆண்டவர் அண்டத்தில் நான் கிடத்தும் பிண்டத்தில் நான் கிடத்துமாக எட்டிடத்தும் நிறைந்து விளங்குகின்றார், என்னுமோர் அற்புத பேருண்மை யையும் எல்லா உலகும் அறிய அறிவித்துள்ளார்.

அந்த எட்டிடத்தையும் ஜோதி தம்பத்தின் உச்சியில் வட்ட வடிவில் அமைந்துள்ள எண் விளக்குகளும் குறித்து காட்டுகின்றன. மேல் நோக்கி உள்ள விளக்கு அநாதி அநக அகர திருவண்ண அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதியை யும் கீழ் நோக்கி யுள்ள விளக்கு தகரத் தமிழாம் அநாதி அநக அகர உகர சமூக வண்ணத் தனிப்பெருங்கருணை அருட் பெருஞ்ஜோதியையும், காட்டாமல் காட்டி நிற்கின்றன. யோக மாந்தர்களும் மெய்ஞானியர்களுமே சமூகவண்ணத் தகரத் தமிழறிந்து அதுகாட்டும் வழி நடந்து தனிப்பெருங் கருணைப் பெற்று அருட்பெருஞ்ஜோதியாக வல்லார் என்பதை, வள்ளல் பெருமான் நான் சொல்வ தெல்லாம் இப்போக மாந்தர்களுக்கல்ல யோகமாந்தர்களுக்கே என்றும், நான் சொல்வதைக் கேட்க வல்லவர்கள் வடக்கில் வெகு தூரத்தில் உள்ளனர் என்றும் கூறியுள்ள அருளுரையால் தெளியப் படுகிறது.

3. ஜோதித் தம்பத்தின் அடியில் அமைந்துள்ள சிறு மண்ட பத்தில் கீழ் நோக்கியுள்ள விளக்கு மகர உகரமாம் போக மாந்தரை குறித்து நிற்கிறது. திருவருளின் ஏக தேச சிறு ஒளியால் போக மாந்தர்கள் தங்களை மறைத்திருக்கும் அசுத்தமாயாக் கருந்திரையை விலக்கி கடக்க வழிகாட்டி நிற்கிறது. அச்சிறு மண்டபத்தில் மேல் நோக்கி உள்ள விளக்கு தனிப்பெருங்கருணையை நோக்கி நிற்கும் வகர உகரமாம் யோகமாந்தரை குறிக்கின்றது. இன்னுமோர் உயர்ந்த உண்மை யினையும் இது காட்டி நிற்கிறது. அந்தத்தைப் பூர்வமாக்கி அந்தாந் தத்தை சமரசமாக்கி அதை மீதானமாகக் கொண்டு விளங்குவது சுத்த சன்மார்க்கம் எனக் காட்டி, வள்ளலார் நானோர் சைவனுமல்ல என்றமையால், அந்தமாம் சைவ சித்தாந்த விளக்கமாகிய அகர உகரமாம் சிவலிங்க வடிவினையும் இவ்விளக்கு குறித்து நிற்கிறது. இதனால் அந்தத்தினராகிய யோகமாந்தர்களும் அந்தாந்தத்தினர் களாகிய மெய்ஞானியர்களுமே சுத்த சன்மார்க்கத்திற்கு அருகர் என்ற மறை பொருளுண்மையையும் இது காட்டாமல் காட்டுகிறது.

4. எட்டு மிரண்டும் என்னும் மறைமொழி தமிழகத்தில் எல்லா ஆன்மீகப் பெரியோர்களாலும் கையாளப்பட்டுள்ளது. அவ்வொரு மொழியே அவரவர்கள் பெற்ற நிலைகளுக்கேற்ப பல்பொருள் வேறு பாட்டினை தன்னுள் அடக்கி நிற்கிறது என்பதை ஐயா அவர்களின் அருளுரையினின்றும் அறிந்து கொள்ளலாம். 'நோவாத நோன்பு' என்னும் பாடல் வழி வள்ளல் பெருமான் இது காறும் எவ்வுலகினும் யாரும் பெறாதப் பேற்றினைத் தான் பெற்றதனை எடுத்துக் காட்டியுள்ளார். அப்பேற்றினையும் அவ்வெட்டும் இரண்டும் என்னும் மறைமொழி சுட்டுவனவாக உள்ளது என்பதை எட்டிரண்டறிவித் தெனைத் தனி ஏற்றி....என்னும் அருட் பாவால் அறிய வருகிறது. இவ்வுயரிய தனி நிலையினையும் ஜோதி தம்பத்தின் உச்சியில் உள்ள எண் விளக்குகளும் மேல் கீழ் நோக்கியுள்ள இரு விளக்குகளும் விளக்கி ஒளி காட்டி நிற்கின்றன.

5. வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தனக்கு அளித்த பேறுகளையெல்லாம் பலவாறாக திருவருட் பாவிலே பக்குவமுடையோரும் பெற்று உய்யும் பொருட்டு திருவாய் மலர்ந்துள்ளார். 'நவநிலை தந்த குருவே' என்றும் அப்பேறுகளில் ஒன்றை குறித்துள்ளார். இப்பேற்றையும் ஜோதி தம்பம் தன்னிடத்தே காட்டி நிற்கிறது. வட்ட வடிவில் அமைந்துள்ள எண் விளக்குகளும் மையத்தில் கீழ் நோக்கியுள்ள விளக்கும் நவநிலையையும் நவநிலை தந்த குருவாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை, மையத்தில் மேல் நோக்கி யுள்ள விளக்கும் குறிப்பனவாக உள்ளன. மாய போகத் தினருக்கு இது வெறும் விளக்குத் தம்பமாகத்தான் தோற்றும். இவ்விதம் ஜோதித் தம்பமானது கண்ணுறுவோர் அவரவர் பெற்றுள்ள பக்குவ நிலைக்கேற்ப அறிந்து உணர்ந்து தெளிந்து இன்புற்று உய்வு பெற விளங்கியும் விளக்கியும் நிற்கிறது என வியந்தோதுவது மிகையாகா.

திருவருட்பா மண்டபம்

வள்ளல் பெருமான் ஸ்ரீ முக ஆண்டு தைத்திங்கள் 19ம் நாள் வெள்ளிக்கிழமை (1874ம் ஆண்டு சனவரி திங்கள் 30-ம் நாள்)

புனர்பூசம் முடிவுற்று பூசம் தொடங்கிய வேளை இரவு 12 மணிக்கு அருட்பெருஞ்ஜோதியில் ஒருமையுற்றார் என்பதை 'அருட்பெருஞ் ஜோதி எம்மை அவாவுகின்றது. யாம் அதன் வசமானோம்' என்னும் அருள் வாக்கானும் அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு என்னும் அருட்பாவானும் தெளிந்துணரப்படுகிறது.

இது காறும் எவ்வுலகும் எங்ஙனும் கண்டறியாத கேட்டறியாத இவ்வற்புத பேற்றினை எல்லா உலக மாந்தரும் வானக மாந்தரும் மற்றக மாந்தரும் கண்டு கேட்டு இன்புறும் பொருட்டும் அப்பேற்றினை யாம் என்று பெறுவோம் என்னும் ஏக்கத்தைத் தம்மகத்தே பெற்றுய்யும் பொருட்டும் வேலூர் ஐயாவின் திருவுளத்தேக் கருவான எண்ணம் தமிழ் மணி மண்டபமாகவும் பூத்து மலர்ந்து காட்சியளித்துக் கொண்டிருக் கிறது ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இம்மணிமண்டபம் ஜோதி வெளியின் முன்புற படிகளைக் கடந்து அடுத்த மேற்கு திக்கு அமைத்திட பணி தொடங்கப் பட்ட போது ஊரார் சிலர் ஏற்படுத்திய தடைகளினால் ஜோதி தம்பத்திற்கு சற்று தென் கிழக்கிலும், அமைக்கப்பட்டு வரும் அருட்பா மண்டபத்துக்கு முன்பும் அமைக்கப்பட்டுள்ளது. இம்மணி மண்டபம் முதலில் அமைக்கக் கருதிய விடத்திலே அமைந்திருந்தால் முழுவதும் கருங்கற்களாலும் வேறு வடிவமைப்போடும் இன்னும் சிறப்போடும் அமைந் திருக்குமெனப் பின்னர் ஐயா விளக்கினார்கள்.

இப்பணி தற்போதத்தாலே செய்யும் பணியன்று தெய்வ சம்மதத்தாலே நடைபெறும் பணியாதலின், எப்போது எப்படி எவ்விதம் திருவருள் கூட்டுவிக்கின்றதோ அப்போது அப்படி அவ்விதம் செய்யப்பட்டு வருகிறது. இது தற்போதப் பணியன்று தெய்வப் பணியெனக் கூறுதல் வெறும் புகழ்ச்சி யன்று, உண்மை. இப்பணியிடத்தே, இப்பணிக்குரியவர் ஊரும் பேரும் காணாகாட்சி ஒன்றே இதற்கோர் எடுத்துக் காட்டாம். விழாக்குறிப்புகள் அடங்கிய கல்வெட்டினை கோயிலுள் அமைக்க தொடக்கத்தில் கோயிலின் அறங்காவலர்

குழுவால் அனுமதி மறுக்கப்பட்டபோது அரசியலார் உதவியை நாட சிலர் விருப்பம் தெரிவித்தனர். ஐயா அவர்கள் அரசியலார் உதவியோடு தான் இது நடைபெற வேண்டுமாயின் தெய்வப்பணி அன்று. தெய்வ சம்மதம் இருந்தால் நடை பெறட்டும் எனக்கூறி மறுத்தமை இவ்வரலாற்றில் முன்னம் குறிக்கப்பட்டுள்ளது. இது தெய்வப்பணி என்பதை ஐயாவின் கூற்று கூறாமல் கூறி நின்றதை நம்மனோர் அறிந்துகொள்ள முடியாதது சிறுமையே.

இப்பணி தெய்வப் பணியாக இருந்தும் அறங்காவலர் குழு கோயிலுள் கோரிய இடத்தில் பணி செய்ய அனுமதி மறுத்தபோது கெட்டது போல நல்லது வரும், நல்லது போல கெட்டது வரும், எல்லாம் நன்மைக்கே என்று ஐயா கூறி அமைந்ததை இங்கு எண்ணிப் பார்க்கும் போது இம்மறை மொழி உண்மைகள் விளக்கமாகின்றன. அனுமதி அளித்து கோயிலுள் பணி தொடங்கியிருந்தாலும், இப்போது வெளிப் புறத்தில் விரிந்து வளர்ந்து ஓங்கிப் பொலிவுற்று விளங்குவது போல அமைத்திருக்க இயலாது. ஏனெனின் இடை இடையேத் தடையும் குறுக்கீடுகளும் புகுந்து குறுகிய அளவிலேயே அமைத்திட நேர்ந்திருக்கும். அதனால் அனுமதி மறுக்கப் பட்டதே நன்மை ஆயிற்று, ஐயா கூறியது போல. இதனால் நமது வாழ்வில் ஏற்படும் தடை, தோல்வி, துன்பம் முதலானவையும் நமது நன்மை, மேம்பாடுக் கருதியே ஆண்டவர் கருணையால் விளைகின்றன என்னும் படைப்பின் இச்செயல் பாட்டினையும் நாம் அறிந்து உணர்ந்து அமைதி பெற பேருதவியாகவும் இந்நிகழ்வு அமைந்துள்ளது.

ஜோதித் தம்பமானது அனைவரையும் அடையாளம் காட்ட வல்லது. தம்மை பெரியார் என்றும் சன்மார்க்கி என்றும் வெளிப்படுத்திக்கொண்டவர்களையும், கொள்பவர்களையும் இன்னார் இன்னார் எனப்படம் பிடித்துக்காட்டியுள்ளது. இனியும் காட்டும். இங்கே வேடங்கள் விலைபோகா. உண்மை ஒன்றே நிலைக்கும். இயற்கை உண்மை கடவுள் இலட்சியம் கொண்ட பெரியோர்கள் இதனை கண்டுணரலாம். ஒளி ஒலியாகி ஒலி உருவாகாவிடின் உயிர்கள் உய்ய வழிகாட்டும்

மறைகள் தோன்றா; மொழி தோன்றா என்னும் விளக்கம் ஐயாவின் அருளுரையிலே காணக்கிடக்கிறது.

அகர முதல எழுத்தெல்லாம் என்னும் தேவர் குறளின் முதற்பாவின் முதலடியும் இதற்கு சான்றாம். இவ்விளக்கமே சித்தி வளாகம் ஜோதி வெளியில் ஜோதி (ஒளி) தம்பமாகவும் (ஒலி) தமிழ் மணி மண்டபமாகவும் விளங்குகின்றன. அம்மண்டபத்தே ஒலிக்கும் தமிழ் மணியும், உருவாகக் காட்சிதரும் ஐயாவின் மணி வாசகங்களும் இவ்விளக்க உண்மையினைப் பறைசாற்றிக்கொண்டு இருக்கின்றன. இம்மணி வாசகங்கள் வள்ளல் பெருமான் பெற்ற அற்புதப் பேற்றினையும் அவர் திருவாய் வழி திருவருளால் மொழியப் பட்ட ஊன்றிய தமிழ் மாமறையாம் திருவருட்பாவின் தன்னிகரற்றத் தனிச்சிறப்பினையும் எடுத்து இயம்புவனவாக உள்ளன. மாயத்திரைகள் ஏழினையும் திறந்து திருவருளைக் காட்டினார் திருவருள் பிரகாச வள்ளலார். அத்தகு அருட் பிரகாச வள்ளலையும் அருளால் வெளிப்பட்ட அருட் பாவினையும் மறைப்புத்திரைகளால் மறைத்து வருகின்றனர் மாய போக மாந்தர்கள். இம்மாயபோக மாந்தர்களின் மறைப்புத் திரைகளைக் கிழித்து காட்டுவதே ஐயாவின் மணிவாசகங்கள். இனி வரப் போவது சுத்த சன்மார்க்க காலம் என வள்ளல் பெருமான் கூறியுள்ளார். அந்த சுத்த சன்மார்க்க காலத்தில் வரவிருக்கும் அந்தத்தினர்களுக்கு (அந்தணர்) வழிகாட்டி அழைக்கும் பொருட்டே ‘யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே‘ என்னும் சொற்களுக்கு ஏற்ப ஐயா அவர்களும் திருவருள் விளக்க இம்மணிவாசகங்களை வெளிப் படுத்தியுள்ளார். சுத்த சன்மார்க்க இலட்சியம் உடையவர் களும் அக்காலத்தில் பிறந்து அவ்வழி நடந்து மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வை பெறும் பொருட்டே அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் சமூக வண்ணத் தனிப்பெருங்கருணை எங்கும் பொழிந்து வருகிறது.

தமிழகத்தே தோன்றிய பெரியார்கள் அத்தனைபேரும் தாம் பெற்ற இன்பத்தினை இவ்வையகமும் பெறவேண்டும் என்றே விழைந்தனர். வேண்டி அழைத்தனர். அவ்வாழையடி

வாழையென வந்த நமது ஐயா அவர்களும் சித்தி வளாகம் வாருமின்! வந்து காணுமின்! வாழ்வு பெறுமின்! என அறைகூவி அழைக்கிறார். ஆதலின் இந்த அரிய அற்புத வாய்ப்பினை நழுவவிடாதீர் பெரியீர். கண்ணுள்ளபோதே காணுங்கள். செவியுள்ள போதே கேளுங்கள், காலுள்ள போதே நடவுங்கள், கை உள்ளபோதே உதவுங்கள். உடலுள்ள போதே மரணமிலாப் பேரின்ப பெருவாழ்வை பெறுங்கள். மீண்டும் இத்தகையதோர் வாய்ப்பு கிடைக்கப் பெறுமோ!

வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதியில் ஒருமையுற்ற தைப்பூச நன்னாளிரவு புனர்பூச முடிவும் பூச தொடக்கமும் ஆனதால் ஒவ்வொரு தைப்பூச நாள் முன்னிரவும் ஒவ்வொரு திங்களும் பூச நாள் இரவும் பெருமான் பேறு பெற்ற வேளை யாகிய நடுநிசி 12 மணிக்கு தமிழ் மணி 5 மணித்துளிகள் (5 நிமிடம்) ஒளிக்கப்படுகிறது. எல்லா உலகும் இப்புனித வேளையை செவி மடுத்து மரணத்துயிலினின்றும் எழும் பொருட்டே இவ்வொலி எழுப்பப்படுகிறது. இம்மணி ஓசை ஒலிக்கப்படுவதன் முன்னம் அன்பர்களால் ஜோதி வெளியில் அருட்பாவும் ஐயாவின் மணி வாசகங்களும் ஓதி வழிபாடு செய்யப்படுகிறது. தமிழ் மணி ஒலித்தப்பின்னர் வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்டத் திருவறை முன்னர் கற்பூர ஜோதி காட்டி 'ஜோதி ஜோதி ஜோதி சுயம்...' என்னும் பாடல் ஓதி வழிபாடு செய்யப்படுகிறது. பின்னர் ஜோதி வெளியில் குழுமியிருக்கும் அன்பர்களுக்கு வழிபாட்டில் செவிக்குத் தந்த இனிய சொல்லுணவோடு வயிற்றுக்கும் சிறிது இனிமை தரும் சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் வழங்கப் படுகிறது. இவ்வழிபாடு எக்காலமும் சிறிதும் தடைபடாது நடைபெற வேண்டுமென்பதும் சிறப்புற்று வோங்க வேண்டுமென்பதும் ஐயாவின் வானுள்ள வேட்கை. இம்மட்டோடன்றி திங்கள் தோறும் பூசநாள் மட்டும் நடைபெறும் இவ்வழிபாடு நாள் தோறும் இரவு பன்னிரண்டு மணிக்கு நடைபெற்று தமிழ் மணி ஒலிக்கப்படவேண்டும் என்பதுமாம்.

இவ்வுலகமும் எவ்வுலகமும் மரணத்துயிலினின்றும் எழ வேண்டும் என்பது ஐயாவின் ஏக்கமுமாகும். இவ்வேக்கந்தீர, உலகீர் விரைந்திடுவீர் சித்தி வளாகம் நோக்கி, வழுத்திடுவோம் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பெற்றிடு வோம் மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வை. இனி வரப்போகும் காலத்தில் எல்லா உலகமும் சுத்த சன்மார்க்க மொன்றேத் தழைக்கும், மற்றைய மதங்களும் மார்க்கங்களும் அவைகளின் கடவுளர்களும் அவர்தம் தலைவர்களும் அத் தலைவர் தம் தலைவர்களும் ஒருவரும் இரார் என்று வள்ளல் பெருமான் சத்தியவுரை பகர்ந்துள்ளதனால் அக்காலத்தை வேண்டி நிற்போம். விரைந்து வள்ளல் காட்டியுள்ள வழி நடப்போம்.

ஐயா அவர்கள் தமது அருளுரையில் இனி வரப்போகும் சுத்த சன்மார்க்க காலத்தில் எல்லா உலகுக்கும் கடவுள் ஒருவரே, அவரையடையும் நெறியும் ஒன்றே, அந்நெறியினைப் போதிக்கவல்ல மொழியும் ஒன்றே என்பதை ஐயத்திற் கிடமின்றி உறுதிபட வெளிப்படுத்தியுள்ளார். சாகாதவரே சன்மார்க்கி என்னும் அருளுரையால் சாகாப் பேற்றினை அளிக்கவல்ல நெறி சுத்த சன்மார்க்கம் ஒன்றே என்பதும் அச்சாகாப் பேற்றினைப் போதிக்கவல்ல மொழி சாகா மொழியாம் தமிழ் ஒன்றே என்பதும் அச்சாகாப் பேற்றினை அருளி வாழ்வளிக்கவல்ல கடவுள் இயற்கையுண்மை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஒருவரே என்பதும் வெள்ளிடைமலையென்பது சத்தியமே. எல்லா வுலகுக்கும் மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வை அளிக்கும் கருவிடம் சித்திவளாகம் என்னும் திருத்தலமே. அதை உறுதிப் படக்காட்டும் சான்றே ஜோதித்தம்பமும், தமிழ் மணி மண்டபமும். வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொள்ளும் முன் நானிருக்கும் இடத்தில் இறைவன் வந்து அமர்வார். ‘அளவிடப் பட முடியாத நெடுங்காலம் எல்லாம் வல்ல சித்தராய் இங்கு வீற்றிருந்து சித்தாடல் புரிவார்’ எனக்கூறி நமது ஞானக் கண்ணினைத் திறந்து கொள்ள வழி காட்டி யுள்ளார். அதைக் குறிக்கும் முகத்தானே தம்மிடமிருந்த சத்திய

ஞான தீபத்தினை முன்வைத்து அவ்வொளியையே கடவுளாகப் பாவித்து வழிபட்டு வருமாறும் அறிவித்துள்ளார். அவர் பெற்ற மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வை நாமும் பெற்று வாழ வழிகாட்டி நம்முள்ளிருந்து உதவியும் வருகிறார்.

ஆதலின் உலகீர்! சித்திவளாகம் நோக்கி விரைவீர்! சுத்த சன்மார்க்கம் சார்வீர்! அகர மொழியாம் தமிழை நாடுவீர்! இயற்கையுண்மை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் போற்றுவீர்! மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வை பெற முயன்றிடுவோமே.

நிறைவு

நடைபெற்றுவந்த சித்திவளாகத் திருப்பணிக்குச் சிறிதும் தடைநேராவண்ணம் தன்னால் உருவாக்கப்பட்ட கிருஷ்ண மூர்த்தியையும் உடன் பணி செய்து வந்தப் பணியாளர் களையும் ஊக்குவித்தும் நெறிப்படுத்தியும் விளக்கந்தந்தும் அருட்பா மண்டபம் அமைவுக்கான உறுப்புகளையும் மற்ற உபகரணங் களையும் பெரும்பகுதி உருவாக்கியும் உருவாக்கிக் கொண்டுமிருந்த நிலையில் ஐயா அவர்களின் ஆன்மா விக்கிரம ஆண்டு மார்கழி திங்கள் 27ஆம் நாள் (11-1-2001) வியாழன் இரவு 9.25 மணி அளவில் விதேக நிலை அடைந்தது.

தோற்றம்; புதன் திசை சூரிய புத்தி ராகு அந்தரம் (27-10-1919) விநேக நில அடைந்தது; குருதிசை சனிபுத்தி புதன் அந்தரம் (11-01-2001) 81 ஆண்டு 2 திங்கள் 15 நாட்கள் மாயா பூதவுடலில் வாழ்ந்துள்ளார்.

இப்பெரியார் வள்ளல் பெருமானை மிக மதித்துப் போற்றி அவர் காட்டிய நெறியை வாழ்வியலாகக் கொண்டிருந்தார் என்பதற்கு மேலுமோர் எடுத்துக்காட்டு. திருவருட்பாவில் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளையெனக் கையொப்பம் காணப்படுகிறது. இவற்றில் ‘சிதம்பரம்’ என்பதற்கும் ‘பிள்ளை‘ என்பதற்கும் அவர் தந்த விளக்கம் வருமாறு:

வள்ளலார் தோன்றியது சிதம்பரம் என்றும் தில்லை யென்றும் வழங்கப்படும் தலமல்ல. அத்தலத்திற்கு வடக்கே சுமார் 10 கல் தொலைவிலிருக்கும் மருதூர் என்னும் சிற்றூர்.

அவ்வாறிருக்க பெயருக்கு முன் சிதம்பரம் என்று குறித்ததின் காரணம், முற்பிறவியிலேயே பற்றற்று மாயையைக்கடந்து சித்து +அம்பரம் என்னும் சிதாகாசத்தில் அவரான்மா இருந்து வந்ததை குறிப்பதாம். உலகியலிலும் சிறப்புடையோர் தம் பெயருக்குமுன் தான் பிறந்த அல்லது இருந்த ஊரைக் குறிப்பது மரபு. அவ்வகையில் அவரிருந்த பூர்வ இடத்தைக் குறிப்பதே சிதம்பரம் என்றும், பிள்ளை என்னும் சொல், அருட்பாவில் தன்னை திருச்சிற்றம்பலத் தந்தையின் செல்வ மகன் என்றும் தலைமகன் என்றும் அத்திருச்சிற்றம்பலத் தந்தையே தன்னை மகன் என்று அழைத்ததையும் பல இடங்களில் குறித்து பாடியுள்ளார். அதனால் இராமலிங்கம் என்னும் இயற்பெயர் கொண்ட தான் அச்சிற்றம்பலத்தந்தை யின் பிள்ளை என்பதை உரிமையோடு குறித்ததாம்.

உலகியலில் சிலர், அவர் கருணீகர் மரபில் தோன்றி யதால் அம்மரபுக்குறிய சாதிப்பெயர் பிள்ளையென்பதால் அதைக் குறிப்பதாகக் கருதுவது சிறுமையாம்.

மேலும் இதுகாறும் உலகில் தோன்றியப் பல பெரியார் களோடு வள்ளலாரையும் ஒப்பிட்டுப்பேசுவதை சிலர் பெருமையாகக் கருதுகின்றனர். அப்பெரியார்களில், அவரவர் வாழ்வியலையும் விளக்கங்களையும் முடிபினையும் நோக்கும் போது வள்ளல்பெருமான் வாழ்வியல், விளக்கம், முடிபுக்கு ஒப்பு நோக்கக் கூடியதாக இல்லையென்றே உண்மையறிந்தப் பெரியோர்கள் உணர்வர். ‘நோவாது நோன்பு என்போல் நோற்றவரும்.....‘ என்று வள்ளலார் பாடிய பாட்டே இதற்குச் சான்றாகவும் இருக்கிறது. உண்மை இவ்வாறாக மனம்போனப் போக்கிலே சிலர் பேசிவருவதையும் அவரவர் விருப்பம்போல் அவர் உருவத்தை வரைந்தும் வருகின்ற அவல நிலையைக் கண்டும் உளம் புழுங்குவார். இக்கொடுமையெலாம் மண் மூடிப் போகுங்காலம் என்று வருமோ என்றும் ஏங்குவார்.

எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க் கத்தகை அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க் கப்படி அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி என்பதும் இவ்வுலகமும் மற்றெல்லாவுலகமும் இனி சமரச் சுத்த சிவ

சன்மார்க்கமே தழைக்கும் என்பதும் திருவருள் வாக்கு. அவ்வாக்கின்படி சுத்த சன்மார்க்கம் தழைக்குங்காலம் அவ்வுத்தமப் பெரியாரின் ஆன்மா திருவருள் சித்தியோடுத் தோன்றும். அப்போது சன்மார்க்கத் திருக் கோயில்களான சத்திய தருமச் சாலையும், சத்திய ஞான சபையும், சத்திய சித்திவளாகமும் வள்ளலார் அருளாணைப்படி செயல் வடிவம் பெற்று ஓங்கி ஒளிரும். அக்காலம் விரைந்துவர நாமும் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை வேண்டி வணங்குவோம்.

இப்பெரியார் தாம் தொழில் செய்து வாழ்ந்தும் பிறருக்கு உதவியும் சித்திவளாகத் திருப்பணி செய்தும் எஞ்சியுள்ள தாம் வாழ்ந்து தொழில் செய்து வந்த இடம், பொருள் அனைத்தையும் சன்மார்க்கப் பணிக்கே உரியதாக்கியுள்ளார்.

அருட்பா மண்டபம் அமைவுக்கு வேண்டிய உறுப்புகள் சாதனங்கள் பெரும்பகுதியும் உருவாக்கப்பட்டும் நிறைவுறாது இருந்தமையால் அவருளத்தே உருவாகியிருந்தபடி அமைத்து நிறைவு செய்யும் பொருட்டு அவரோடு தொடர்பு கொண் டிருந்த அன்பர்கள் சிலர் அடங்கிய அருட்திரு யோகானந்த சாமிகள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பணி அறக் கட்டளை, வேலூர், பதிவு எண் 337/2001 நாள் 25-5-2001 உருவாக்கப்பட்டது. அவ்வறக் கட்டளை முயற்சியால் அருட்பா மண்டபம் அமைக்கும் பணி தொடரப்பட்டு திருவருளால் நன்கு நடந்து நிறைவேறியது.

அவ்வாறே அருட்பா மண்டபத்தையொட்டி சுவாமிகளாலேயே அடிக்கல் நாட்டப்பட்ட அறக்கூழ் சாலை கட்டுமானப் பணியும் நன்கு நிறைவேறி, தற்போது தினசரி காலை பசித்தோர்க்கு கூழ் வழங்கப்பட்டு வருகிறது.

முற்றும்

அருட்திரு யோகானந்த சாமிகள் தம் வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளை அவரே விவரித்தவண்ணம்...

1. எனது லட்சியம்

1937 ஜூன் - ஜூலை. வயது 17, சுக்கிர திசை, சுயபுத்தி, இடம் மவுண்ட் ரோடு, பாரத் பில்டிங் எதிர், தர்க்காவின் தென்புறம், மொட்டை மாடி. அண்மையில் வெலிங்டன் டாக்கீஸ். இரவு சுமார் 9 மணி. அமைதியான சூழ்நிலை. தனிமை. ஆகாயத்தையும் பூமியையும் நோக்கிய நிலை. ஆகாயத்தில் தோன்றும், தோன்றிய சூரிய சந்திர நட்சத்திரம். பூமியில் தோன்றும் உயிரினங்கள். என்னே அதிசயம்! இவைகளெல்லாம் என்ன? நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்கிறேன்?. இது என்ன அற்புதமான காட்சி. ஒன்றும் புரியவில்லையே. தாய், தந்தை, பிள்ளை, உறவு, நட்பு, படிப்பு, தொழில், மனைவி, பிள்ளை, முதுமை, சாவு. மீண்டும் அதுவே. இவ்வழியில் செல்ல வேண்டுமா? சிந்தித்து செயல்படுவோம். இதுகாறும் எத்தனையோ பெரியார்கள், மகான்கள், தெய்வப்பெரியோர்கள் வந்து போயினர். அவர்கள் கண்டதும் பெற்றதும் முடிவாயிருக்கு மாயின் அதனை நான் பெறுதல் வேண்டும். அவர்கள் பெற்றது போக பெறாதது ஒன்று எஞ்சி இருக்குமாயின் அதனை அவர்கள் அறியார்கள்; நானும் அறியேன்; நீ அறிவாய். அதனை நான் பெறுதல் வேண்டும். இதுவே எனது இலட்சியம். இதன் தொடர்பே இன்றுவரை.

2. எனது லட்சியம் தொடர்ச்சி...

மவுன்ட் ரோடு பாரத் பில்டிங் எதிரில், மக்கான் மசூதி தென்

பகுதியில் உள்ள மொட்டை மாடியில் சில நாட்கள் படுத்து உறங்கினேன். அருகில் மவுண்ட் ரோடு எலக்ட்டிரிக் ஜெனரேட்டர் ஓடிக் கொண்டிருக்கும். அது காலம் வயது 17. 1937 ஜுன்மாதம். சூரியன், சந்திரன்,நட்சத்திரங்கள் வானில் கண்டு அதிசயிப்பேன். பூமியில் உயிர்கள் வாழ்வதைக் கண்டு ஈதென்னக் காட்சியென்று பூரிப்பேன். நான் எப்படித் தோன்றினேன் என்று சிந்திப்பேன். தந்தை தாய் என்னைப் பெற்று வளர்த்தார்களென்று அறிவேன். நீயும் அவ்வழியில் வாழ்வாயா என்று கேட்பேன்? அவ்வழி அவசியம் என்றால் வாழ்வேன், இல்லையெனில் வாழ மாட்டேன் என்றேன். ஒரு நாள் இரவில் எனக்கு ஓர் கேள்வி எழுந்தது. அது என்ன வெனில், இதுகால்வரை எத்தனையோ பெரியோர்கள் வந்து போயினர். அவர்கள் பெற்றது முடிவாயின் அதை நான் பெறுதல் வேண்டும். அவர்கள் பெற்றது போக பெறாதது ஒன்று உளதாயின் அதை அவர்களும் அறியார் நானும் அறியேன்; அதை நீ அறிவாய்; அதை நான் பெறுதல் வேண்டும். அதுவே எனது இலட்சியம் என்று அறிவித்தேன். ஜெனரல் பார்ட்டர்ஸ் ரோடு எக்ஸ்பர்ட் மோட்டார் ஒர்க்கஸ் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தேன். அது சமயம் வேலூர் இம்பீரியல் பஸ் கம்பெனி பஸ் இங்கு வேலை செய்யப்பட்டது. அவர்கள் என்னை அவர்கள் கம்பெனியில் வேலை செய்ய அழைத்தார்கள். வேலூர் பிடித்தமையால் வேலை செய்ய ஒப்புகொண்டேன்.

காலை எட்டு மணி முதல் மதியம் சாப்பாட்டு நேரம் போக இரவு எட்டு மணி வரை வேலை செய்ய வேண்டும். ஞாயிறு ஓய்வு இல்லை. கடின உழைப்பால் இரவில் அயர்ந்து தூங்கி விடுவேன். சென்னையில் கேட்ட வரம் எப்படி செயல்படும்? ஒரு நாள் சிந்தனை செய்தேன். பகல் வேலை. இரவு ஓய்வு. எனவே இரவில் தேடலாம் என்று தேடினேன். 60 வருடம் கடந்து வாய்ப்புக் கிட்டியது.

3. பகலில் தொழில் இரவில் ஞானத்தேடல்

ஏறக்குறைய 18 வயதில். இடம்: வேலூர். தெய்வ கதி பெறவேண்டும் என்ற பேரவா. பகல் பூராவும் தொழில்.

எப்படி தெய்வகதி பெறுவதென்ற சிந்தனை. இரவு பூராவும் ஓய்வு. இந்த நேரத்தைத் தெய்வம் காண பயன்படுத்திக் கொள்ள லாம் என தீர்மானம். இரவில் சைக்கிளைக் கொண்டு காடுகளிலும் மலைகளிலும் தெய்வங்கண்ட பெரியார் களைத் தேடி அலைந்தேன். சைக்கிளைச் சாலை ஓரங்களில் உள்ள குடிசைகளிலும், ஆட்டுப்பட்டியிலும் விட்டுவிட்டு நடந்து காடு, மலை, குகைகளில் தேடி யோகியர், ஞானிகள், அவதூதர், உபாசகர், தபசிகள், ரிஷிகள், முனிவர்கள் இவர்களைக் கண்டு பேசியும் பழகியும் பல வருடங்கள் கடந்தன. எனது விருப்பம் கை கூட எவரும் விளக்கம் அளிக்கவில்லை. இரவு காடு, மலை. பகல் தொழில். என் வாழ்நிலை முழுதும் எவரும் அறிந்திலர். பின்னர் இரவும், பகலும் பெரும்பொழுது இவ்வழிக்காயின. இரவிலும் பகலிலும் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் களைத்தும் சோர்ந்தும் நடந்து சென்ற காலம் நினைக்க மனம் கலங்கும். இப்படியாக 15 வருடம் கடந்தன. இதில் 10 வருடம் அதிக முயற்சி. மிருகங்கள், விஷ ஜந்துக்களால் துன்பம் நேரவில்லை.

4. வெற்றுத்தாளும் வெட்டவெளியும்

ஏறக்குறைய 23 வயதளவில். ஊர் மன்னார்குடி, அக்கரைத் தெரு, தஞ்சை மாவட்டம். வாலிபர் ஒருவர். சில நாள் பழக்கம். பிரிய நேர்ந்தபோது ஒரு நோட்டுப் புத்தகத்தைக் காட்டி கையெழுத்துத் தரும்படிக் கோரினார். அதில் கல்யாண சுந்தரனார், சுத்தானந்த பாரதியார் மற்றும் பல கையெழுத்துகள் இருந்தன.

அந்த நோட்டில் கையால் எழுதாமல் வெறும் ஏடாய்க் கையெழுத்துப் போடாமல் கொடுத்தேன். கையெழுத்துப் போடவில்லையே என்று வருந்தினார். அந்த ஏட்டில் எனது கையெழுத்துள்ளது; புறக்கண்ணுக்குப் புலனாகாது; அறிவுக் கண்ணுக்குத் தெரியும் என்றேன். வேறு கையெழுத்து வாங்கும் போது அந்த ஏட்டை விட்டு அடுத்த ஏட்டில் வாங்கும்படிச் சொன்னேன். இதன் பொருள் தூய எங்கும் நிறைந்த பேர் ஊர் இல்லாத இறைவனே நானாயிருக்கின்றேன்.

5. அக்கரத்தில் வக்கரம்

ஏறக்குறைய 27 வயதளவில். வேலூர் ஆற்காடு ரோடு. ஒருவர், ''நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள்'' என்று கேட்க, ''அதைச் சொன்னால் உமக்குப் புரியாது'' என்று நான் சொல்ல, ''புரியும், சொல்லுங்கள்'' என்று பின் தொடர, மறுத்தும் கேளாதவராய்த் தொந்தரவு செய்ய, ''ஐயா, நான் அக்கரத்தில் வக்கரித்துக் கொண்டிருக்கின்றேன். அரிச்சுவடியில் 'அ' எனது படிப்பு'' என்றேன். ''புரியவில்லையே'' என்றார். ''முன்பே சொன்னேன்'' என்றேன். அவ்வளவுதான்.

பொருள் - அகரத்தை வலம் வந்து கொண்டிருக்கின்றேன்.

அரிச்சுவடி அ - இ - அடி சிவசக்தியின் அடியை எனது முடிபால் இணைகிறேன்.

6. அனுபவ அறிவும் சாத்திர அறிவும்

ஏறக்குறைய 30 வயதளவில். இடம்: மினர்வா கபே எதிரில். காலை நேரம். வேலூர் மாணிக்க முதலி எனும் வேதாந்த தர்க்க சாத்திர வல்லுநர். மாணிக்க கல்லே கல்லு மாணிக்கம் சொல்லே சொல்லு எனவும், இம்மாவட்டத்தில் தன்னுடன் வாதம் செய்ய எவரும் இலர் எனவும் இறுமாப்புடையவர். என்னை அணுகி, ''தங்களை ஒன்று கேட்க விரும்புகின்றேன். பதில் சொல்வீர் களா?'' என்றார்.

''பதில் சொல்லும் அளவில் இருந்தால் சொல்கிறேன். கேட்கலாம்'' என்றேன்.

''உமது லட்சியம் என்னவென்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்றார்.

''நானே லட்சியமாயிருக்க எனக்கொரு லட்சியமா? அப்படி ஒன்று இருக்குமாயின் அது உண்மையாமா? அப்படி இல்லாத ஒன்றைக் கேட்பது குற்றம். கேள்வியே குற்றம்'' என்றேன்.

பதில் கூறாது, அன்று முதல் பல வருடங்கள் வந்து பழகி நட்புகொண்டார். (அவருக்கு) ஏறக்குறைய 70 வயதிருக்கும்.

நியாயத்துக்குக் கட்டுப்படுவார். அந்திம காலத்தில் 6 மாதம் முன்னதாக என்னிடம், "இந்த வடஆற்காடு மாவட்டத்தில் என்னுடன் தர்க்கம் செய்ய எவரும் இல்லை. நான் 40 வருட காலமாக சகல சாத்திரங்களையும் கற்று உணர்ந்தவன் என்று இறுமாப்புற்றிருந்தேன். நீரோ சாத்திரங்களைக் கற்றறியாத சாதாரண யோகி என்று கருதி இருந்தேன். நீர் 500 வருடங்களுக்கு முன்பே சர்வ சாத்திரங்களையும் கற்றுணர்ந்து விட்டுவிட்டீர். நான் இன்றுதான் பயில ஆரம்பிக்கிறேன் என்ற உண்மையை உணரப் பெறுகின்றேன்'' என்று சொல்லிச் சென்றவர் மீண்டும் சந்திக்கவில்லை. வாழ்க்கை முடிந்தது. அவர் ஓர் வேதப்புத்தகம் என்னைப் பிரிந்தது போல் தோன்றிற்று.

7. ஒரு சித்தரின் தொடர்பு

23, 24 வயதளவில் வாணியம்பாடி அருகில் சங்கராபுரம் கிராமத்தில் வேணுகோபால் என்ற பெயரில் அய்யங்கார் இனத் துறவியர் ஒருவர் இருந்தார். அவர் பல சித்துக்களைச் செய்வார். அவருக்குப் பல சீடர்கள் உண்டு. மேட்டூர் டாம் கட்டிய ஜெர்மானியர் அவர் சீடர். சேந்த மங்கலம் அவதூத சந்நியாசி துரியானந்தா இவர் காலில் விழுந்து வணங்கக் கண்டேன். பலரும் இவரை அடுப்பர். இவரை முதன்முறை கண்டதும் பழகியவர்போல் எனக்கு நினைவு. என்னை ஒரு பாடல் பாடும்படி அடுத்து அடுத்து கேட்டார். முன்னிரவு வேலூரில் நடந்த சம்பவங்களைச் சொன்னார். பின்னர் வேண்டுகோளின் படி ஒரு பாடலைப் பாடினேன். அப்பாடல் 'முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூன்யமாய் அப்பாழுக்கப் பாலாய் இருந்தறியீர் அந்த ஊர் எம்ம ஊர் சொந்த ஊர் வந்த ஊர் சேதிகேளீர்' என்றேன். பின்னர் ஏழு பழங்களை எடுத்து நான்கு பழங்களை 'இந்தாரும் ஞான பூமி நான்கும்' என்று கொடுத்தார். மற்றொருவரிடம் அஞ்ஞான பூமி மூன்றும் என்று கொடுத்தார். மற்றும் ஒரு சந்திப்பில் "நீர் தம்பிரானாய்ப் பிறக்க வேண்டியவர். காலப்பருவம் சரியாய் இல்லாததால் அன்றோ இங்ஙனம் பிறந்து வந்தீர்'' என்றார்.

பிறிது ஒரு சமயம் தனது இரு பைகளில் கைவிட்டு ரூபாய்

நோட்டுகளை வாரி வழங்கினார். ஏற்க மறுத்துவிட்டேன். இப்படி பல சாலங்களைச் செய்வார். ''நான் தொழில் செய்கிறேன். தொழில் மூலம் பொருளை ஈட்டிக் கொள்வேன் (என்றேன்)''. பல தேவைகளை அளிக்க முன்வந்தார். இப்படியே மற்றும் ஒரு சமயம் செய்தார். ''நான்தான் வேண்டாம் என்று சொல்கிறேனே'' என்றேன். ''நான் கொடுக்கிறேன், மறுக்கிறாய்'' என்று கோபத்துடன் பார்த்தார். நானும் பார்த்தேன். நேர் சில நொடிகள். நான் நினைத்தேன், ''பெரியவர் கொடுக்கையில் அதைப் பணமாக ஏன் கருத வேண்டும். அனுக்கிரகமாக ஏன் ஏற்கலாகாது'' என்று. கல கலவென சிரித்தார். "எனக்கெல்லாம் தரித்திரம் வந்தல்லவோ உமக்கு வரப்போகிறது'' என்றார். ஓர் சந்திப்பில், ''உம் போன்றவர்களை எம்மால் திருப்திப்படுத்த முடியாது'' என்றார். நான் பேசுவதைப் பிரியமுடன் கேட்பார். அன்போடு 'சைவர்' என அழைப்பார். இவர் தமது சீடர்களை என்னிடம் அனுப்பிப் பார்க்கச் செய்வார். ஏறக்குறைய எட்டு வருட தொடர்பு. பல நிகழ்ச்சிகள் உள. இவர்தான் கடைசி சந்திப்பு. இத்துடன் சாதுக்களைக் காண்பதை விட்டேன். நான் கண்ட அனைவரும் சித்துகளையும் முக்தியையும் தவிர மேல்நிலை ஒன்றும் அறிந்திலர். நம்மிடமே நாம் இறைவனைக் காண வேண்டும் என்ற நிலை ஊன்றி உளது. பிற்காலத்தில் நான் பெற்றப் பேற்றினை உணர்ந்தேன்.

பசித்திரு - ஞானப்பசி கொண்டு காடு மலை அலைந்ததும்,

தனித்திரு - தத்துவம் கடந்து தன்னை அறிந்து தனித்ததும்,

விழித்திரு - அருளைப் பெற்று இறைநிலைப் பெற மாயா உறக்கத்தினின்று விழிப்புற்றதும் அறிந்தேன்.

8. சீவக்காட்சி அருள்காட்சி

ஹிட்லர் போர் முடிந்த சமயம். வேலை செய்ய தரமான சாமான்கள் கிடைக்கத் தடைப்பட்டன. வெளிநாட்டுச் சாமான்கள், அரிதாய்க் கிடைத்ததால் சென்னை போட் கம்பெனியில் FILTEX எனும் அமெரிக்க ஆயில் பெயின்ட் அரிதாய்க் கிடைத்ததை அறிந்த நான் அக்கம்பெனி

தொடர்புடைய ராஜு எனும் எனது நண்பரிடம் பணம் கொடுத்து பில்டெக்ஸ் மெட்டல் கிரீன் வாங்கித் தரச் சொன்னேன். அவர் அக்கம்பெனியை அணுகிக் கேட்ட போது, ‘‘பச்சை எங்களுக்கு வேண்டும். கருப்பு வர்ணம் வேண்டின் தருகிறோம்’’ என்று அறிவித்தார்கள். அப்போது நான் அவருடனில்லை.

“பச்சைதான் எனக்கு வேண்டும்” என்றேன். “அதற்கென்ன வாங்கித் தருகிறேன்” என்றார். “எப்படி?” என்றேன். “ஸ்டோர் கீப்பர் எனது சினேகிதன். கருப்பு பெயின்டிற்குப் பணம் கட்டி சீட்டை அவனிடம் கொடுத்தால் நமக்கு வேண்டிய பச்சை (வண்ண) டின்னைக் கொடுத்து விடுவான். இரண்டும் ஒரே விலைதான்” என்றார்.

அம்மாற்றம் எனக்குப் பிடிக்கவில்லை. மேனேஜரிடம் சொல்லி வாங்கச் சொன்னேன். ‘‘அது என் பொறுப்பு, உங்களுக்கு ஏன் அந்தக் கவலை’’ என்றார். முன்னதாக பணத்தைக் கொடுத்து விட்டதால் மறுக்க முடியாமல் மனம் வருந்தினேன். சாமான் கிடைக்காமல் போகவேண்டுமென்று நினைத்தேன். இப்படி வேலை செய்து வாழவேண்டுமா என வருந்தினேன். மாலை ஆறு மணி அளவில் சென்ட்ரல் ரெயில் நிலையம் வந்தேன். மன வேதனை. மேலும் மேலும் அமைதி யின்றி வருந்தினேன். வேலூர் மினர்வாவில் ஏறக்குறைய ஒன்பது மணியளவில் உணவுண்ண அமர்ந்தேன். உணவை உடம்பும் மனமும் ஏற்கவில்லை. (உண்ணாமல்) வைத்து விட்டு சீதாராம் முதலி தெருவில் உள்ள எனது அறைக்குச் சென்று படுத்தேன். உறக்கம் வாராது மனவேதனைப் பட்டேன். சிறு மயக்கத்தில் அசரீரி போன்று ஓர் வசனம் தோன்றிற்று, ‘மகா லஷ்மியே பூலோகத்தில் சீதையாகப் பிறந்து மாயையால் அந்தப் பாடுபட்டாளென்றால் சீவனாகிய நீ எம் மாத்திரம்?’ என்று. உடனே மனமடங்கி நன்றாய்த் தூங்கினேன். மறுநாள் முதல் சீவனாகிய நீ எம்மாத்திரம் என்ற இழிநிலையைத் தாங்க முடியவில்லை. அதுகாலம் சீதையைப் பற்றிய நினைவு கிடையாது. இறைவன், சீவன் என்ற ஏற்றத் தாழ்வை நான் விரும்பவில்லை. என்னைத் தாழ்த்தும் உலக வாழ்வையும்,

என்னையும் மதிக்கவில்லை. மதியாது வாழ்ந்தேன். அது காலம் சீவக்காட்சியும் அருள் காட்சியும் கண்டேன்.

சீவனை கண்ட வெளியாகவும், அருளை அகண்ட வெளியாகவும் அறிவிக்க அறிபவனாகவும் கண்டேன். அவ்வுண்மை விபூதியின் பெருமையென்று இது காலம் உணர்ந்து அதற்கப்பால் ஆன்மவெளியென்றும், அதற்கப் பால் அருள்வெளியென்றும் செஞ்சுடர்ப் பூவால் உணரப் பெற்றேன். நான் ஆன்மாவாய் வாழ்வது அருள் சோதி விருப்பம் அல்லாது என் விருப்பமில்லை.

சீவனாகிய நீ எம்மாத்திரம் என்றதனால் வந்த விளைவே இது.

9. உண்மை விளக்கம்

சென்னை மாநகரில் பதினேழு வயதளவில் மலைச் சாலையில் மாடியின்மேல் வெளியில் தோன்றிய விளக்க இலக்கை அடைய முயன்ற காலை வேலூர் வர நேர்ந்தது. அதுகாலம் உடம்பை வளர்க்க தொழிலையும், உயிரை வளர்க்க அறிவையும் வேண்டி, தொழிலையும், மெய்யறிவையும் நாடி, ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகாலம் காடுகளிலும், மலை களிலும், குகைகளிலும், நாட்டுப் புறங்களிலும் ஞானம் நாடி அலைந்தேன்.

அந்தக் காலங்களில் வேதம் கற்றவர்களையும், யோகிகளை யும், ஞானிகளையும் உபாசகர்களையும், துறவிகளையும், பக்தர்களையும், மற்றும் பலரையும் கண்டேன். துறவி வேடம் பூண்டவர்களையும், நிர்வாணி களையும் கண்டேன். ஆசை யற்ற அனுபவ ஞானிகளைக் காணோம். மாயசால வித்தை களைச் செய்வோர் துறவி களாக இருக்கக் கண்டேன். வேடம் பூண்டு துறவித் தொழில் செய்வோராய் அறிந்தேன். வேதாந்தம், சித்தாந்தம் பேசுவதன்றி அந்நடையனுபவம் பெற்றாரைக் காணோம். நான் கொண்ட விளக்க உண்மை யைப் பெறவல்லார் எவரும் காணேன். உலகறி வேதமும், தோன்றிய வேதமும் சார்ந்தாரன்றி ஊன்றிய வேதம் அறிந்தாரில்லையென வெறுங்கையோடு வந்தேன். அதுகாலம்

இறையருள் உயிர் வெளியில் விளங்கக் கண்டேன். அது தொடங்கி உயிர் வாழக் கண்டேன். சிறு வயதில் பெற்ற விளக்கம், விளங்கப் பெற்றுக் கொண்டிருக்கின்றேன். இதனை விளக்கவல்லார் முன்னம் இல்லை என்பதை அறிவித்து, ஓதி உணர முடியா உண்மையை ஓதாது, எழுதா ஏட்டில் எழுதுவதைப் படிக்கின்றேன்.

10. நான் கண்ட அனுபவம்

இவ்வுலகின் கண் சீவர்கள் அஞ்ஞானிகளாய், தீயகுணங் களின் இருப்பிடங்களாய், கூடி வாழவொண்ணா தீயோர் களாய், பேராசைப்பித்தர்களாய் ஆனபடியால் அவர்களுடன் கூடி வாழ விரும்பாத நான் உலகாசையற்று, இவர்களுடன் ஏன் வாழவேண்டுமென்று விருப்பற்று சூழ்நிலையும் சரியின்மை யால், ஆன்ம அறிவைப் பெற்றும், திருவருள் மகிமை கண்டும், இவர்களுடன் வாழ மனமின்மையால், இத்தூல உடம்பை இழந்து விடலாம் என்று எண்ணி வருந்தினேன். நின் கருணைப் பெருநெறியால் கட்டுப்பட்டு உமது விருப்பப்படி ஆகட்டும் என்று சகித்து இருந்தேன். அதுகாலை ஓர் உண்மையை உணர்த்த உணரப் பெற்றேன். அது யாதெனில், இவ் வுடம்புடன் கூடிய சீவன் துன்புறுவதையும். இம்மாய போக மற்ற ஆன்மா திருவருளின் முன் அறிவாய் மௌனமுற்றிருப் பதையும், திருவருள் ஆன்ம வெளியில் அறிவிப்பதையும் ஒரே சமயத்தில் இம்மூன்றும் விளங்கக் கண்டேன். அதுவே தனிப்பெருங்கருணை என்று உணரப் பெற்றேன். அதுவே சமூக வண்ணம். துன்பம் தரும் தூல மாய உடம்புடன் வாழும் சீவனையும், மாய துக்கமற்ற ஆன்ம மௌனவெளியையும், ஆன்மவெளியில் அருள் அறிவிக்கும் அறிவையும் ஒருமுகமாய்க் காட்டிய காட்சி யெனக் கண்டேன். அறிவறிந்த காலமுதல் அறிந்தறியாத அற்புத அறிவையும் என்ற சொல்லின் ஒன்றினிலே கேட்டறியாத, கண்டறியாத, பெற்றறியாத, அனுபவித்தறி யாத, அற்புத அனுபவங்களையும் ஒருங்கே விளங்க விளக்கியும் உணர்ந்தேன். மூப்பினர் இளமை பெறுதலையும், இறந்தவர் உயிர்த்தெழுதலையும், இதனால் அறியப் பெறுகின்றேன். எனவே பொறுத்திருந்து பார்ப்போம்.

இதனை அறிவிக்க எனக்கு சிறிதும் விருப்பமில்லை யெனினும் உங்கள் நன்மைக்காக இரக்கத்தால் தெரிவித்தேன் என்று அறிக.

11. அருள் விளக்கம்

சித்திரக் கலையிலும் சிற்பக் கலையிலும் ஆர்வம் கொண்ட நான் 1937 பிற்பகுதியில் சென்னையில் தொழில் பயில வந்தேன். அதுகால் சூழ்நிலை சரியின்மையால் அந்நிலை மாறியது. மவுன்ட் ரோடு பாரத் பில்டிங் எதிரில், தர்க்காவுக்கு தெற்கில், உள்ள மொட்டை மாடியில் சில நாட்கள் தங்க நேர்ந்தது. அது சமயம் இரவில் தனித்திருப்பேன். வான வெளியையும், நட்சத்திரக் கூட்டங்களையும், சந்திரனையும், பகலில் தோன்றும் சூரியனையும், பூமியில் காணும் உயிர்களையும், என்னையும் கண்டு அதிசயிப்பேன். அவ்வுண்மை காண விழைவேன். ஒரு நாளிரவில் தோன்றியக் காட்சியில், இது கால்வரை வந்த பெரியோர்கள் பெற்றப் பேறே முடிவாயின் அதனை நான் பெறுதல் வேண்டும். அவர்கள் பெற்றது போக பெறாதது ஒன்று எஞ்சி இருக்குமாயின் அதை அவர்களும் அறியார்; நானும் அறியேன்; அதை நீ அறிவாய். அதை நான் பெறுதல் வேண்டும். அதுவே எனது இலட்சியம் என்று கூறினேன். தொழிலையும், வாழ்வையும் அதற்கு உடந்தையாக ஏற்றவாறு அமைத்துக் கொண்டேன். அவ்வுண்மையைத் தேடி காடுகளிலும், மலைகளிலும் அலைந்தேன் பல வருடகாலம். அதுகால் கண்ட துறவிகளின் அறிவில் புதுமையொன்று மில்லை. காடு மலை சுற்றுவதையும், துறவிகளைக் காண்பதை யும் விட்டு விட்டேன். என் இலட்சியத்துக்கு ஏற்றவாறு என்னில் அறிவிக்க அறிந்தேன். சுத்த சன்மார்க்கம் ஒன்றே தமிழுடன் ஊன்றி உதவி உருவே ஒலியாய் ஒலியே ஒளியாய், ஊன்றிய மாமறையே ஒளியாய், ஒளியே தமிழாய், தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி யென்று ஒளிர்கிறது. இதுகால் வரை எவரும் பெறாத பேறென்று இது கால் பெற்ற பேற்றினால் அறிவிக்க அறிந்து கொண்டேன். ஆதிப் படைப்பெனும் தோன்றிய மாயப் படைப்பில் தோற்றுவித்த சீவக்காட்சியை நான் எனதென்று கொள்ளாமல், இந்திரிய,

கரண, சீவ ஒழுக்கத்தால் மாயையை அழிக்கும் அருள் விளக்கம் பெற்று, பேரும் ஊருமற்று, அநாதி அருள் படைப்பில் தோன்றிய உகர ஆன்ம உயிரை, உயிர்க்குயிராம் அகர அருட் பெருஞ்சோதி விளக்கத்தால், ஆன்மபேதமற்று, அருட் பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி திருவண்ண விளக்கம் பெற்றமையால், அகர உகர பேதமற்ற அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ் சோதி திருவண்ண நிலை சேர்ந்த அனுபவ முன் தோன்றும் விளக்கமே இது கால் வரை எவரும் பெறாத பேறு என உணர்த்தப் பெறுகின்றேன்.

12. சித்திவளாக திருப்பணி விழைவு

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாக இவ்வழியில் வருங்கால் சிதம்பரம் வந்து அவ்வூரில் இரவு தங்கி காலையில் சித்திவளாகத்துக்கு நெடுஞ்சாலை வழியாகவும் குறுகிய வழியைக் கடந்தும் நடந்து வருவேன். இரவு வடலூரில் தங்கி காலை பன்ருட்டி வந்து வருவேன். அது கால் ஒருநாள் மாலை ஆறு மணி அளவில் சித்தி வளாகத்தில் (பூசகர்)சக்கரவர்த்தி பணி புரியுங்கால் என்னைக் கண்டதும் தீப ஆராதனை செய்து பின் கதவைத் திறந்து உள்ளே அழைத்து வந்தார். அச்சமயம் வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட திருக்கதவைத் திறக்கச் சொன்னேன்; மறுத்தார். "எவரெவரோ கதவைத் திறக்கச் சொன்னால் திறந்து காட்டுகிறீர்; உரியவன் சொன்னால் மறுக்கின்றீர்" என்று பலத்த குரலில் ஒலித்தேன்.

இப்போது நிர்வாகிகள் திறக்கக் கூடாது என்று கட்டளை யிட்டுள்ளார்களே என்று தெரிவித்து அதிர்ந்து சாவிக் கொத்தைக் கீழே வைத்து "எடுத்துத் திறந்து பாரும்" என்றார். எனது பேச்சில் மயங்கினார். சிறிது நேரம் நின்றேன். "பார்த்து விட்டேன், சாவியை எடுத்துக் கொள்ளும்" என்றேன். சாவி வைத்த இடமே ஒளி விளக்கு ஒளிரும் தூபி. அவரின் வீட்டுக்கு வரும்படி என்னை அழைத்தார்.

தீபத்துக்கு எதிரில் வெளி நாட்டு அழகிய வண்ண வண்ணச் செடிகள். பிரின்சாப்வேல்ஸ் போன்ற பல வகைச் செடிகள். தீபத்தின் எதிரில் பலகைக்கட்டிலை வைத்து உட்காரச்

சொன்னார். பால் அருந்த வேண்டினார். பசியில்லை என்றேன். நடுநிசி வரை அருட்பாவைப் பாடிப் பாடி அழுதார். வீட்டிற்குள் சில இடங்களைக் காட்டினார். அத்தீப ஒளியைப் பார்த்துக் கொண்டே படுத்திருந்தேன். விடியற்காலை எழுந்து போய் வருவதாகக் கூறினேன். என்னைப் பார்த்துக் கொண்டே நின்றார். படுத்திருந்த இடமே இப்போதுள்ள தூபி. சாவிக் கொத்தை வைத்த இடமே உள்ளே உள்ள தூபி.

சாவிக் கொத்தை வைத்த அவரின் இடத்தை விலைக்கு வாங்கப் பெற்றது. மற்றொரு சமயம் மூன்றாம் நாள் விழாவுக்கு வந்து பார்க்கையில் வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட அறையில் ஒட்டடைகள் தொங்கியதைக் கண்டு வருந்தினேன். பள்ளிக் கூடத்தில் காரை விட்டு வந்தமையால் காரை எடுத்துச் செல்ல வந்தோம். அப்போது மேட்டுக்குப்பம் சீனிவாசனும், ஞானதுரையும் அங்கு வந்தார்கள். “திருவறையைச் சுத்தம் செய்யக் கூடாதா?” என்று கேட்டேன். “அதற்கு உரியவர் வருங்கால் எல்லாம் சரியாகிவிடும்” என்றார்கள். “உரியவர் நாமாய் ஏன் இருக்கக் கூடாது?” என்றேன். அடுத்த தைப்பூசமே விழாக்கோலம் பூண்டு, நான்கு நாட்களுக்கு மூலதனம் வைக்கப்பட்டு, கோவிலில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தினம் எரியும் தூபி விளக்குக்கும் மூல தனம் உள்ளது.

❑ ❑ ❑

அருட்திரு யோகானந்த சாமிகள் அருளிய அருள் விளக்கங்களில் சில...

சுத்த சன்மார்க்கம்

அகர அருட்பெருஞ்சோதியை முதலாகக் கொண்டு தனிப்பெருங்கருணையாகி அதுவே தமிழாகி, உயிரெழுத் தாகி, மெய்யெழுத்தாகி, உயிர்மெய்யெழுத்தாகி, உயிர்த் தெழும் ஒளியாகி, ஒலியாகி, அருவ உருவாகி, அவ்வான்மாவே மெய்யாகி, அருளொளி விளங்கும் உயிர் மெய்யாகி, அதன் முன்னிலையில் தோன்றும் ஆதி பகவனாகி, அம்மாயத் திரையில் தோன்றிய உயிர் வாழும் அகமாய உலகமாகி, அண்ட பிண்ட சீவனாகி, இரவு பகலாகி, பிறப்பு இறப்பாகி, உறக்கம் விழிப்பாகி, நினைவு மறதியாகி, அருவ ஒளியாகி, ஒலியாகி, உருவ எழுத்தாகி, ஒலியாகி, ஒளியாகி, உலகெலாம் உணர்ந்தோதும் ஆன்ம ஒலி கேட்டு, சீவ விதேக முத்தனாகி, ஆன்ம அறிவொளியில் கலந்து, மாமாயத்திரையகன்று, திருச்சிற்றம்பல நடங்கண்டு, ஆன்ம அறிவெளியில் மௌன முற்று, செஞ் சுடர்ப் பூ வழங்கப் பெற்று, திருவருள் நடங் கண்டு, ஊன்றியத் தமிழ் மாமறைப் பெற்று, குரு துரியம் கண்டு, சுத்த சிவ துரியம் கடந்து, அருள் சோதி நடங் கண்டு, மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்ந்து, அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ்சோதி ஆவதுவே ஊன்றியத் தமிழ் தந்த மாமறை. அதுவே சுத்த சன்மார்க்கம்.

பூர்வ ஞானம்

அநாதிப் படைப்பின் ஆன்ம உயிர் அருள் விளக்கத்தால் மாமாயையைத் தோற்றுவித்து ஆதிப்படைப்பாதித் தொழில் செய்து, அவை, கன்ம, மாமாயை இணைத்து அநாதி ஆன்ம உயிரின் முன்னிலையில் தோற்றுவித்து அந்நிலையைச்

சீவனாக்கி ஓரறிவாதி சீவிகளை உலகளவாய் வாழச்செய்து இந்த சீவிகளுக்கு அநாதிப் படைப்பின் ஆன்மாக்களே கடவுளர் களாய் ஆதி அந்த அகம்புறமாய் ஐந்தொழிலதிபர்களாய் சீவர்களை வாழ்விக்கும் மாயப்படைப்பே ஆதிப் படைப்பு. இதுவே ஆதிபகவன் முதற்றே யுலகு. இங்குச் சீவகாருண்ய நிறைவின்மையால் துன்பமும் நிலையாமை என்னும் மரணமும் பிறப்பு இறப்பாய் மாமாய இகபர வாழ்வாய்ச் சுழன்று சலித்த உயிர்களுக்கு ஓய்வளிக்க ஆணவத்தை மறைக்கத் தோன்றிய உலகறிவேதம் தந்து பூர்வ ஆன்ம அணுவறிவாய் ஆணவ ஆதிசீவனைக் கலக்கச் செய்து மௌனவெளியில் விட்டனர். இதனையே நான்மறை என்றனர். இதுவே சீவான்மாவின் முத்தி நிலையம். இதுவே சடாந்தமெனும் பூர்வ ஞானம். இவர்களுக்கு அருள் வசமாகாது. அதனால் மேலும் நிலையறியாது தடைப் பட்டார்கள். உலகைக் கடந்தாரன்றி உண்மையறிந் தாரில்லை. மேற்கண்ட நிலை சீவ அறிவு ஆன்ம அறிவைப் பெற்ற நிலையேயன்றி வேறல்ல. இந்த அத்துவிதம் மாயை யின் மேலே வெளியான நிலையன்றி அநாதி இயற்கை உண்மையைப் பெற்ற நிலையன்று.

உத்தர ஞானம்

ஆதி பகவன் முதற்றே யுலகாய ஆதிமாய வல்லவன் பூட்டிய உலகாய மாயப் பூட்டைத் திறந்து அனாதி ஆன்ம அருள் வாழ்வைப் பெற்று வாழ ஆதி மாயத்திரை வாழ்வை அகற்ற வேண்டும். அகற்றும் திறவுகோலே சீவகாருண்யம். அதைச் செய்ய செஞ்சுடர்ப் பூவைப் பெற வேண்டும். அப்பூவை இது தருணம் வழங்கப் பெற்றோம். அது காட்டும் மார்க்கமே சுத்த சன்மார்க்கமெனும் ஊன்றிய வேதம். அதுவே உத்தர ஞானம். அம்மார்க்கமே புறப்புற இந்திரிய ஒழுக்கம், புறக் கரண ஒழுக்கம், அகப்புற சீவ ஒழுக்கம், அக ஆன்ம ஒழுக்கம். அதனால் பெறுவதே இரக்கம். அதனால் செய்வதே சீவகாருண்யம். செய்வதால் ஆவதே இரக்கமே உயிர். பெறுவது முத்தேக சித்தி. அச்சித்தியால் பெற்ற வாழ்வே மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு. அவ்வாழ்வை அளிப்பதுவே

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி சமூக வண்ணம். அதனால் பெறுவதே அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ் சோதி திருவண்ண அனாதி அனக அகர நிலை சேர்ந்த அனுபவம்.

சில அபூர்வ விளக்கங்கள்

ஆதிப் படைப்பும் அநாதிப் படைப்பும் ஒன்றல்ல. முன்னது மாயைப் படைப்பு. இவரின் முடிவு முத்தி. பின்னது அருள் ஞானப் படைப்பு. இவரின் முடிவு நிலை சேர்ந்த சித்தி அனுபவம். ஆதிப் படைப்பினர் இறந்தவர். அநாதிப் படைப்பினர் உயிர்த்தெழுந்தவர். முன்னவர் உயிருடன் இறந்தவர். பின்னவர் உயிருடன் எழுந்தவர். அகரத்தை இழந்த உகரமும், அகரத்தை பெற்ற உகரமும் அறிக. உயிருக்கு உயிராம் அகரமே தமிழ். அருட்பெருஞ்சோதி.

சீவன் பொய்யாகி, ஆன்மா மெய்யாகி, அருள் உயிராகி, அருட்பெருஞ்சோதி உயிருக்கு உயிராகும். உயிருடன் உயிர் இணைவதுவே அகர முதல். அதுவே உயிருக்கு உயிரெனும் உயிரெழுத்து. அதுவே அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ் சோதி. அவ்வுண்மையே ஊன்றிய தமிழ் மாமறை.

சீவன் வெளியானால் உலகம் பொய்யாகும். அதுவே மாயத்திரை நீக்கம். ஆன்மா வெளியானால் உயிருக்கு மெய் யாகும். அதுவே தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் சோதி. அருள் வெளியானால் உயிர் எல்லாம் ஒருயிரென அகர முதலாகும். அதுவே அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ் சோதி.

இக பர பொய்யே மாய சீவ வாழ்வு. பரம்பர மெய்யே ஆன்மவெளி. தனிப்பெருங்கருணையே அநாதி அனக வாழ்வு. இக பர பொய்யை மெய்யெனும் சீவனைப் பொய்யெனச் செய்வதே பரம்பர சிதம்பரம்.

அநாதி அருள் படைப்பே ஆன்மா. ஆதி மாயக் காட்சியே சீவன். ஆன்ம வெளியில் அருள் விளங்குவதே ஆன்ம ஞானம். அருள்வெளியில் ஆன்மா விளங்குவதே அருள் ஞானம்.

மாயத்திரையகற்றுவதே சீவன்முத்தி. மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வதே அருள் வாழ்வு. அதுவே அருளாட்சி.

நினைவே மறதி. மறதியே மூடம். மூடமே மாயை. மாயையே வாழ்வு. வாழ்வே சாவு. சாவே பிறப்பு. இதுவே சுழல். சுழலே நாம். இதில் அறிவென்பது ஏது? இதுவா? இல்லை. சொன்னதைச் சொல்வதும் செய்ததைச் செய்வதுமா நான்?

தோன்றி மறையும் இப்பொய்யுலக வாழ்வை மெய்யென நம்பிட மூடமெனும் மதியீனம் வேண்டும். இவ்வுண்மையை உள்ளபடி அறிவதுவே அறிவு.

புறம் மாயை, அகம் அறிவு, அனகம் அருள். புறம் சீவன், அகம் பிரம்மம், அனகம் தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் சோதி.

ஆதியில் தோன்றிய மாயையையும், அந்தத்தில் தோன்றிய வெளியையும், அநாதியில் ஊன்றிய அருளையும் ஒன்றெனக் காண்பதுவே தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் சோதி.

சடத்தைச் சித்தாக்கிச் சடமாகுவதே பிறப்பும், வாழ்வும், இறப்பும். அருளறிவின் முன் தோன்றும் நிழற்காட்சியே இம்மூட அறிவு. சீவர்களின் செயலால் மடமை அறிவென செயல்பட்டு அழிவதைக் காண்பதே அறிவு. உகரத்தை அறிவது அகரமன்றி உகரமல்ல. அறிவிப்பது அகரம். அறிவிக்க அறிவது உகரம். அறிவிக்கும் அகரமும், அறிவித்தால் அறியும் உகரமும் ஒன்றென ஒன்றிய ஒன்றே அருட்பெருஞ்சோதி. அறிவித்தும் அறியாத மகர உகரமே மாயை.

நான் எதுவரை உலகம் அதுவரை. நான் யாரென்று நான் அறியேன். அதுவே மாயை.

ஆசையெனும் அசைவைப் போக்கி சைவமெனும் மௌனம் பெற வேண்டும்.

இரவு பகலாய சீவஅறிவுடன் கூடாதிருத்தலே பசித்திரு. ஆன்ம அறிவாயிருத்தலே தனித்திரு. அருளறிவைப் பெற்று இருத்தலே விழித்திரு.

ஆதி புற மார்க்கம் விதி வழி (புறம்). அந்த அக மார்க்கம் மதி வழி. அநாதி அனக மார்க்கம் அருள் வழி.

சீவனாய பசு பதியாய ஆன்மாவை அடைவதுவே சீவன் முத்தி. அதுவே ஆத்மநாதன். சடாந்தம் சீவன்முத்தி நிலை. அந்தாந்தம் குருதுரிய நிலை. அந்தாந்த அதீதம் சுத்த சிவ துரிய நிலை. சுத்த சிவ துரியாதீதம் தனிப்பெருங்கருணை அருட் பெருஞ்சோதி. அதீத அதீதாதீதம் அருட்பெருஞ்சோதி அருட் பெருஞ்சோதி.

இரவு பகலற்ற இடமே ஆன்மாவின் இருப்பிடம். இரவே சீவனின் உருவம். பகலே அறியாமை. மரணமே அவ்வுண்மை. இதுவே மாயை. சீவன் முத்தி பெறாது ஆன்ம அறிவு விளங்காது. மாயத்திரை நீக்கமே ஆன்ம ஞான மௌனப் பெரு வெளி. அருள் சோதி நடமே மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு.

இறந்தவரே புறவினத்தார். உயிருடன் இறந்தவரே அகவினத்தார். உயிருடன் எழுந்தவரே அனகர். இவர்களே முறையே உலகறி வேதியர், தோன்றிய வேதியர், ஊன்றிய வேதியர். இவர்களை உலகரென்றும், சடாந்த சன்மார்க்க ரென்றும், சுத்த சன்மார்க்கரென்றும் அறிக.

பிறப்பைத் தடுப்பவர் சன்மார்க்கர். இறப்பை இல்லாது செய்பவர் சுத்த சன்மார்க்கர்.

உயிரை எழச் செய்வது உயிரெழுத்து. மெய்யை எழச் செய்வது மெய்யெழுத்து. உயிர்மெய்யை எழச் செய்வது உயிர்மெய்யெழுத்து. உயிர் மெய்யை அறியாத நாம் அறிவிலி களே. மாய போக மாந்தர்க்கு உயிரில்லை, மெய்யில்லை, உயிர் மெய்யில்லை. எல்லாம் பொய்யே. அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார் என்னுடையரேனு மிலர் என்றதாலறிக.

சுழுத்தியே இரவு. சாக்கிரமே பகல். இரவே மாயத்திரை. பகலே அதில் தோன்றும் மாயக் காட்சி. மூவாசை, மூவினை, மும்மலமே பகலாய உலகக் காட்சி. அக்காட்சிகளைத் தோன்றாமல் அறிவெளியில் அடக்குவதே மெய்யறிவு. மாயையால் வந்த துன்பம் தவிர்த்த இடமே இரவு பகலற்ற இடம். அவ்விடமே பொற்சபையும் சிற்சபையும்

பொன்னம்பலமும் சிற்றம்பலமும். முன்னம் தனிப்பெருங் கருணை தந்த விபூதியின் பெருமையிது காண்.

அகப் புறம் ஆதிமாய முன்னிலை. அகம் ஆன்ம ஞான இடைநிலை. அனகம் அருள் ஞான மேல் நிலை. அனாதி இயற்கை உண்மை நிலை.

நான் ஆணவ மலம். எனது ஊழ் வினைப் பயன். நானில்லை எனதில்லை. இதுவே மாயத்திரைக் காட்சி.

மாயபோக மாந்தரெல்லாம் பொய்க்காட்சியெனக் காட்டும் பிறப்பையும் இறப்பையும் கண்டும் காணாத சட சித்துக்கள். பிறந்து இறக்கும் பிணங்கள் தோன்றி மறையும் காட்சியே வாழ்வெனும் மாயை. உளது இலதாகுமோ? இறந்தவர் வாழும் வாழ்வே மாய போக மரண வாழ்வு. இலது இலதானால் உளது உளதாகும்.

ஆதி பகவன் முதற்றே யுலகில் வாழும் நான், மாயக் காட்சியென்று தன்னை மதியாது இல்லாதிருப்பதே சும்மாயிரு.

பசித்திருப்பதே அகப்புற சீவ ஒழுக்கம். தனித்திருத்தலே அக ஆன்ம ஒழுக்கம். ஆன்ம ஒழுக்கமே சீவகாருண்யம். அதனால் விழிப்பதே தனிப்பெருங்கருணையைப் பெறுதல். அதனால் வாழ்வதே அனாதி அனக மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு.

அகம் பிரம்மம் என்றும் புறம் மாயை என்றும், மாயையைக் கடந்து அகமெனும் பிரம்ம வெளியில் கலவாது வாழ்வாங்கு வாழ்வதே அனக வாழ்வெனும் மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு. பிரம்மம் எனும் கலப்பிடத்தை வாழ்விட மாக்குவதே அனக வாழ்வு. மாமாயையும் அம்மாயையின் ஐந்தொழிலையும், மாயை கடந்த கலப்பெனும் சடாந்த வெளியையும், ஏழு திரை களாய்க் காட்டி, எட்டாம் நிலையில் அகர அருட்பெருஞ் ஜோதியைக் காண்பதே குருதுரியம். அகர நிலையே சுத்த சிவதுரிய அருட்பெருஞ்ஜோதி. மாயையைத் துக்கமெனக் கண்ட ஞானியர் அதனைக் கடந்து நிற்றலே இன்பம் எனக் கண்டு வெளியில் ஒடுங்கினர். இது கலப்புத்திரை எனக் காணாது தடைபட்டனர். அருட் சோதி தனிப்பெருங்

கருணை யருளால் திருவருள் விளக்கம் தந்து திரையெலாம் அகற்றி தடையெலாம் தவிர்த்து அநாதி இயற்கை உண்மைப் பேற்றினைப் பெற்றோம்.

நினைந்தும், மறந்தும், உறங்கியும், விழித்தும், பிறந்தும், இறந்தும், இரவு பகலாகி இறந்தவர் பிறக்கும் சீவ வாழ்வே மாயக் காட்சி. இக்காட்சியைப் பொய்யெனக் கண்டவரே வாழ்வார். மற்றவரெல்லாம் இரவு பகலெனும் இருளில் சட சித்தாய் தங்களை மாயக் கருவிகளென அறியாது இலதை உளதென்று தோன்றி மறைவார். இரவு பகலை இருளென அறியா மாயையாய நாம் எங்ஙனம் அறிவோம்? பிறப்பதும் இறப்பதும் மாயை. இவ்வாழ்வைப் பொய்யெனக் காண்பதுவே அறிவு. அதுவே நாம்.

நினைவே மறதி. மறதியே மூடம். மூடமே மாயை. மாயையே வாழ்வு. வாழ்வே சாவு. சாவே பிறப்பு. இதுவே சுழல். சுழலே நாம். இதில் அறிவென்பது ஏது? இதுவா? இல்லை. சொன்னதைச் சொல்வதும் செய்ததைச் செய்வதுமா நான்?

நாமே அழிவாயிருக்க நமதென்ன நமது? இவ்வுண்மை அறிந்தவர் வாழ்வென்ன வாழ்வு? எல்லாம் வெளியாகும். இவ்வற்ப வாழ்வை மதித்து எத்தனை எத்தனைத் தோற்றம், எத்தனைக் கடவுள், அவர் செய்த வேதமெத்தனை? அவ்வுண்மை அறிந்தால் ஆசைவருமா? அறியாமையில் தோன்றியது வாழ்வாகுமா? அறிஞர்களின் வாழ்வா இது? இப்பொய்யை மதித்து வாழும் நீயே பொய். ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். உயிர்த்தெழுமின். உனது அவித்தையே சீவன். பிறப்பதும் இறப்பதும் சீவனே. நான் யார்?

கற்பனை மாய வாழ்வில் எங்ஙனம் மனமென நினைந்து வாழ்வேன்? உலகெலாம் மாயை. உறவெலாம் அதுவே. பொய்யை, மெய்யெனும் பொய்யனை நானென்பதென்னே உலகீர். உங்கள் பேச்செல்லாம் பொய்யே. உள்ளதைப் பேசும் ஞானிகள் உங்களின் உறவு கொள்ளார். போகரின் உறவே உலகம். அறிஞரை மூடர் காணார். இந்நரகத்தி லிருந்து விடுபட ஒரே வழி சீவகாருண்யம். போகியர் சீவகாருண்யம் அறியார்.

முன்னம் விபூதி தந்தனர் உலகை அழிக்க. இது தருணம் செஞ் சுடர்ப் பூ தந்தனர், விழித்து வாழ.

மும்மலமெனும் கழிவுமலச் சாக்கடையில் இந்திரிய மாயக் காட்சியில், கரண கன்மத்தால் ஆணவ சீவனின் ஆசை மலவாழ்வே உலக வாழ்வு. கழிமலம் புசிக்கும் மானிடரே மரிக்காது என் செய்வீர், (மா + இடர்) விடமுண்ட நீங்கள்.

ஆதி மல சீவவாழ்வில் சாக்கிரத்தில் சுழுத்தியும், சுழுத்தியில் சாக்கரமும், சொப்பனமும் அழிவதால், அவத்தை அனைத்தும் மாயையே. நினைவில் சுழுத்தியானால் ஆணவம் என் செய்யும்? உலக வாழ்வேது? கர்த்தர்கள் என் செய்வர்? நினைவில் தோன்றும் இவ்வுலகம் நித்தியமா? ஆசையற்றால் வாழ்வேது? இன்ப துன்பமேது? மெய் ஞானிக்கு இரவுமில்லை, பகலுமில்லை, பிறப்புமில்லை, உலகுமில்லை, இல்லாத உலகில் வாழும் வாழ்வா வாழ்வு? அஞ்ஞான உறக்கத்தால் காணும் கனவே இவ்வாழ்வு. இவர்களை எழுப்ப வல்லவரே உயிர் வாழ்வார். அத்தருணம் இத்தருணம் காண். கிடைத்தது வேதம். தனிப்பெருங்கருணை தமிழ்மறை ஊன்றியது காண்.

முன்னுமில்லை பின்னுமில்லை. இடையில் வாழ்வ தென்ன? இவ்வாழ்வே பிறப்பும், இறப்பும். கானல் நீர் போன்றக் காட்சி. எது நான்? என்னை நான் அறியும் வரை நானில்லை. தோன்றிய நான் நானல்ல. பிறந்து இறந்தவன் நானல்ல. இவையாவும் நாம் காணும் மாயக்காட்சியே. இந்நாடகத்தை நடத்துபவர் கர்த்தர்களே. இதுவே இயல், இசை, நாடகம். நாடகத்தில் நடிக்கும் வரை கர்த்தர்களே நம் கடவுளர்கள். இந்நாடகத் தலைவர்களும் நடிகர்களும் அநாதி இயற்கை உண்மைக் கடவுளைக் காணாது இடை வெளியில் தடைபட்டார்.

அன்றாடம் பிறந்து இறக்கும் நாம் பிறப்பு இறப்பின் மூலமறியாது உயிர்வாழ்வதாக நினைந்து, பிறப்பு இறப்பையே வாழ்வாகக் கொண்டு வாழும் இச்சீவக் கூட்டங்களை பிணக் கூட்டங்களென்று எண்ணாது வேறென்னென்று எண்ணுவேன்?

செத்த பிணத்தைச் சுற்றி இனிச் சாகும் பிணங் களெல்லாம் கூடி அழுவதைக்கண்டும், காணாத இவர்களை யாரென்பேன்? இவ்வுண்மையை உணர்ந்து இவ்வுல காசையை விட்டவரே இறந்தவர் உயிர்த்தெழுவர். இவ்வுண்மையை அறிந்தவரே அறிஞர். அவரே சாகாக் கல்வி கற்க வல்லார். கற்றால் மூப்பினர் இளமை பெறுவார்.

ஏதுமல்லா என்னை, ஏதுமல்லா பொருளைப் பூட்டி, ஏதுமல்லா வாழ்வைக் கூட்டி ஏதுமில்லாது செய்வதே மாயை. இதனை நான் எனதென்பது சீவன். ஏதுமறியா என்னை எல்லாமறிவித்து ஏதுமில்லையென்பது ஆன்மா. இச்செயலைச் செய்த கடவுள்களும் தன்னை அறிய முடியாது மௌன வெளியில் அடங்குவது பிரம்மம்.

இந்த உயிருடம்பைத் தானாக நினைத்து உலகை உண்மையென மதித்து உலக போக சுகங்களை இன்பமென எண்ணி, இருளைப் பகலென இறந்து வாழும் இச்சீவக் காட்சியெனும் மாயையை, தோன்றி மறையக் கண்டும் காணாத அறிவென்ன அறிவு? இது இல்லையெனக் காண்பதுவே அறிவு காண்.

தன்னையறிந்தவர் தன்னை மறைப்பர். நமகார மமகார ஆணவ சீவனை நானெனும் மாயையென அறிந்தவர், நான் எனதெனும் தற்போதத்தைத் தோன்றாது செய்வர்.

அ, உ என அருவானால் ஆன்மா. அதுவே சித்து. உ உ என உருவானால், சீவன். இதுவே சட சித்து. கண்களை மூடினால் சீவக் காட்சி. இருள் மயம். கண்களைத் திறந்தால் மாயக் காட்சி. இருளில் ஒளி. இதுவே இரவு பகல் எனும் மாயை. இடையில் கனவு. பகல் காட்சி எனது படைப்பா? இப்படி யிருக்க நானென்ன? எனதென்ன? இதுவே மாயை. நானே மாயையாயிருக்க பொய் என்னிலும் வேறுளதோ? தனிப் பெருங்கருணை இலதாயின் நினது வாழ்வேது? சீவகாருண்ய ஒழுக்கமே பொய்யைப் பொய்யென மெய்யாக்கும். இதுவே மூப்பினர் இளமை பெறுதல். பொய் மெய்யானால் உயிர் மெய்யாகும். அதுவே உயிர்த்தெழல். உயிர் மெய்யானால்

உயிர்க்கு உயிர் தோன்றும். அதுவே அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு.

அவரவர் செயலால் அவரவர் நிலையை அறியலாம். மின்னுவதெல்லாம் பொன்னல்ல. படிப்பதாலும், கேட்பதாலும் பேசலாம். அதெல்லாம் அறிவல்ல, எதிரொலி. அதுவே சடசித்து. அறிவின் செயலே ஒழுக்கம். ஒழுக்கமற்றார் அறிவிலார் காண். அவரின் செயல் இயந்திரச்செயல் எனவறிக. உலக போகங்களை எவ்வளவு பெற்றாலும் அவரும் அவர் பெற்ற பொருளும் பொய்யே. மெய்யறிவு டையார்க்கு மனமில்லை. மனமே சீவ சத்தி. மனமிறக்கக் கற்றவரே கற்பார் அறியாமை யாதென. இருளில் ஒளி தோன்றும். ஒளியில் இருள் தோன்றாது. அதுவே சீவ அறிவும் ஆன்ம அறிவும். ஒளியில் தோன்றும் இருளே இரவு பகலெனும் மாயை. அதுவே திருவருள் முன்னிலையில் தோன்றும் மாயக் காட்சி. அறிவுடன் சொல் கூடி சொல்லுடன் செயல் கூடி ஒன்று பட்டவரே சாத்தியர். வேறுபடின் அறிஞரல்ல.

படித்ததைப் பேசுவதால் அறிஞரல்ல. கற்றவண்ணம் நடப்பதால் அறிஞராவாய். கல்லும் எதிராலிக்கும். கற்றவர் ஞானி. கடந்தவர் மௌனி. உள்ளவர் உளராயின் இல்லார் இலராவார்.

*கல்வெட்டில் இருப்பது பக்குவர்க்கு போதுமானதாகும். படிப்பவர்களோ கேட்பவர்களோ புரிந்து நடக்காது எதிரொலிக்கும் கல்லைப் போல் எதிரொலியாது நடப்பீர்களாக. தற்புகழ்ச்சிக்காக எதிரொலிக்க வேண்டாம். கல்வெட்டு எதிரொலிப்பதே போதுமானதாகும். பக்குவர் புரிந்து கொள்வார். தேடிப் பெறுவதன்றி வலிய வழங்குவதில்லையென்று அறியவும். அது வருவாய் தொழிலல்ல. விளம்பரம் வேண்டாம். அது தானே விளங்கும். பக்குவர்க்கல்லாது அபக்குவர்க்கல்ல. திருப்பணி முடியும் வரை எதிரொலிக்க வேண்டாம். விளம்பரம் பணியை பாதிக்கும். பேர் ஊர்

---

* சுவாமிகள் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் எழுப்பிய திருப்பணி வளாகத்தில் அமைத்துள்ள கல்வெட்டுகளில் காணப்படும் அவரின் அருள்விளக்கங்கள்.

இல்லாத என்னை சந்திக்கு இழுக்க வேண்டாம். பணிசெய்ய வந்தேனல்லாது புகழ் பேச வந்தேனில்லை. மூடங்கள் போகம் வேண்டி துன்புறுத்த செய்ய வேண்டாம். மாய போகிகள் என்னை நாடாதிருக்கவே விரும்புகிறேன். இதை அறிவிருந்தால் அறிவீர்கள்.

படிப்பதால் மட்டும் ஞானியாக முடியாது. படித்த படியில் நடக்க வேண்டும். உணவு என்று சொல்வதாலோ காண்ப தாலோ பசி நீங்கி விடாது. உண்டால் நீங்கும். படித்த படி நடவாதவன் படியாதவனே.

கழி மல நீர் வழி வந்து புகுந்து மல நீருடன் கூடியிருந்து வளர்ந்து மலநீர், வழி வந்து பிறந்து வாழும் நானே மூப்படைந்து இறக்கும் மும்மலமே நானாயிருக்க என்னிலும் கழிக்கும் மலம் வேறுளதோ? மலம் புசித்து வாழும் மலமா மனிதன்? என்னே மதியீனம்? கொடுப்பதும், பெறுவதும், ஆவதும் ஆண் பெண்ணாய மலமெனும் கழிவே. பிறப்பதும் அதுவே, இறப்பதும் அதுவே. பிறவா, இறவா என்னிலே பிறந்து இறக்கும் காட்சியைக் காண்கிறேன்.

பிறக்கும் உயிரும், பிறவா உயிரும் அறிந்தவரே இறவா உயிர். தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதியே சமூக வண்ணம். அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதியே திருவண்ணம். தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி கண்டோமல்லாது அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி ஆனோமில்லை. தோன்றிய உலகறி வேதம் திருக்குறள். திருவருள் முன்னிலையில் தோன்றிய ஆதி நிலை. தோன்றிய வேதம் ஊன்றிய வேதத்தின் முற்பகுதி. அதுவே தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி சமூக வண்ணம். நான் அதுவாய நிலை. ஊன்றிய வேதத்தின் பிற்பகுதி, அதுவே அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ்சோதி திரு வண்ணம். நானற்ற, அதுவே அதுவாய நிலை.

நம்மையறியாது இவ்வுலக வாழ்வை வாழ்வென வாழும் நாம் கருவிகளே. அறியாமையை அறிவெனக் காணும் நாமே அறியாமை. அறிவாயின் இம்மாயப் பொய்க் காட்சி தோன்றாது. சிறு துரும்பும் பஞ்ச கிருத்தியம் செய்யும் என்ற

உண்மை இக பர ஆசைப்பட்டுத் தோன்றி மறையும் திரைக் காட்சிகளாய நாமே மாயை. ஒவ்வொரு ஆன்ம உயிரிலும் முன்னிலையில் மாயத் திரையாய சீவக் காட்சித் தோன்றும். அதுவே நிழல். ஆன்ம அறிவெளியில் அருளொளித் தோன்றில் சீவனாய மாயத் திரைக் காட்சி தோன்றாது போம். அதுவே சீவ விதேக முத்தி. அந்நிலைப் பெற்ற ஆன்ம உயிரே மௌனப் பெருவெளி. அதுவே எழுதா ஏடு. அவ்வேட்டில் எழுதும் எழுத்தே அருள் இயக்கம். அதுவே ஓதாதுணர்தல். அவ் வியக்கமே அருள் நடம். அந்நடமே மரணமிலாப் பேரின்பப் பெரு வாழ்வு. அதுவே அநாதி இயற்கை உண்மை அருள் நடம்.

மரண வாழ்வே மாயை. மாயையை மரிக்கச் செய்யாது வாழ்வது மரண வாழ்வே. இறந்தவன் வாழ்வது வாழ்வா? அல்ல. சட சித்தெனும் மாயை. இறந்தவர் எழுந்து என்ன பயன்? இறந்தவர் வாழ்வே இரவு பகல். இரவே பகலானால் என்னவாகும்? பொய்த்துப்போம். அதுவே நாமாயிருக் கிறோம். இம்மாயத் துன்ப வாழ்வை இன்புறச் செய்து இன்ப துன்பமகற்றுவதே தனிப்பெருங்கருணை.

திருவருள் முன்னிலையில் தோன்றிய இருளாய மாயா சத்தி ஐம்பூதங்களாகி அண்டங்களாகி, பகலாகி, ஆணவம் சீவனாகி, ஓரறிவு முதலாய ஆறறிவு அண்ட பிண்ட சீவனாகி, அருளொளி முன்னிலையில் தோன்றினமையால் பகுத்தறிவாகி, அறிவாகி, விபூதி பெற்று, மெய்யறிவாகி, ஆன்ம அறிவாகி, செஞ்சுடர்ப் பூ பெற்று அருளறிவாகி, அருளாகி, தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி சமூக மரணமிலாப் பேரின்பப் பெரு வாழ்வு வாழ்ந்து திருவண்ணப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வதுவே அருட்பெருஞ்சோதி அருட் பெருஞ்சோதி.

விதிவச வாழ்வனைத்தும் மாய வாழ்வே. விதிவச மான மதியனைத்தும் மூடமே. விதி வசத்தினரனைவரும் அடிமை களே. நாமும் நமதும் பிறர் வசம் உள்ளவரை நாம் அறியாமையே. இதுவே அறிவிலார் என்னுடைய ரேனுமிலர். அடிமையென்பது கீழ்மை. தூல கோள்களும் சூக்கும கர்த்தர் களும் நம்மை ஆட்டிப் படைப்பதென்றால் நாம் யார்? சட சித்தே நாம். அதுவே விதி மதி. இம்மாய சீவவாழ்வை

அழித்தவரே ஆன்ம ஞானி. ஆன்ம அறிவைப் பெற்றவரே அருளறிவைப் பெறுவர். அவரே வாழ்வார். இறந்தவர் வாழ்வே மாயை. அவரின் பிறப்பே இறப்பு. இதுவே ஆதி பகவன் முதற்றே யுலகு.

சடத்தைச் சித்தாக்கிச் சடமாகுவதே பிறப்பும், வாழ்வும், இறப்பும். அருளறிவின் முன் தோன்றும் நிழற்காட்சியே இம்மூட அறிவு. சீவர்களின் செயலால் மடமை அறிவென செயல்பட்டு அழிவதைக் காண்பதே அறிவு. உகரத்தை அறிவது அகரமன்றி உகரமல்ல. அறிவிப்பது அகரம். அறிவிக்க அறிவது உகரம். அறிவிக்கும் அகரமும், அறிவித்தால் அறியும் உகரமும் ஒன்றென ஒன்றிய ஒன்றே அருட் பெருஞ்சோதி. அறிவித்தும் அறியாத மகர உகரமே மாயை.

நான் என்பது ஒரு தோற்றம். என்னைத் தோற்றுவித்தவன் நானல்ல. தோற்றுவித்தவன் கூட்டியப் பொருளால் ஆன பாவனையே நான். வகுத்தவன் வகுத்தபடி அல்லாது நான் தோன்றுவதோ தோற்றுவிப்பதோயில்லை. அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதைக் காண்கிறேன். அவன் செயலால் நானெனும் பாவனை தோன்றி எனதான எண்ணங்கள் பலவாயின. அதன் செயலே வாழ்வாய், வாழ்வே பிறப்பு இறப்பாய், சுழல்கின்ற உண்மையைத் திருவருள் அறிவிக்க அறிந்தேன். அறிவென்பது கண்டதும், கேட்டதும், அனுபவித்ததுமாய காட்சிகளின் பதிவேவென அருள் அறிவிக்க அறிந்தேன். நானே காட்சிப் பொருளாயிருக்கக் கண்டேன்.

நானும், எனதும் மாயையெனக் கண்டபின் ஆசையேது? நானேது? எனதேது? இல்லை, இல்லை, இல்லையே. இதுவே ஆதி பகவன் முதற்றே யுலகு. இதுகாறும் நான் பிறந்ததும், வாழ்ந்ததும், இன்பமும், துன்பமும், மரணமும் மாயையே. அவ்வுண்மை அறிவிப்பே பொன்னம்பல, சிற்றம்பல நடம். தனிப்பெருங்கருணை வழங்கிய விபூதியின் பெருமையே பொன்னம்பலம் சிற்றம்பலம். இதுகால் வழங்கிய செஞ்சுடர்ப் பூவைப் பெற்றால் அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி நடங் கண்டு மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்ந்து அருட்

பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதியென அநாதி இயற்கை உண்மைப் பேற்றினைப் பெற்றிடுவோம்.

இரவில் தோன்றிய பகலும், பகலில் தோன்றிய இருளும் இருளகத்தில் தோன்றிய மருளுமே நாமாயிருக்க அறிவு நம்மில் எங்ஙனம் தோன்றும்?

சீவர்களாய நாம் சடசித்தே. சடசித்துகளாய் தோன்றி மறையும் நாமே இரவு பகலாய மாயக் காட்சி. அறிவாயின் மூடமில்லை. அறிவே அநாதி இயற்கை உண்மை. அதுவே திருவருளின் இயக்கம். திருவருள் முன்தோன்றிய ஆதிமாய இரவு பகலாய சடசித்தே மாயத்திரைக் காட்சி. இல்லன வற்றை அல்லனவாக்குவதே சீவன் முத்தி.

இதுவே திருவருள் முன்னிலையில் சிறு துரும்பும் பஞ்ச கிருத்தியம் செய்யும். பிறந்து இறக்கும் சடசித்தே நாம். அருளறிவு பிறந்து இறக்காது. மாயத் திரையை அகற்றினால் மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு வாழலாம்.

ஆதிப் படைப்பாய மாயப் படைப்பே கருணையிலா ஆட்சி. அநாதிப் படைப்பாய தனிப்பெருங்கருணை அருட் பெருஞ்சோதியே அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி.

திருவருள் முன்னிலையில் தோன்றிய மாயக்காட்சியே நிழற் காட்சி. அந்நிழற் காட்சியே புறப்புற இந்திரியக் காட்சியாய், புற கரணக் காட்சியாய், அகப் புற சீவக் காட்சி யாய் தோன்றும். திருவருள் ஒளி நிழற் காட்சி மீது பட்டால் அவ்வொளியில் நிழற் காட்சி மறைந்து போம். அந்நிலையே சீவன் முத்தி. பகல் இரவாகி இரவு பகலாகி, பகலில் நினைவும், இரவில் கனவும் தோன்றும். நினைவின்றி கனவில்லை, நினைவே கனவாய், பகலே இரவாய், இரவு பகலாய்த் தோன்றி மறையும் காட்சியே மாயை. நினைவே மறதியாய், மறதியே நினைவாய், அதுவே வாழ்வாய் வாழும் தன்னைக் கண்டால் வாழ மாட்டோம். அதுகால் நான் இல்லாதுபோம். முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனிய மானவர்களே சீவர்கள். இவர் களே சாதி, சமய, மத, வேத, ஆகம, சாத்திர, புராண, இதிகாச வாசிகள்.

அப்பாழுக்கு அப்பாலாய் இருப்பவர்களே ஆன்மாக்கள். அவர்களே அருளைப் பெற்று வாழும் அனாதி அனகர்கள். ஆன்மாக்கள் அருளைப் பெறாது மறைத்த மாயத் திரைகளே சீவர்கள். இவர்களை முத்தி பெறச் செய்வதே முத்தி யென்பது முன்னுறு சாதனம். சித்தியென்பது நிலை சேர்ந்த அனுபவம்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ வரை இரண்டெழுத்து. ஐ ஒ ஓ ஔ ஃ. ஒரெழுத்தான ஐ யாகி ஒ என ஒன்றி ஓ என ஓங்கி ஔ என ஆவதே ஃ எனும் தமிழ். அகர முதல எழுத்தெல்லாம் அநாதி அகர முதல எழுத்தெல்லாம் ஆவது தமிழ் எனும் அமிழ்தம் ஒரெழுத்து, முற்பகுதி பிற்பகுதி இரண்டும் ஒன்றென அறிவது அத்துவிதம். துவிதமும், அத்துவிதமும் தமிழே. மொழிகளும் தமிழும் ஒன்றல்ல. மொழிவது மொழி. மொழி ஒழிவது மொழி இல்லாது போம். தமிழ் மொழியல்ல, ஊன்றிய மாமறை. தோன்றிய வேதமும், தோன்றிய உலகறி வேதமும் மொழிகளே. திருக்குறள், அகர ஆதி பகவன் முதற்றே யுலகு ஆனதால் வாழ்வு இல்லாது போம்.

அகர முதல எழுத்தெல்லாம் தமிழ் ஆனதால், எழுத்துகள் அழியாது இருக்கும். தமிழின் பெருமையிது. இதுவே தமிழ் அமிழ்தம். இறந்தவரை எழுப்பி வாழவைக்கும். மொழிகளால் எழுந்தவர் இறப்பார்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ . அகரத் தமிழ் ஃ எனும் முடிவில்லா நிலை.

தமிழ்ப் பெருமையை எவரே கண்டார்? கண்டாரும் கிடையாது, விண்டாரும் சொன்னதில்லை.

அஃதானால் அஃதாவார். அஃதே சொல்லும்.

❑ ❑ ❑

முதலாமாண்டு நிறைவு அஞ்சலி

குருவணக்கம்

போகத்தை நாடிப் புழுங்கிடும் மாந்தரை ஞான
யோகத்தைக் காட்டி வுய்வுற வுலகில் மனித
தேகத்தில் வந்துற்றத் திருவே யோகா னந்தமே
சோகத்தைப் பாதச் சுடரால் துடைத்தருள்க குருவே.

இரங்கற்பா

விண்ணில் தோன்றி வியனுல கிருளை
    விலக்குங் கதிர்போல் வந்தசற் குருவே
கண்ணொளி யிழந்த குருடன்கைத் தடிபோல்
    கலங்கிய போதுக் கருத்தொளிக் காட்டி
மண்ணில் வாழும் நெறிதனைச் சுட்டி
    மடமை யொழிய மருந்தினைத் தந்து
எண்ணச் சுமையா லேங்கிய போதும்
    இனிய வுரையா லின்பஞ் சேர்த்தாய் 1

வள்ளல் காட்டிய சுத்த சன்மார்க்க
    வழியினில் சென்று வாழ்ந்து காட்டி
பள்ளம் மேடுறின் சமனாய் நோக்கும்
    பாங்கினைப் பயிலப் பாட மோதி
கள்ள மில்லா வுள்ள மதுவே
    கடவு ளுறையு மிடமென நிறுவி
கொள்ளை வுலகில் கோதறத் தொழிலைக்
    குறியா யாற்றிக் குன்றென மிளிர்ந்தாய் 2

போகாப் புனலை சுத்த வெளியென
    பொருட்படச் சாற்றிப் பொன்றா நெறியாம்
வேகாக் காலை யூன்றிய மறையென
    விளங்க வைத்து சாவை வெல்வதே

சாகாத் தலையெனச் சான்று சொன்னாய்
சார்ந்தது யெங்கோ செப்புங் குருவே
மாகா தலாலே மாப்பணிக் கொண்டாய்
மறைந்தது ஏனோ மர்மம் யாதோ! 3

தொட்டுக் குறையாய் விட்டப் பணியை
தொடர யெமக்குத் துணையாய் நின்று
கட்டி முடிப்பாய் காலங் கரையினுங்
கரையா வும்புகழ் காலங் கடந்ததே.
ஏட்டினி லில்லா மறைமொழி யெழுதி
யேய்க்கும் மாயைத் திரையினை நீக்கி
வாட்டுந் துயரை வாழ்வாய் மாற்றி
வாழ்ந்த குருவே வாழ்க வாழ்கவே. 4

ஆக்கியோன்

வள்ளலடியான் சு. முத்துமாணிக்கம்

2-1-2002, ஆயில்யம் நாள் வடலூர் .

❑ அருட்திரு யோகானந்த சுவாமிகளின் நினைவாலயம் 141, ஆரணி சாலை, சங்கரன்பாளையம், வேலூர் (டி.கே.எம். பேருந்து நிறுத்தம்) என்னும் முகவரியில் அமைந்துள்ளது. அங்கு நாள்தோறும் வழிபாடு நடைபெற்று வருகிறது.

❑ சுவாமிகளின் சுத்த சன்மார்க்க விளக்கங்கள் சில, அவர் மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் அமைத்த திருப்பணி வளாகத்தில் கல்வெட்டு களாக அமைக்கப்பட்டுள்ளன. அவை, புத்தக வடிவிலும் வெளி வந்துள்ளன. அந்தப் புத்தகமும் சுவாமிகள் அருளிய சுத்த சன்மார்க்க விளக்கம் (4 பாகங்களும்) யோகானந்த சுவாமிகள் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவை சித்தி வளாகம் (மேட்டுக்குப்பம்) யோகானந்த சுவாமிகள் திருப்பணி வளாகத்திலும், வேலூர் யோகானந்த சுவாமிகளின் நினைவாலயத்திலும் கிடைக்கும்.

❑ அருட்திரு யோகானந்த சுவாமிகள் அருளிய விளக்கங்கள் யாவும் ஏற்கனவே வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

வலைத்தள முகவரி: https://www.yoganandhaswamigal.org